# பிரசங்கிகளின் இளவரசன்

## Prince of Preachers

## சி.எச். ஸ்பர்ஜன்

## வாழ்க்கை வரலாறு

## Life History



## C.H.SPURGEON

**(19th June 1834 to 31st Jan 1892)**

## முன்னுரை

நான் ஒரு இந்து குடுப்பத்தில் பிறந்தேன். 1974-ல் மருத்துவக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த பொழுது கர்த்தர் கிருபையாக என்னை இரட்சித்தார். ஆனாலும் என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் அதிகமான தோல்விகளையும், போராட்டங்களையும் தொடர்ந்து சந்தித்தது மட்டுமல்லாமல் அநேக ஆவிக்குரிய கேள்விகளுக்கு பதில் அறியாதவனாய், சத்தியத்தில் தெளிவற்றவனாய் தடுமாறிக் கொண்டிருந்தேன். கர்த்தரின் பெரிதான கிருபையினால் 1986 ஆம் ஆண்டு ஒரு கிறிஸ்துவ புத்தகக் கடையில் ஸ்பர்ஜன் எழுதிய **Faith Cheque Book (விசுவாச தின தியானம்)** என்ற ஆங்கிலப் புத்தகத்தை வாங்கி வாசித்தபோது **"கிருபை"** என்பதின் சரியான அர்த்தத்தை புரிந்து கொண்டேன். வேதம் போதிக்கும் கிருபையின் சத்தியத்தைக் குறித்த தெளிவிற்குள் வர ஆரம்பித்தேன். இது மெய்யாலுமே என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பு முனையாக அமைந்தது. கிருபையின் சத்தியத்தைக் குறித்த தெளிவு, வேதத்தைக் குறித்த சரியான விளங்குதலுக்குள் என்னை வழி நடத்திற்று. குழம்பிக் கொண்டிருந்த அநேக கேள்விகளுக்கு பதிலைப் பெற்றேன். **"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"** என்பதை ருசிக்க ஆரம்பித்தேன்.

ஸ்பர்ஜனின் புத்தகங்களானாலும் பிரசகங்களானாலும் வேதத்தையே மையமாகக் கொண்டவைகள். அவைகளை நான் தொடர்ந்து வாசிக்க, வாசிக்க மேலும் கர்த்தருக்குள் வளர தேவன் கிருபை செய்தார். ஆண்டவரின் பெரிதான கிருபையினால் 1989-1990 ல் ஸ்பர்ஜன் ஆரம்பித்த மெட்ரோபாலிட்டன் டேபர்னேகில் ஆலயத்தின் சீர்திருத்த வேதாகமக் கல்லூரியில் படித்து வேதத்தை அது போதிக்கும் கிருபையின் சத்தியத்தை இன்னும் அதிகம் அறிந்துகொண்டேன். இன்றும் அதையே நான் பிரசங்கித்து வருகிறேன். ஸ்பர்ஜனின் வாழ்க்கை எனக்கு ஒரு பெரிய ஆவிக்குரிய சவாலாக இருந்து வருகிறது. இதை வாசிக்கின்ற உங்களுக்கும் அவ்விதமாகவே இருக்கும்மென்று விசுவாசிக்கிறேன்.

**Pastor. Dr.A.David Elangovan**

Reformed Baptist Church

# பொருளடக்கம்


| | | ப.எண் |
|---|---|---|
| 1. இளமைப்பருவம் | - | 4 |
| 2. ஸ்பர்ஜனின் இரட்சிப்பு | - | 8 |
| 3. ஸ்பர்ஜனின் ஆரம்ப ஊழியங்கள் | - | 12 |
| 4. வாட்டர் பீச் சபையின் போதகராய் ஸ்பர்ஜன் | - | 15 |
| 5. லண்டன் மாநகர ஊழியம் | - | 20 |
| 6. லண்டனில் உயிர் மீட்சி | - | 31 |
| 7. மெட்ரோபாலிட்டன் டேபர்னேகில் | - | 37 |
| 8. மெட்ரோபாலிட்டன் டேபர்னேகிலின் அனுதின செயல்பாடு | - | 41 |
| 9. போதகர் கல்லூரி | - | 43 |
| 10. ஸ்பர்ஜனின் மற்ற ஊழியங்கள் | - | 47 |
| 11. இன்பங்களும் துன்பங்களும் | - | 52 |
| 12. ஸ்பர்ஜனின் மனைவியும் அவர்களது பணியும் | - | 55 |
| 13. ஸ்பர்ஜனின் தொடர்ந்த 10 ஆண்டு ஊழியங்கள் | - | 59 |
| 14. ஸ்பர்ஜனின் குணநலன்களும் புத்தகங்களும் | - | 63 |
| 15. விசுவாசத்திற்கான போராட்டம் | - | 67 |
| 16. ஸ்பர்ஜனின் கடைசிவேளை | - | 72 |
| 17. ஸ்பர்ஜனின் பிரசங்கங்கள் | - | 74 |


Reformed Baptist Church

## 1. இளமைப் பருவம்

**சார்லஸ் ஹாடன் ஸ்பர்ஜன் (C.H. Spurgeon)** 1894 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19ஆம் தேதி இங்கிலாந்து தேசத்தில் கொல்விடன் என்ற ஊரில் பிறந்தார். அப்பொழுது அவருடைய தாயாருக்கு வயது பத்தொன்பது. ஸ்பர்ஜன் பிறந்து 14 மாதங்கள் ஆன பின்பு அவருடைய தாயாருக்கு வேறொரு குழந்தை பிறக்க இருந்தபடியால், ஸ்பர்ஜன் அவருடைய தாத்தா(அப்பாவின் தகப்பனார்) வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு வளர்க்கப்பட்டார். தாத்தாவின் பெயர் ஜேம்ஸ் ஸ்பர்ஜன். அவருடைய தாத்தா ஸ்டேம்போன் என்ற இடத்தில் ஒரு சபையின் போதகராகப் பணியாற்றி வந்தார். ஆலயத்தின் அருகில் இருந்த போதகர் வீட்டில் ஸ்பர்ஜன் ஐந்து வயது வரை வளர்ந்தார். ஸ்பர்ஜனின் கடைசி அத்தை ஆன் என்பவர்கள் ஸ்பர்ஜன் வளர்ந்து வந்த அந்த நாட்களில், அனேக ஆவிக்குரிய காரியங்களைக் கற்றுக்கொடுத்து வளர்த்தார்கள். ஸ்பர்ஜன் வளரும் பருவத்தில் அது மிகவும் உதவியாக இருந்தது.

ஸ்பர்ஜன் மிக சிறிய பையனாக இருந்த பொழுதே அவருடைய தாத்தாவின் புத்தக அறைக்குச்சென்று அங்கிருந்த புத்தகங்களை எடுத்து பார்த்துக்கொண்டிருப்பார். ஜான் பனியன் எழுதிய மோட்சப் பிரயாணம், இரத்தச்சாட்சிகள் போன்ற புத்தகங்களில் இருந்த படங்களை மணிக்கணக்காக உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருப்பார். அவர் ஐந்து வயதாயிருந்தபோதே, அவைகளை அவருடைய இருதயத்தின் ஆழத்தில் நன்கு பதிந்தன. ஸ்பர்ஜன், குடும்ப ஆராதனையில் வேதாகமத்தை மிகத்தெளிவாகவும், நிறுத்தியும் வாசிப்பார். ஸ்பர்ஜன், அவருடைய தாத்தா சபை மக்களோடு ஆவிக்குரிய காரியங்களைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கும்பொழுது அல்லது ஆலோசனை கொடுத்துக் கொண்டிருக்கும்பொழுது, கூடவே உட்கார்ந்து உன்னிப்பாய் ஆவலுடன் அதை கவனித்துக்கேட்பார்.

ஒரு சமயம் அவருடைய தாத்தாவின் சபை அங்கத்தினர் தாமஸ் ரோட்ஸ் என்பவர், ஒரு சாராயக் கடையில் புகை பிடித்துக்கொண்டு மது அருந்திக் கொண்டிருந்த பொழுது, அந்த வழியாய் சென்ற ஸ்பர்ஜன், தன் விரல்களை அவருக்கு நேராக நீட்டி “எலியாவே!

Reformed Baptist Church

இங்கே உனக்கு என்ன வேலை? ஒரு சபையின் அங்கத்தினனாய் இருந்துக்கொண்டு தேவனை அறியாத மக்கள் மத்தியில் இவ்விதமாய் காணப்படுகிறாயே! நீ உன் போதகரின் இருதயத்தை உடைக்கிறாய். நான் உன்னைக் குறித்து வெட்கப்படுகிறேன். நான் ஒரு போதும் என் போதகரின் இருதயத்தை இவ்விதம் உடைக்கமாட்டேன்" என்று சொல்லி கடந்து சென்று விட்டார். இதை கேட்ட தாமஸ் ரோட்ஸ் என்ற அந்த மனிதர் தன் இருதயத்தில் ஆழமாய் குத்தப்பட்டார். அந்த இடத்திலேயே பீர் கப்பையும், புகை போக்கியையும் கீழே வைத்துவிட்டு தனிமையான ஒரு இடம் நோக்கிச் சென்றார். தேவனுக்கு முன்பாக தன்னை முற்றிலும் தாழ்த்தி மன்னிப்புக்கோரி மன்றாடி ஜெபித்தார். அந்த நாளிலிருந்து அவர் வாழ்க்கை முற்றிலும் மாறிற்று. அவர் மறுபடியும் தன் பழைய வாழ்க்கைக்கு ஒருபோதும் திரும்பவேயில்லை. சபையில் ஒரு நல்ல உதவி ஊழியராக எழும்பி சபைக்கு அதிக உதவியாய் செயல்பட்டார்.

ஸ்பர்ஜன் ஐந்து வயது முடிந்தபின் அவருடைய பெற்றோர்களிடத்தில் அழைத்து வரப்பட்டு அங்கு வளர்ந்தார். அப்பொழுது ஸ்பர்ஜனுடைய அப்பாவும், அம்மாவும் 'கோல் செஸ்டர்' என்ற இடத்தில் வசித்துக் கொண்டிருந்தார்கள். ஸ்பர்ஜனின் அப்பா, நிலக்கரி வியாபாரம் செய்யும் ஒரு கம்பெனியில் குமாஸ்தாவாக வேலை செய்து வந்தார். அதோடு கூட அவர்கள் வசித்து வந்த இடத்திலிருந்து ஒன்பது மைல் தூரத்தில் இருந்த சபையின் போதகராக பணியாற்றி வந்தார். இந்த இரண்டு வேலைகள் மத்தியில் அவருக்கு நேரம் கிடைப்பது மிக அரிதாக இருந்தது. ஸ்பர்ஜனுக்கு ஜேம்ஸ் என்ற சகோதரனும், எலிசா, எமிலி என்ற இரண்டு சகோதிரிகளும் இருந்தார்கள். ஸ்பர்ஜன், அவர்களை கூட்டி வைத்து சிறு வயதிலேயே அவர்களுக்கு பிரசங்கிப்பது உண்டு.

Reformed Baptist Church

அந்த நாட்களில் அரசாங்கப்பள்ளிகள் கிடையாது. தனியார் பள்ளிகள் மட்டுமே இருந்தன. அதில் பணம் கட்டி படிக்கவேண்டும். ஸ்பர்ஜன் முதலாவது மிஸஸ்.குக் அம்மையார் நடத்தி வந்த ஒரு சிறு பள்ளியில் சேர்க்கப்பட்டார். ஸ்பர்ஜன் நன்கு படிக்கிறவராய் மாத்திரமல்ல, எப்பொழுதும் அப்பாவின் புத்தக அறைக்குச்சென்று மணிக்கணக்காக அனேக ஆவிக்குரிய புஸ்தகங்களை வாசித்து தேவனுடைய சத்தியங்களை அறிந்துகொண்டார். ஒரு விடுமுறையில் ஸ்பர்ஜன், அவருடைய

தாத்தாவின் வீட்டிற்கு சென்று இருந்த பொழுது அங்கு ரிச்சர்ட் நில் என்ற ஒரு மிஷ்னரி வந்திருந்தார். அவர் இந்தியாவிலும், ரஷ்யாவிலும் கர்த்தருக்கென்று பணிசெய்து வந்த ஒரு நல்ல தேவ மனிதன். ஸ்பர்ஜன் ஒவ்வொரு நாளும் குடும்ப ஜெபத்தில் வேதத்தை மிக ஆழமாகவும், தெளிவாகவும் வாசிப்பதை கேட்டு **“இந்த சிறிய பையன் ஒரு நாளில் திரளான மக்களுக்கு தேவனுடைய சத்தியத்தை போதிக்கிறனவனாக கர்த்தர் எழுப்புவார்”** என்று சொன்னார்.



ஸ்பர்ஜனுடைய தாயார் ஒரு நல்ல தெய்வ பக்தியுள்ள ஜெபிக்கும் ஸ்திரீ. பிள்ளைகளுக்காக அதிகம் ஜெபித்தும், அவர்களை கர்த்தருக்குள் பக்தியாய் வளர்ப்பதிலும் கருத்தாய்க் காணப்பட்டார். ஸ்பர்ஜனின் தகப்பனார் ஒரு முறை வாரத்தின் மத்தியில் கூட்டம் நடத்தும்படியாக, அவர் ஊழியம் செய்யும்படியான கிராமத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். போகும் வழியில் அவர் தன்னுடைய இருதயத்தில், தன்னுடைய குடும்பத்திற்கு தான் நேரம் கொடுக்காமல் அலட்சியப்படுத்திக் கொண்டிருக்கிறேனோ என்ற உணர்வினால் குத்தப்பட்டு, தன்னுடைய வீட்டிற்கு திரும்பி வந்தார். வீட்டில், ஹாலில் ஒருவரும் காணப்படவில்லை. அப்பொழுது மாடிக்கு மெதுவாய் சென்ற பொழுது அறைக்கதவு உள்தாழிடப் பட்டிருந்தது. ஸ்பர்ஜனின் தாயார் பிள்ளைகள் அனைவரையும் கூட்டிவைத்து அவர்களுடைய இரட்சிப்புக்காக மன்றாடி ஜெபித்துக் கொண்டிருப்பதைக் கேட்டார். தன்னுடைய மனைவி குடுபத்தின் பொறுப்பில் இவ்விதம் உண்மையுள்ளவளாய் இருப்பதை உணர்ந்து, மறுபடியும் கூட்டங்கள் நடத்தும்படியாக மனதிருப்தியோடு திரும்பிச் சென்றார்.

ஸ்பர்ஜன் தன்னுடைய பக்திக்குரிய வாழ்க்கைக்கு அவருடைய தாய் பெரிதான பங்கு வகித்திருக்கிறார்கள் என்று பிற்காலத்தில் அனேக முறை சொல்லியிருக்கிறார். அவருடைய தாயார் பிள்ளைகளுக்கு வேதத்தை வாசித்தும், அதை வியாக்கியானப்படுத்திச் சொல்லியும், போதித்தும் அவர்களுடைய ஆத்துமாவைக் குறித்து அடிகடிப் பேசுவதுமுண்டு. ஒருமுறை ஸ்பர்ஜன் அவருடைய தாயார் முழங்கால்படியிட்டு

Reformed Baptist Church

கரங்களை அன்பாக ஸ்பர்ஜனின் தோள்கள் மேல் வைத்து, **'தேவனே என் மகன் உமக்கு முன்பாய் ஜீவனுள்ளவனாகக் காணப்படுவானாக'** என்று ஜெபித்த வேளையை தான் எப்படி மறக்க முடியும் என்று ஸ்பர்ஜன் சொல்லியிருகிறார். மேலும் ஒருமுறை ஸ்பர்ஜனின் தாயார், **"ஆண்டவரே! என்னுடைய பிள்ளைகள் தொடர்ந்து தங்கள் பாவங்களில் ஜீவிப்பார்களானால் அவர்கள் அறியாமையினால் அவ்விதம் ஜீவிப்பதில்லை. அவர்கள் கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ள தவறுவார்களானால், நீயாயத்தீர்ப்பின் நாளிலே என்னுடைய சொந்த ஆத்துமாவே அவர்களுக்கு எதிராக சாட்சியிடும்"** என்று ஜெபித்த ஜெபம் ஸ்பர்ஜனின் இருதயத்தையும், மனசாட்சியையும் ஆழமாய் குத்திற்று. ஸ்பர்ஜன் பத்து வயதாயிருக்கும்பொழுது ஸ்டாக்வெல் ஹவுஸ் ஸ்கூல் என்ற இன்னொரு பள்ளியில் சேர்க்கப்பட்டார். இந்த பள்ளியில் நான்கு வருடங்கள் படித்தார். ஸ்பர்ஜன் பதினான்கு வயதாயிருக்கும்பொழுது மெய்ட்ஸ்டோன் என்ற விசாயப்பள்ளியில் சேர்க்கப்பட்டார். ஸ்பர்ஜன் கணக்கு பாடத்தில் நல்ல திறமையுள்ளவராய்க் காணப்பட்டார்.

Reformed Baptist Church

## 2. ஸ்பர்ஜனின் இரட்சிப்பு

1849 ஆம் ஆண்டு ஸ்பர்ஜன் நியூ மார்க்கெட் என்ற இடத்திலிருந்த ஒரு பள்ளியில் சேர்ந்தார். அப்பொழுது அவருக்கு வயது 15. அந்த பள்ளியில் அவர் ஒரு பகுதிநேர ஆசிரியராகவும், மாணவராகவும் சேர்ந்தார். இந்த காலங்களில் ஸ்பர்ஜனின் உள்ளத்தில் அநேக ஆவிக்குரிய போராட்டங்கள் இருந்தன. அவை ஏறக்குறைய பல வருடங்களாக காணப்பட்ட போராட்டம் என்று சொல்லலாம். பாவத்தைக்குறித்த உணர்வும், இரட்சிப்பைக் குறித்த வாஞ்சையும் தொடர்ந்து உள்ளத்தில் காணப்பட்டன. அவர் பிற்காலத்தில் இதை குறித்து சொன்ன பொழுது இவ்விதமான பாவத்தின் கொடுமையை உணரும்படியான உணர்வைக் கடந்து போவதைக் காட்டிலும், ஏழு வருடங்கள் கடுமையான, கொடிய வியாதியைக் கடந்துபோவது சுலபமாக இருக்கும் என்று எண்ணியது உண்டு என்று சொல்லியிருகிறார்.

தேவனுடைய பிரமாணங்கள் அவரை பயமுறுத்துவது போல காணப்பட்டன. இரட்சிப்பைப் பெரும்படியாக தான் எதையாகிலும் செய்ய வேண்டும் என்ற உணர்வு அவரை ஆட்கொண்டிருந்தது. இரட்சிப்பைப் பெரும்படியாக தன்னுடைய முதுகில் சவுக்கடி பெறுவதாக இருந்தாலும், கடினமான யாத்திரை மேற்கொள்வதகாக இருந்தாலும் அதைச் செய்ய ஆயத்தமாய் இருந்தார். ஆனால் சிலுவையில் அறையுண்ட இயேசுவை, இரட்சிப்புக்காக எல்லாவற்றையும் செய்து முடித்த அவரை, முற்றிலும் விசுவாசித்து சார்ந்து கொள்ள முடியாதவராக தடுமாறினார். இவ்விதமான போராட்டத்தில் அனேக ஆண்டுகள் கடந்து சென்றார்.

டிசம்பர் 1849 ஆம் ஆண்டு அவர் படித்து வந்த நியூ மார்க்கெட் பள்ளியில் விஷக் காய்ச்சல் பரவ ஆரம்பித்ததால் பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டது. அப்பொழுது கோல்செஸ்டரில் இருந்த தன் வீட்டிற்கு ஸ்பர்ஜன் திரும்பி வந்தார். ஸ்பர்ஜன், அவர் பெற்ற இரட்சிப்பின் அனுபவத்தை குறித்து இவ்விதம் எழுதுகிறார், “ஞாயிற்றுக்கிழமை கடுமையான பனி அதிகமாய் படர்ந்திருந்ததினால் நான் வழக்கமாய்செல்லும் ஆலயத்திற்குச் செல்லமுடியவில்லை. ஆகவே நான் ஒரு குறுக்குப்பாதையில் திரும்பி



Reformed Baptist Church

மிகவும் அருகில் இருந்த ஒரு எளிய சிறிய மெத்தடிஸ்ட் ஆலயத்திற்குள் சென்றேன். அந்த ஆலயத்தில் 12 முதல் 15 பேர்கள் அமர்ந்து இருந்தார்கள். பனியின் நிமித்தமும் அந்த நாள் வரவேண்டிய போதகர் அங்கு வரமுடியவில்லை. ஆகவே ஒரு மெலிந்த உருவம் கொண்ட மனிதர் பிரசங்கிக்கும்படியாக பிரசங்க பீடத்திற்குச் சென்றார். அவர் தோற்றத்தை பார்க்கும் போது அவர் அதிக கல்வி இல்லாத ஒரு எளிய மனிதர் என்பதும், செருப்பு தைக்கிறவராகவோ அல்லது துணி தைக்கிறவராகவோ இருந்திருக்கக் கூடும் என்று காணப்பட்டது.

அவர் எழும்பி நின்று ஏசாயா 45:22 ஆம் வசனத்தை வாசித்தார். **"பூமியின் எல்லையெங்கும் உள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்"** என்று வாசித்தார். அவர் அதை சரியாக உச்சரித்து வாசிக்கவில்லையென்றாலும் ஸ்பர்ஜனுக்கு அந்த வசனத்தில் ஒரு இரட்சிப்பின் நம்பிக்கையை உணர முடிந்தது. பிரசங்கித்தவர் இவ்விதமாய் பிரசங்கித்தார், "இது மிகவும் சுலபமாய் விளங்கிக்கொள்ளக்கூடிய ஒரு வசனம். 'நோக்கிப்பார்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. நோக்கிப்பார்ப்பதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. உன்னுடைய கைகளையோ கால்களையோகூட செயல்படுத்த வேண்டிய அவசியமில்லை. அதற்காகத் கல்லூரியில் சென்று படிக்க வேண்டிய தேவையுமில்லை. நீ மிகப் பெரிய முட்டாளாக இருக்கலாம். ஆனாலும் நீயும் நோக்கிப் பார்க்க முடியும். யார் வேண்டுமானாலும் நோக்கிப்பார்க்கலாம். ஒரு குழந்தையாக இருந்தாலும் நோக்கிப்பார்க்கலாம். மேலும் அந்த வசனம் என்ன சொல்லுகிறது? **"என்னை"** நோக்கிப்பாருங்கள். உங்களில் அநேகர் உங்களையே நோக்கிப்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி பார்ப்பதில் பிரயோஜனம் ஒன்றுமில்லை. உன்னில் நீ எந்த ஆறுதலும் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால் இப்பொழுது **"என்னை நோக்கிப் பார்"** என்று **இயேசு** சொல்லுகிறார். பெருந்துளிகளாய் இரத்தம் வழியும் என்னை நோக்கிப்பார்! சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் என்னை நோக்கிப்பார்! மரித்து அடக்கம் பண்ணப்பட்ட என்னை நோக்கிப்பார்! மறுபடியும் உயிர்த்தெழுந்த என்னை நோக்கிப்பார்! பரலோகம் சென்ற என்னை நோக்கிப்பார்!

Reformed Baptist Church

பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிற என்னை நோக்கிப்பார்! ஓ! ஏழைப்பாவியே ! என்னை நோக்கிப்பார்! என்னை நோக்கிப்பார்!

ஏறக்குறைய 10 நிமிடங்கள் இவ்விதமாய் பேசிவிட்டு, அந்த பிரசங்கி தன் கண்களினால் என்னையே உற்று நோக்கி "வாலிபனே! நீ நிர்ப்பந்தமாய் காணப்படுகிறாய். என்னுடைய இந்த வசனத்திற்கு இப்பொழுதே கீழ்ப்படி. அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய் இல்லையென்றால் நீ வாழ்நாள் முழுவதும், மேலும் உன் மரணத்திலும் நிர்பந்தமானவனாகவே இருப்பாய்." இவ்விதம் சொல்லி அந்தப் பிரசங்கி தன கைகளை உயர்த்தி **"வாலிபனே இயேசுவை நோக்கிப்பார்! நோக்கிப்பார்! நீ செய்ய வேண்டியது ஒன்றுமேயில்லை. நோக்கிப்பார்த்துப் பிழைத்திரு"** என்று பிரசங்கித்தார். தொடர்ந்து ஸ்பர்ஜன் இதைக்குறித்து எழுதிருக்கிறார். "நான் உடனே இரட்சிப்பின் வழியைக்கண்டேன். அந்தப் பிரசங்கி தொடர்ந்து என்ன சொன்னார் என்பதை என்னால் கேட்க முடியவில்லை". 'நோக்கிப்பார்' என்ற அந்த ஒரே சிந்தை என்னை முற்றிலும் ஆட்கொண்டது. 'நோக்கிப்பார்' என்ற அந்த வார்த்தை எனக்கு மிகவும் இனிமையானதாகக் காணப்பட்டது. மேகமானது என்னை விட்டு அகன்றது. இருள் என்னைவிட்டு உருண்டோடிற்று. நான் எழுந்து இயேசுவின் இரத்தத்தைக் குறித்துப்பாட என் உள்ளம் துடித்தது. எளிய விசுவாசத்தால் அவரை மாத்திரமே நோக்கிப் பார்த்தேன். இனிமேலும் சந்தேகமில்லை.

Reformed Baptist Church

**காயத்தில் ஓடும் இரத்தத்தை**

**விசுவாசத்தால் கண்டேன்**

**எந்தனை மீட்ட நேசமே**

**எனது வாழ்வின் மையமே.**



என் வாழ்வில் என் இரட்சகரின் பாதத்தை பற்றின அந்த நாளை என்னால் ஒருக்காலும் மறக்க முடியாது. என்னை இயேசுவின் சிலுவையண்டை வழிநடத்தின அந்த வசனத்துக்கு நான் செவி கொடுதேன். அந்த நாளின் மகிழ்ச்சியை நான் சொல்லித்தீராது. நான் மன்னிக்கப்பட்டேன்! நான் மன்னிக்கப்பட்டேன்! கிருபையின் சின்னமானேன்! இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட ஒரு பாவி! என் சங்கிலிகள் முறிப்பட்டன. பரலோகத்தின் பிரஜையானேன். உளையான சேற்றிலிருந்தும், பயங்கரமான குழியிலிருந்தும் தூக்கியெடுக்கப்பட்டு கன்மலையின் மேல் என் பாதங்கள் உறுதிப்படுத்தப்பட்டன."

காலை 10.30 மணிக்கு ஆலயத்தில் நுழைந்ததிற்கும் நான் வீடு வந்து சேர்ந்த 12.30 மணிக்கும் இடையில் என்னில் ஏற்பட்ட மாற்றம் எவ்வளவு மகிமைகரமானது! இயேசுவை நோகிப்பார்த்ததின் மூலமாக நம்பிக்கையற்ற நிலைமையிலிருந்து விடுவிக்கப்பட்டேன். எனது மனிதிலும் முகத்திலும் பெரும்மகிழ்ச்சி காணப்பட்டது. என்னுடைய வீட்டில் என்னைப் பார்த்தவர்கள் "உன்னில் அற்புதமான ஏதோ ஒன்று நடைபெற்றிருகிறதென்று சொன்னார்கள். தங்களுடைய மூத்த மகன் இரட்சிக்கப்பட்டது வீட்டில் அனைவருக்கும் பெரும் மகிழ்ச்சியை கொண்டுவந்தது." ஸ்பர்ஜன் இரட்சிக்கப்பட்ட போது அவருடைய வயது 15. ஸ்பர்ஜனின் இரட்சிப்பு அவருடைய வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்புமுனையாக இருந்தது. அவர் மெய்யாலுமே ஒரு புது சிருஷ்டியாய்க் காணப்பட்டார். நீண்ட நாட்களாக போராடி வந்த குற்ற உணர்வு நீங்கி சமாதானம் அவரை ஆட்கொண்டது.

Reformed Baptist Church

## 3. ஸ்பர்ஜனின் ஆரம்ப ஊழியங்கள்

ஸ்பர்ஜன், தன் இரட்சிப்பின் அனுபவத்திற்குப்பின்பாக, நியூ மார்க்கெட் பள்ளிக்குத் திரும்பி வந்தார். இப்பொழுது அவருக்கு வேதம் மகிமைகரமானதாகவும், ஜெபம் மிக உன்னதமானதாகவும் காணப்பட்டது. 1850 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஸ்பர்ஜன் இவ்விதம் ஒரு தீர்மானம் எடுத்தார். **"மகா உன்னதமானவரும், ஆராய்ந்து அறியமுடியாத தேவனே! என் இருதயத்தை அறிந்தவரும், எல்லாவற்றையும் ஆராய்கிறவருமே! உமது பரிசுத்த ஆவியானவரின் மேல் தாழ்மையாய்ச் சார்ந்தவனாக என்னை உம்மிடத்தில் சமர்ப்பிக்கிறேன். ஜீவ பலியாக என்னை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். உம்முடையதை உமக்கே அளிக்கிறேன். எந்த காலத்திலும் எனக்கென்று இல்லாமல் உமக்கென்று என்னை அற்பணிக்கிறேன். நான் பூமியில் இருக்கு மட்டுமாக உமக்கு பணிவிடை செய்வேன். உம்மை அனுபவித்து உம்மையே நான் என்றென்றைக்கும் துதிப்பேனாக. ஆமென்."**

ஸ்பர்ஜன் வெறுமையாக இவ்விதம் தீர்மானம் எடுத்தவராக அல்லாமல் உடனே தன் பணியை ஆரம்பித்தார். ஒரு சகோதரி வாரத்திற்கு 33 வீடுகளில் கைப்பிரதிகள் கொடுத்துவந்தார்கள். அவர்கள் அதை நிறுத்திவிட்டபொழுது ஸ்பர்ஜன் உடனடியாக அதைச் செய்ய ஆரம்பிதார். தேவனுக்கென்று தான் எதையாகிலும் செய்யாமல் என்னால் சந்தோஷமாக இருக்க முடியாது என்று சொல்ல ஆரம்பித்தார். அதே சமயத்தில் சாத்தானின் தாக்குதல்களையும் அவரால் உணரமுடிந்தது. அநேக சமயங்களில் சந்தேகங்களும், பொல்லாத எண்ணங்களும் அவரைத் தொந்தரவு செய்தன. ஆனால் இப்போதைய போராட்டம் கடந்த கால போராட்டத்தைப் போல தோல்வியாக அல்ல, தேவனின் பெலத்தினால் மேற்கொள்கிறவராய்க் காணப்பட்டார். அனேக சமையங்களில் பவுலை போல **'நிர்பந்தமான மனுஷன் நான்! யார் என்னை இந்த மரண சரீரத்திலிருந்து விடுவிக்கக்கூடும் என்று கதுகிறவராய்க் காணப்பட்டாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோதரிக்கிறேன்'** என்று சொல்லக்கூடியவராய் இருந்தார். ஸ்பர்ஜனின் பெற்றோர்கள் கான்கிரிகேஷனல் சபையைச் சேர்ந்தவர்கள். கான்கிரிகேஷனல் சபையினர் கிருபையின் சத்தியத்தை விசுவாசிப்பவர்கள். ஆனால் குழந்தை மற்றும் தெளிப்பு ஞானஸ்நானத்தைப் பின்பற்றுபவர்கள். குழந்தை

Reformed Baptist Church

ஞானஸ்நானம் வேதத்தின்படி சரியானதல்ல என்றும் மெய்யான இரட்சிப்பை பெற்ற விசுவாசிகள் மாத்திரமே ஞானஸ்நானம் பெற  தகுதியானவர்கள் என்றும் ஸ்பர்ஜன் உணர்ந்தார். மேலும் தெளிப்பு ஞானஸ்நானம் இயேசுவோடு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்தெலுதலைக் குறிகும்படியானதாக இல்லாததால் முழுக்கு ஞானஸ்நானமே வேதத்தின்படி சரியானதென்றும் உணர்ந்தார். அவர் ஒரு குழந்தையாக பெற்றோர்களால் தெளிப்பு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டவராக இருந்தாலும் அது சரியல்ல என்றே சொன்னார். முழுக்கு ஞானஸ்நானம் பெறுவதற்கு விசுவாசமும், மனந்திரும்புதலும் அவசியம் என்பதை கடைசி மட்டும் போதித்தார். ஸ்பர்ஜன் முழுக்கு ஞானஸ்நானம் பெரும்படியாக தன் பெற்றோரின் அனுமதி பெற்று, நியூ மார்க்கெட் ஊரிலிருந்து எட்டு மயில் தூரத்தில் இருந்த ஒரு பாப்திஸ்து சபைக்குச் சென்று, அங்கிருந்த போதகரை தனக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். மே மாதம் 3ஆம் தேதி 1850 ஆம் ஆண்டு அவர் ஞானஸ்நானம் பெற்றார். அது அவருடைய தாயாரின் பிறந்தநாள். அன்று ஸ்பர்ஜன் அதிகாலை எழுந்து இரண்டு மணிநேரம் தன்னை தேவனுக்கு அர்ப்பணித்து ஜெபத்தில் செலவிட்டார். பிறகு எட்டு மைல் தூரம் நடந்து அவர் ஞானஸ்நானம் பெறும்படியான இடத்தைச் சென்று அடைந்தார். போதகரால் அவ்விதமாகவே முழுக்கு ஞானஸ்நானம் பெற்றார். அந்நாளில் ஸ்பர்ஜன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஸ்பர்ஜன் பதினாறு வயது அடைவதற்கு இன்னும் ஒரு சில வாரங்களே இருந்தன. ஞானஸ்நானத்திற்கு பின்பு ஆலயத்தில் நடந்த கூட்டத்தில் ஸ்பர்ஜன் ஜெபித்த பொழுது ஜனங்கள் அதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு மகிழ்ச்சியினால் கண்ணீர் சிந்தினார்கள். அதன் பின்பாக ஸ்பர்ஜன் நியூமார்க்கெட் பள்ளிக்கு வந்துவிட்டார்.

ஸ்பர்ஜன் இரட்சிக்கப்பட்டு நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. அவர் கர்த்தருக்கென்று செய்த பணியிலும் வளர்ச்சியைக் கொண்டிருந்தார். அதைக்குறித்து ஸ்பர்ஜன் இவ்விதம் எழுதுகிறார்.

**"நான் தற்பொழுது ஒவ்வொரு சனிக்கிழமையிலும் எழுபது பேரை தொடர்ச்சியாகச் சந்தித்து வருகிறேன். நான் கைப்பிரதிகளைக் கொடுத்து, அப்படியே சென்று விடாமல் அவர்களோடு**

Reformed Baptist Church

**உட்கார்ந்து ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து பேசுகிறேன். அவர்களில் கர்த்தர் கிரியை செய்கிறார் என்று விசுவாசிக்கிறேன். ஒரு பாவி மனந்திரும்பி வருவாரானால் அது எவ்வளவு மகிழ்சிக்குரியதாக இருக்கும்."** அந்நாட்களில் நியூ மார்க்கெட் ஊரில் இருந்த ஒரு சபையில் ஞாயிறு பள்ளி ஆசிரியராக ஸ்பர்ஜன் கர்த்தருக்கென்று ஊழியம் செய்தார். ஸ்பர்ஜன் தேவனுடைய சத்தியத்தை தெளிவாகப் போதித்ததினால் அனேக பெரியோர்களும் வந்து அதில் கலந்து கொண்டார்கள். அவர் ஞாயிறு பள்ளியில் போதித்த பிரசங்கங்களில் அவர் பெற்றிருந்த பிரசங்க தாலந்தை அதிகமாய் வெளிப்படுத்தினார். அவர் அந்நாட்களில் எழுதின டையரியில் தேவனுக்கென்று அவர் கொண்டிருந்த உன்னத வாஞ்சைகளையும் ஒப்புக்கொடுத்தலையும் அதிகம் காணமுடிகிறது.

Reformed Baptist Church

## 4. வாட்டர் பீச் சபையின் போதகராய் ஸ்பர்ஜன்

1850 ஆம் ஆண்டு கோடைக்காலத்தில் ஸ்பர்ஜன் கேம்பிரிட்ஜ் பட்டணத்திற்கு வந்து மிஸ்டர் லீடிங் என்பவர் ஆரம்பித்திருந்த பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். அப்பொழுது அங்கிருந்த செயின்ட் ஆன்ரூஸ் ஸ்ட்ரீட் சபையில் அங்கத்தினராகச் சேர்ந்தார். அந்த சபையில் ஞாயிறு பள்ளியில் பேசும்படியாக கேட்கப்பட்டார். ஞாயிறு பள்ளியின் பொறுப்பாளராக இருந்த ஜேம்ஸ் வின்டர் என்பவர் ஸ்பர்ஜனின் பிரசங்கத்தைக் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டார். மேலும் அவரை கிராம ஊழியங்களில் உபயோகப்படுத்த வேண்டும் என்று அதிக ஆவல் கொண்டார்.

ஒருநாள் மாலை டவர்ஷாம் என்ற இடத்தில் ஸ்பர்ஜன் பிரசங்கிக்க வேண்டும் என்று ஜேம்ஸ் வின்டர் விரும்பினார். அவர் ஸ்பர்ஜனிடம் ‘நீங்கள் டவர்ஷாம் என்ற இடத்தில் பிரசங்கிக்க வேண்டும்’ என்று சொல்லாமல் ‘ஒரு வாலிபன் அந்த இடத்தில் பிரசங்கிப்பார்’ என்று மட்டும் சொல்லி, ஸ்பர்ஜனை மற்றொரு வாலிபனோடு அனுப்பினார். அன்று அந்த வாலிபன் பிரசங்கிக்கப் போகிறார் என்று ஸ்பர்ஜன் எண்ணிப்போகையில், அந்த வாலிபன், தான் அல்ல ஸ்பர்ஜனே பிரசங்கிக்க சொல்லப்பட்டு இருக்கிறார் என்று சொன்னார். மேலும் அந்த வாலிபன் தான் இதுவரை பிரசங்கித்தது இல்லை என்றும் ஸ்பர்ஜன் ஞாயிறு பள்ளிகளில் கொடுத்த செய்திகளில் ஒன்றை பிரசங்கிக்கும் படியாகவும் சொன்னார். ஸ்பர்ஜன் ஆச்சிரியத்தோடு தாழ்மையாய் அதை ஏற்றுக்கொண்டு கிருபைக்காக கர்த்தரை நோக்கி ஜெபித்தார்.

Reformed Baptist Church

அவர்கள் இருவருமாய் பிரசங்கிக்கும் இடத்தை வந்து சேர்ந்தார்கள். அது ஒரு எளிமையான கூரைக் கட்டிடமாய் இருந்தது. அநேக எளிய விவசாயிகளும் அவர்களுடைய மனைவி பிள்ளைக்களுமாய் அங்கு கூடியிருந்தார்கள். அந்நாளில் ஸ்பர்ஜன் **“அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு அவர் விலையேறப் பெற்றவர்”** என்ற தலைப்பில் கிறிஸ்துவின் மகிமையையும், கிருபையையும் குறித்துப் பேசினார். அதைக் கேட்ட மக்கள் அதிகமாய் ஆசீர்வதிக்கப்பட்டு, அவர் மறுபடியும் வந்து போதிக்கும் படியாகக் கேட்டுக் கொண்டார்கள். அந்நாட்களில் இவ்விதமாக கிராம ஊழியம் 13 கிராமங்களில்

நடத்தப்பட்டு வந்தது. ஸ்பர்ஜன் அந்த கிராமங்களில் பிரசங்கிக்கும் படியாக அனுப்பப்பட்டார். ஸ்பர்ஜன் அந்த கிராமங்களில் 3 முதல் 8 மைல்கல் தூரம் நடந்து செல்வதுண்டு. மழை கோட் அணிந்து கொண்டு கைவிளக்கை பிடித்துக்கொண்டு மாலை, இரவு நேரங்களில் ஸ்பர்ஜன் மிகுந்த மகிழ்ச்சியோடே பிரசங்கிக்கும்படி அந்த கிராமங்களுக்கு சென்று வந்தார். எளிய கிராம மக்கள் மத்தியில் செய்த இந்த ஊழியம் மிகவும் நல்ல பலனை அளிக்கிறதாக இருந்தது.



The Cottage at Teversham where in 1850 C. H. Spurgeon, as a lad of sixteen, preached his first sermon.

1851 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், வாட்டர் பீச் என்ற கிராமத்தில் ஒரு ஞாயிறு ஸ்பர்ஜன் பிசங்கிக்கச் சென்றார். அடுத்த ஞாயிறும் அவர் அங்கு சென்று பிரசங்கித்த பொழுது அந்த எளிய மக்கள் அவரை தங்களுக்கு போதகராக வரவேண்டும் என்று வருந்திக் கேட்டுக் கொண்டார்கள். ஏனென்றால் அந்த சபை போதகரில்லாமல் இருந்தது. தேவன் தன்னை ஊழியத்திற்கு அழைகிறார் என்ற நிச்சியத்தோடும், அந்த கிராமத்தின் தேவை பெரிதாய் இருக்கிறது என்பதையும் கண்ட ஸ்பர்ஜன் அதை தாழ்மையாய் ஏற்றுக்கொண்டார். அப்பொழுது ஸ்பர்ஜனுக்கு வயது 17. அவர் வேலை செய்து வந்த பள்ளியிலிருந்து ராஜினாமா செய்து விட்டு வாட்டர் பீச் சபையின் போதகரானார். மேலும் சுற்றிலும் இருந்த அநேக கிராமங்களில் சென்று தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்தார்.

அவர் வாட்டர் பீச் சபையின் போதகராக பணியேற்ற போது அந்த ஆலயம் ஒரு சிறிய கூரைக்கட்டிடமாய் இருந்தது. அதில் 40 பேர் ஆராதனைக்கு கூடிவந்தார்கள். ஸ்பர்ஜன் செய்யும் பிரசங்கங்களைக் கேட்கும்படி சுற்றிலும் இருந்த கிராமத்திலிருந்து அநேக மக்கள் வர ஆரம்பித்தார்கள். சிறிது காலத்திற்குள்ளாகவே 400 க்கும் அதிகமான மக்கள் தேவனுடைய வார்த்தையை கேட்க கூடிவந்தார்கள். ஆலயத்தில் இடம் போதாதிருந்ததினால் அநேகர் தேவனுடைய வார்த்தையை வெளியே நின்று கேட்டார்கள். தேவனுடைய வார்த்தையை எளிமையாகவும், மக்களின் தேவையை அறிந்து அவைகள் சந்திக்கப்பட ஏற்ற முறையில் செய்யப்பட்ட, ஸ்பர்ஜனின் பிரசகங்கள் அநேகருடைய இருதயத்தைத் தொட்டது. அந்த மக்களைக் கனிவோடும், அன்போடும் நேசித்து அவர்களுக்கு ஊழியம் செய்தார். அந்த முழு கிராமமுமே ஒரு பெரிய மாற்றத்திற்குள்ளாயிற்று. ஸ்பர்ஜன் அந்த கிராமத்தில் ஊழியம் செய்ய வருவதற்கு முன் அது அக்கிரமமும், பாவமும் நிறைந்த ஒரு ஸ்தலமாக இருந்தது. அது இங்கிலாந்தில் மோசமான கிராமங்களில் ஒன்றாய் சொல்லப்பட்டது. அங்கு திருட்டும், பொய்யும், பித்தலாட்டமும் மலிந்து காணப்பட்டன. தேவனுடைய வார்த்தையை ஸ்பர்ஜன் அந்த கிராமத்தில் பிரசங்கித்த பொழுது குடிகாரர்களும், மிக மோசமான குணமுள்ளவர்களும் மனந்திரும்பினார்கள். ஞாயிறு ஆராதனை கூடங்களில் இவ்விதமான மனந்திரும்பிய மக்களால் ஆலயம் நிரம்பி வழிந்தது. அந்த கிராமத்தில் குடிப்பழக்கம் முற்றிலும் அற்றுப்போயிற்று. பகலில் மிகுந்த மகிழ்ச்சியோடு கர்த்தரை துதித்துப்பாடி வேலைகளுக்குச் செல்வதும், மாலையில் அவர்களுடைய குடிசைகளில் தங்கள் பிள்ளைகளோடுங்கூட சத்திய வசனத்தை வாசித்து முழங்கால் படியிட்டு ஜெபிப்பதையும் கேட்க முடிந்தது. ஸ்பர்ஜன் இதைக் குறித்து இவ்விதம் சொல்லுகிறார், *“மாலைகளில் கிராமத்தின் வீதிகளில் ஒரு முனை தொடங்கி மறுமுனை மட்டும் கடந்து செல்லும் பொழுது மக்கள் தேவனை துதித்துப் பாடுவதைக் கேட்க முடிகிறது. தேவனுடைய கிருபையின் புகழ்ச்சிக்காக இதை நான் சாட்சியிடுகிறேன். தேவன் எங்கள் மத்தியில் இவ்விதம் தம்மை வெளிப்படுத்துவது அவருக்கு பிரியமாய் காணப்படுகிறது. இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தினால் ஆத்துமாக்கள் ஆதாயப்படுத்தப்படுவதும் பாவிகளான ஆண்களும் பெண்களும் புதிய ஜீவனை பெறுவதையும் கண்கூடாகப் பார்க்க முடிகிறது”.*

Reformed Baptist Church

வாட்டர் பீச் சபையில் ஸ்பர்ஜன் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்க ஆரம்பித்தவுடன் ஸ்பர்ஜனுடைய தகப்பனாரும், அவருக்கு நெருக்கமானவர்களும் ஸ்பர்ஜன் வேதாகமக் கல்லூரியில் பயிலுவது நல்லது என்று கருதினார்கள். ஆனாலும் ஸ்பர்ஜன் வேதாகமக் கல்லூரியில் தாம் படிப்பதற்கான தேவ வழிநடத்துதல் இருப்பதாக உணர முடியவில்லை. ஆனாலும் தன்னுடைய தகப்பனாரின் உந்துதலினால் அவ்விதம் வேதாகமக் கல்லூரியில் சேர்ந்து படிக்க சம்மதம் தெரிவித்தார். அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

ஸ்பர்ஜன் அதற்கான சம்பவத்தைக் குறித்து இவ்விதம் எழுதுகிறார், *"ரீஜன்ட் பார்க் வேதாகமக் கல்லூரி ஆசிரியர் டாக்டர்.ஆன்கஸ் அந்த சமயம் கேம்பிரிட்ஜ் வந்தார். அவர் புத்தக பதிப்பாளர் மேக்மிலன் என்பவருடைய வீட்டில் அவரை நான் சந்திக்கும் படியாக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. இதைக் குறித்து ஜெப சிந்தையோடு குறிப்பிட்ட நேரத்தில் அந்த வீட்டிற்குச் சென்றேன். அந்த வீட்டில் இருந்த வேலைக்கார பெண்மணி காட்டிய அறையில் அமர்ந்து காத்திருந்தேன். டாக்டர்.ஆன்கஸ் வேரு ஒரு அறையில் இருந்தார். நான் வந்ததை அந்த பெண்ணிடம் அறிவிக்க மறந்துவிட்டாள். இரண்டு மணி நேரம் காத்திருந்து மறுபடியும் நான் விசாரித்த பொழுது டாக்டர்.ஆன்கஸ் எனக்காக காத்திருந்து , லண்டன் செல்ல இரயிலுக்கு நேரம் ஆகிவிட்டதால் புறப்பட்டு சென்றுவிட்டார் என்று அறிவிக்கப்பட்டது. சரி! இதிலும் தேவனுடைய சித்தம் இருக்கிறது என்று அதை ஏற்றுக் கொண்டேன். அதன் பிறகும் அந்தக் கல்லூரிக்கு மனுவை அனுப்பும்படியாக எண்ணிக்கொண்டிருந்தபொழுது அன்றைய தினம் செஸ்டன்டன் என்ற இடத்திற்கு பிரசங்கிக்கும் படியாக ஒரு மரப்பாலத்தின் மேல் நடந்து போய்க்கொண்டிருந்தபொழுது தேவன் என்னோடு தெளிவாய் பேசும்படியான ஒரு சத்தத்தைக் கேட்கிறதாக உணர்ந்தேன். 'பெரிய காரியங்களை தேடுகிறாயா? தேடாதே!' அத்துடன் வேதாகமக் கல்லூரியில் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தை முற்றிலும் விட்டுவிட்டேன் ".*

ஸ்பர்ஜன் வாட்டர் பீச் சபையில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். அந்த சபையில் அவர் செய்த 200 க்கும் மேற்பட்ட பிரசங்கங்களின் பிரசங்க குறிப்புகள்

Reformed Baptist Church

இன்றும் உள்ளன. பொதுவாக ஸ்பர்ஜன் தன்னுடைய பிரசங்க ஆயத்தங்களில் ஆரம்பத்திலிருந்து மிகவும் அதிகமாக கவனம் செலுத்தினார். அவர் பிரசங்கிக்கும் படியான பகுதியை தேவனிடத்தில் ஜெபித்து எப்பொழுதும் பெற்றுக்கொள்ளுவார். அந்த பகுதிகளை அதிக ஜெபத்தோடு கருத்தூன்றி அதிக நேரம் செலவிட்டு படிப்பார். அவைகளிலிருந்து முக்கிய தலைப்பு குறிப்புகளையும் எழுதி அதைப் பிரசங்க பீடத்திற்கு எடுத்துச் சென்று பிரசங்கிப்பார்.

ஆழமான ஜெப ஜீவியத்தை தன் ஆரம்ப காலத்திலிருந்து அவர் கொண்டிருந்தார். அவர் செய்த பிரசங்கங்கள் வெறும் மேலோட்டமான சத்தியங்களை கொண்டதாக அல்ல, வேதத்தின் ஆழமான ஆவிக்குரிய முதிர்ச்சியைப் பெற்ற ஒரு போதகனாய்க் காணப்பட்டார். அதிகாலையில் எழுந்து அந்த நாள் முழுவதும் ஜெபத்திலும், தேவனுடைய வார்த்தையை வாசிப்பதிலும், நல்ல ஆவிக்குரிய புத்தகங்களை படிபதிலும், பிரசங்கிப்பதிலும், ஆத்துமாக்களை சந்திப்பதிலும் தன்னுடைய நேரங்களை செலவிட்டார். மற்ற எதற்கும் அவருக்கு நேரமில்லை. இவ்விதமாக இரண்டு ஆண்டுகள் கழிந்து நடைபெற்ற ஒரு சம்பவம் அவரின் ஊழிய பாதையில் திருப்புமுனையை ஏற்படுத்தியது.

Reformed Baptist Church

## 5. லண்டன் மாநகர ஊழியம்

1853 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கேம்பிரிட்ஜ் ஞாயிறு பள்ளி ஐயக்கிய கூட்டத்தில் பேசும்படியாக ஸ்பர்ஜன் அழைக்கப்பட்டுருந்தார். அந்த கூட்டமே அவருடைய ஊழியத்தின் திருப்பு முனையாக அமைந்தது. ஸ்பர்ஜன் அந்தக் கூட்டத்தில் பேசின பொழுது ஜார்ஜ் கோல்ட் என்பவர் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டார். அவர் லண்டன் நியூ பார்க் ஸ்ட்ரீட் சபையின் டீக்கனான வில்லியம் ஓல்னே என்பவரின் நண்பர். லண்டனில் அந்த திருச்சபையில் சில காலங்களாக போதகர் இல்லாததினால், நல்ல ஒரு போதகரை அவர்கள் தேடிக்கொண்டிருந்தார்கள். ஜார்ஜ் கோல்ட், வில்லியம் ஓல்னே அவர்களை சந்தித்து ஸ்பர்ஜனைக் குறித்தும், அவருடைய பிரசங்கத்தைக் குறித்தும் மகா மேன்மையாக எடுத்துப் பேசினார்.

வில்லியம் ஓல்னே மூலம் லண்டன் நியூ பார்க் ஸ்ட்ரீட் சபையில் ஒரு ஞாயிற்றுக்கிழமை வந்து பிரசங்கிக்க வேண்டுமென்று ஸ்பர்ஜனுக்கு கடிதம் எழுதினார்கள். ஸ்பர்ஜன் அந்த கடிதத்தைப் பெற்று மிகவும் ஆச்சரியப்பட்டு, அவர்கள் தேடும் ஸ்பர்ஜன் நான் அல்ல, நான் 19 வயதான வாலிபன் மட்டுமே என்றும் அவர்களுக்கு மறுகடிதம் எழுதி தெரிவித்தார். ஆனால் லண்டன் சபையினர் ஸ்பர்ஜனுக்கு மறுபடியும் அவர்கள் அழைக்கும் ஸ்பர்ஜன் அவர்தான் என்றும், வேறுயாருமில்லை என்பதை உறுதிபடுத்தி மறுகடிதம் எழுதி தெரிவித்தார்கள். அதன்படி ஸ்பர்ஜன் 1853 டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி ஞாயிறு அன்று அந்த சபையில் பிரசங்கிக்கும் படியாக ஒப்புக்கொண்டார்.

இந்த நியூ பார்க் சபை அநேக ஆண்டுகளாக இருந்து வரும் ஒரு புகழ் பெற்ற திருச்சபை. புகழ் வாய்ந்த பிரசங்கியும் நல்ல எழுத்தாளருமான பென்ஜமின் கீச் இந்த சபையில் அநேக ஆண்டுகள் போதகராக பணியாற்றினார். அடுத்ததாக ஜான் கில் என்ற தேவ மனிதர் வேத சாஸ்திரத்தில் தேர்ந்தவரும் முழு வேதாகமத்திற்கு விளக்கவுரை எழுதினவரும் ஆவர். இவர் 51 ஆண்டுகள் இத்திருச்சபையின் போதகராக பணியாற்றினார். அடுத்ததாக ஜான் ரிப்பன் என்ற திறமையான பிரசங்கியும் அநேகர்

Reformed Baptist Church

உபயோகப்படுத்தும் புகழ் பெற்ற பாட்டு புத்தகத்தை உருவாக்கினவரும் ஆவர். இவர் 63 ஆண்டுகள் இத்திருச்சபையின் போதகராக இருந்து வந்தார். இவர்கள் மூவரும் பாப்திஸ்து திருச்சபைகளில் மிகவும் உயர்வானவர்களாக கருதப்பட்டவர்கள். ஸ்பர்ஜன் இத்திருசபையில் பிரசங்கிக்கும் படியாக டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி சனிக்கிழமையன்றே லண்டன் வந்து சேர்ந்தார். அவர் தங்கும் படி புளும்பறி என்ற இடத்தில் இருந்த ஒரு எளிய தங்கும் விடுதியில் அவருக்கு இடம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த விடுதியில் மாடிக்குச் செல்லும் படியான படிக்கு அருகில் ஒரு கட்டில் மாத்திரமே போடும் படியான ஒரு சிறிய அறை ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. அந்த விடுதியில் அநேக வாலிபர்கள் கிராமப்புற தோற்றமளித்த ஸ்பர்ஜனை மிகவும் ஏளனமாக நோக்கிப்பார்த்தார்கள். அன்று இரவு சாப்பாடு வேளையில் இவ்வளவு பெரிய சபையில் பிரசங்கிக்க ஸ்பர்ஜன் முற்றிலும் பொருத்தமற்றவர் என்ற தொனியில் ஸ்பர்ஜனிடத்தில் பேசினார்கள். அந்த விடுதி, சாலையின் ஓரமாக இருந்தது. இரவில் சாலையில் சென்று கொண்டிருந்த இரைச்சலால் ஸ்பர்ஜன் அன்று இரவு நன்றாக தூங்க முடியவில்லை.

காலையில் எழுந்தவுடன் தனிமையான உணர்வுடன் அந்த பெரிய பட்டணத்தில் காணப்பட்டார். காலையில் ஆயத்தமாகி நியூ பார்க் ஸ்ட்ரீட் சபையின் ஆலயக்கட்டிடத்தை நோக்கி ஸ்பர்ஜன் நடந்தார். அந்த ஆலையம் மிக பிரமாண்டமாக தோற்றமளிக்கும் ஒரு பெரிய கட்டிடமாய் இருந்தது. அது இங்கிலாந்து தேசத்தில் பாப்திஸ்து திருசபைக் கட்டிடத்தில் மிகமுக்கியமான ஒன்றாகும். கெம்பீர தோற்றமளிக்கும் அந்த கட்டிடத்திற்கு முன் எளிய ஸ்பர்ஜன் நின்றார். அதைக் குறித்து ஸ்பர்ஜன் *"ஒரு ஷணநேரம் அந்த கட்டிடத்தின் உயரத்தையும் அதின் அழகான வடிவமைப்பையும் கண்டு அதற்கு முன் நான் ஒன்றுமில்லை என்று அதிசயத்து நின்றேன். இவ்விதமான ஆலயக் கட்டிடத்தில் தொழுது கொள்ளுகிற மக்கள் நிச்சயமாய் பணக்காரர்களும், உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்க்களுமாய் இருப்பார்கள். என்னையும் என் பிரசங்கத்தையும் ஏளனமாக பார்க்க கூடியவர்களாய், எண்ணக்கூடியவர்களாய் இருக்கக்கூடும் என்று எண்ணினேன். எளிய என் சபையான வாட்டர் பீச் மக்களை நினைத்துப் பார்க்கிறேன்."* என்று எழுதியிருக்கிறார். இந்த திருச்சபையில் அநேக நாட்கள்

Reformed Baptist Church

போதகர் இல்லாததினால், அநேக திறமை வாய்ந்த பிரசங்கிகளை அழைத்து போதகர்களாக அமர்த்தும் படி அவர்களுடைய பிரசங்கங்களை அவர்கள் கேட்டு இருந்தார்கள். ஆனால் ஒருவரையும் இரண்டாவது முறையாக பிரசங்கிக்கும் படி அழைத்தது இல்லை.

ஸ்பர்ஜன் அன்று பிரசங்க பீடத்தில் ஏறினபோது 1200 பேர் அமரும்படி இருக்கையுள்ள அந்த ஆலயத்தில் 200 க்கும் குறைவான மக்களே அமர்ந்திருந்தார்கள். ஸ்பர்ஜன் சோர்வுகள் நீங்கப்பெற்ற நிலையில் தன் பிரசங்க உத்திரவாதத்தை உணர்ந்தவராய் யாக்கோபு 1:17 வசனத்தை மையமாக வைத்து பிரசங்கித்தார். **“நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.”** சோதிகளின் பிதாவாக அவருடைய மாறாத தன்மையையும், அவருடைய ஈவுகளையும் குறித்துப்பேசினார். விசேஷமாக அவருடைய சொந்த குமாரன் இயேசுவே அவர் கொடுத்ததே மிகச்சிறந்த ஈவு என்று விளக்கப்படுத்தி பிரசங்கித்தார்.

அவர் இத்திருச்சபைக்கென்று விசேஷித்த விதமாக பிரசங்கியாமல், தான் வழக்கமாக வாட்டர் பீச் திருசபையில் இருக்கும் எளிய மக்களுக்கு பிரசங்கிப்பதை போலவே பிரசங்கித்தார். ஆனால் அதனுடைய பலனோ மிக அதிகமாக காணப்பட்டது. அப்பொழுது ஸ்பர்ஜனுக்கு வயது 19. அவருடைய தோற்றம் வாலிபமாகவும், அவருடைய பிரசங்கமோ முதிர்சியானதாகவும் இருக்கிறது என்று அந்த சபை மக்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் திரும்பி சென்று அன்றைய மாலைக் கூட்டத்திற்கு காலையில் சபைக்கு வராத சபை மக்களையும், பக்கத்து வீட்டுக்காரரையும், நண்பர்களையும் மற்றும் வேறு அநேகரையும் அந்த எளிய கிராமத்து வாலிபனின் பிரசங்கத்தை வந்து கேளுங்கள் என்று அழைத்து வந்தார்கள். மாலைக் கூட்டத்திற்கு இவ்விதம் அநேக புதிய மக்கள் வந்திருந்தார்கள்.

ஸ்பர்ஜன் அந்த நாள் மாலை, வெளிப்படுத்தின விசேஷம் 14:5 ஆம் வசனத்தின் அடிப்படையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தார். **“இவர்கள் தேவனுடைய**

Reformed Baptist Church

**சிங்காசனத்திற்கு முன்பாக மாசில்லாதவர்களாய் இருக்கிறார்கள்."** அந்த நாள் மாலை செய்தியையும் தேவன் அதிகமாய் ஆசீர்வதித்தார். கூட்டம் முடிந்தவுடன் எல்லோரும் கூட்டத்தை விட்டு வெளியே செல்ல மனமற்றவர்களாய் கூட்டம் கூடி, கேட்ட செய்தியின் மகத்துவத்தை குறித்து பேசிக்கொண்டிருந்தார்கள். எல்லோரும் மறுபடியுமாக இந்த வாலிபன் பிரசங்கிக்க அழைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

ஸ்பர்ஜன் தான் ஒரு வேதாகமக் கல்லூரியில் படித்தவரல்ல என்பதை அவர்களுக்கு தெளிவுபட எடுத்துச் சொன்னார். ஆனாலும் அவர்கள் அதைக்குறித்து அக்கறை கொள்ளவில்லை. இதில் தேவ வழிநடத்துதல் இருக்கிறது என்பதை உணர்ந்த ஸ்பர்ஜன் அவர்களின் வேண்டுகோளுக்கு செவிகொடுத்தார். அவ்விதமாகவே 1854 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொடர்ந்து மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் பிரசங்கிப்பதாக ஒப்புக்கொண்டார். இவிதமாக ஸ்பர்ஜனின் பிரசங்கங்களைக் கேட்ட நியூ பார்க் ஸ்ட்ரீட் திருச்சபை மக்களுக்கும் டீக்கன்மார்களும் ஸ்பர்ஜன் அவர்களுக்கு போதராக வரவேண்டும் என்று அழைப்பு விடுத்தார்கள். வாட்டர் பீச் திருச்சபை மக்களுக்கு ஸ்பர்ஜனை விட்டு விடுவது மிகப்பெரிய இழப்பாக இருந்தாலும் இவ்விதமான உன்னத தாலந்தைப் பெற்ற இந்த மனிதனை தங்களுடைய சிறிய சபையில் தங்களுகளுக்கென்று வைத்துக்கொள்ள அவர்கள் விரும்பவில்லை. ஸ்பர்ஜனும் அவர்களை அதிகமாக நேசித்தார். அவர்கள் மேல் கொண்டிருந்த அன்பை தன்னுடைய வாழ்க்கையின் கடைசி நாள் மட்டும் அவர்களோடு கொண்டிருந்த உறவில் வெளிப்படுத்தினார்.

Reformed Baptist Church



NEW PARK STREET CHAPEL, SOUTHWARK.


நியூ பார்க் ஸ்ட்ரீட் திருசபையின் அழைப்பை ஸ்பர்ஜன் ஏற்றுக்கொண்டு மூன்று மாதங்கள் தற்காலிகமாக பணி செய்வதாகவும், சபை மக்கள் விரும்பினால் தொடர்ந்து சபையின் போதகராகவும் இருக்கவும் ஒப்புக்கொண்டார். 1854 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அவ்விதம் தன்னுடைய 19 வது வயதில் லண்டனில் ஸ்பர்ஜன் தன் ஊழியத்தை ஆரம்பித்தார். மூன்று மாத தற்காலிக ஊழியமாக ஆரம்பிக்கப்பட்ட ஊழியம் அவர் மரணம் மட்டும் தொடர்கிறதாய்க் காணப்பட்டது. எதிர்பார்த்த வண்ணமாகவே, ஆலயத்தின் இருக்கைகள் நிரம்பி ஜன்னல் ஓரங்களிலும் ஜனங்கள் ஆராதனையில் உட்கார்ந்திருந்தார்கள். இவ்வூழியத்தைக் குறித்த செய்தி லண்டன் மாநகரம் எங்கும் பரவியது. சபையார் ஸ்பர்ஜனை போதகராக பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்ட போது, ஸ்பர்ஜன் தாழ்மையாக தேவன் தன்னை பிரதிஷ்டை செய்திருக்கிற வேளையில் மனிதர்களால் செய்யப்படும் பிரதிஷ்டையை தான் விரும்பவில்லை என்றும், ஆனால் அதை கட்டாயம் செய்ய வேண்டும் என்று விரும்பினால் அதற்கு தன்னை ஒப்புக்கொடுப்பதாகவும் சொன்னார். சபையார் அதை விளங்கிக்கொண்டு ஸ்பர்ஜனை கட்டாயப்படுத்தவில்லை.

மேலும் தன்னை ‘ரெவரெண்ட்’ என்று அழைத்துக்கொள்ள விரும்பாமல் ‘போதகர்’ என்று அழைக்கபடுவதையே விரும்பினார். ஸ்பர்ஜன் ஒருபோதும் தன்னைக்குறித்து மேன்மையாக எண்ணிக்கொள்ளவேயில்லை. தன்னுடைய சபை மக்கள் தனக்காக அதிகமாக ஜெபிக்க வேண்டும் என்று அதிகம் அதிகமாய்க் கேட்டுக்கொண்டார். அவர் ஒவ்வொரு முறையும் இந்த பெரிய ஊழியத்தில், கர்த்தர் தன்னை காத்து எல்லா ஞானத்தோடும் அவருடைய பணிக்கென்று வல்லமையினால் தரிப்பிக்கப்படவும், சபை மக்கள் தனக்காக ஜெபிக்கவில்லை என்றால் நான் ஒன்றும் இல்லை என்றும் சொன்னார். ஸ்பர்ஜன் தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், சபையிலும் உண்மையான கருத்துள்ள ஜெபத்தை அவர் எப்பொழுதும் கொண்டிருந்தார். ஸ்பர்ஜனின் தனிப்பட்ட ஜெபவாழ்க்கை சபை மக்களும் அதிகமாய் ஜெபிக்க உற்சாகப்படுத்திற்று. ஸ்பர்ஜனின் ஊழியத்தின் மூலம் அநேக ஆயிரக்கணக்கான மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள். இவைகளின் பின்னணியில் ஜெபத்தின் பங்கு பெரிதாகக் காணப்பட்டது. ஸ்பர்ஜனை

Reformed Baptist Church

நோக்கி உங்கள் ஊழியத்தின் இரகசியம் என்ன என்று கேட்ட போது, **“என் சபை மக்கள் எனக்காக எப்பொழும் ஜெபிக்கிறார்கள்”** என்று சொன்னார்.

1854 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஸ்பர்ஜன் அவருடைய 19 வது வயதில் நியூ பார்க் ஸ்ட்ரீட் பாப்திஸ்து திருச்சபையின் போதகராக நியமனம் செய்யப்பட்டார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை கூட்டங்களில் மக்கள் நிரம்பி வழிந்ததினால் ஆலயக்கட்டிடம் விரிவாக்கப்பட வேண்டியது மிக அவசியமாயிற்று. ஆகவே ஆலய கட்டிட விரிவாக்கப் பணி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நாட்களில் கூட்டங்களானது எக்ஸ்டர் ஹால் என்ற பெரிய அரங்கத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்த அரங்கத்தில் 4000 பேர் அமர இருக்கையும், 1000 பேர் நிற்கவும் போதுமான இடம் இருந்தது. இந்த அரங்கத்தில் நடைபெற்ற ஸ்பர்ஜனின் கூட்டங்களுக்கு மக்கள் திரளாய் வந்து நிரம்பினார்கள். ஆலய விரிவாக்கப்பணி முடியும் மட்டும் கூட்டங்கள் இந்த அரங்கத்தில் தொடர்ந்தன. நியூ பார்க் ஸ்ட்ரீட் ஆலயக்கட்டிடம் விரிவாக்கப்பட்ட பின்பாகவும் அதில் அமரும்படியாக 1500 இருக்கைகளும் 500 பேர் நிற்கவும் மாத்திரமே இடம் இருந்தது.



C. H. SPURGEON PREACHING AT EXETER HALL, FEBRUARY, 1855.

ஏற்கனவே எக்ஸ்டர் ஹாலில் நடந்த கூட்டங்களுக்கு வந்த புதிய மக்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்க ஆலயத்திற்கு வந்ததின் நிமித்தம், ஆலயம் விரிவாக்கப்பட்ட

பின்பும் இடம் போதவில்லை. இதின் நிமித்தம் ஞாயிறு காலைக் கூட்டம் மாத்திரம் ஆலயக்கட்டிடத்திலும் மாலைக் கூட்டம் எக்ஸ்டர் ஹாலிலும் நடைபெறும் படியாக ஏற்பாடு செய்யப்பட்டது.

எக்ஸ்டர் ஹாலில் மக்கள் அநேகர் ஆயிரக்கணக்கில் வந்து குவிந்தார்கள். வந்த மக்கள் அனைவருக்கும் அங்கு இடம் போதாததினால் அநேக சமயங்களில் சாலைகளில் நெரிசல் ஏற்படும் அளவுக்கு மக்களின் கூட்டம் காணப்பட்டது. இந்த கால கட்டத்தில் காலரா வியாதி உண்டன் மாநகரம் எங்கும் பரவிற்று. அநேகர் மரித்துப் போய்க்கொண்டிருந்த வேளையில் ஸ்பர்ஜன் வியாதிப்பட்டவர்களுக்காக ஜெபிப்பதிலும், மரித்துப்போன அநேகரை அடக்கம் பண்ணுவதிலும் நேரமின்றி உழைக்க வேண்டியதாயிற்று. இதினிமித்தம் ஸ்பர்ஜன் முற்றிலும் பெலன் இழந்தவராய் காணப்பட்டார். இந்த சூழ்நிலையில் ஸ்பர்ஜன், மக்கள் பேரில் வைத்திருந்த அன்பையும், அவர்களை ஆறுதல் படுத்தும் படியாக மனமுவந்து அங்குமிங்குமாய் சென்று கர்த்தருக்காக கடினமாய் உழைப்பதைப் பார்க்க முடிந்தது. அதே சமயத்தில் ஸ்பர்ஜன் மிகவும் பெலவீனப்பட்டவராயும், அவரே வியாதியினால் தாக்கப்பட்டதைப் போலவும் ஆனார். இவ்விதமாக ஒரு அடக்க ஆராதை முடிந்து வீடு திரும்புகிற வேளையில், ஒரு செருப்புக் கடை முன்பாக ஒட்டப்பட்டிருந்த ஒரு வசனம் அவரை அதிகமாக பெலப்படுத்திற்று. அவர் அந்த வசனத்தை வாசித்து விசுவாசத்தோடு அதை தனக்கு உரியதாக ஏற்றுக் கொண்ட போது, அவரில் காணப்பட்ட அந்த வியாதியும், பெலவீனமும் நீங்கினவராய் புத்துணர்ச்சி பெற்றார். அந்த செருப்புக் கடை முன் எழுதப்பட்ட வசனமாவது, **“எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது” (சங் 91:9,10).** இவ்விதமாக ஸ்பர்ஜனின் முதலாண்டு ஊழியம் அநேக அசீர்வாதங்களோடு கடந்து சென்றது. 1856 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் தேதி ஸ்பர்ஜனுக்கும், சூசன்னாளுக்கும் கர்த்தரால் நியமிக்கப்பட்டபடி திருமணம் நடைபெற்றது. இந்த இணைப்பு மெய்யாலுமே ஆவிக்குரிய பெரிய ஆசீர்வாதத்தை உலகிற்கு கொண்டு வரும்படியான இணைப்பாய்க் காணப்பட்டது. பிற்காலங்களில் இருவரும்

Reformed Baptist Church

சரீரபெலவீனங்கள், வியாதிகள் மத்தியில் கடந்து போன போது, ஒருவருக்கொருவர் கிறிஸ்துவுக்குள் மெய்யான ஆறுதலும் தேறுதலும் பெற்றவர்களாய் காணப்பட்டார்கள்.

ஸ்பர்ஜனின் புகழ் எங்கும் பரவிற்று. அதே சமயத்தில் அவரைக் குறித்து குறை கூறுகிற அநேக மனிதர்களும், பத்திரிக்கைகளும் எழும்பின. ஸ்பர்ஜன் அதிகமாய் படிக்கிறவராக மாத்திரம் அல்ல, எல்லாவற்றையும் குறித்து அறிகிற அறிவையும் கொண்டிருந்தார். வேதத்தில் எந்தப் புத்தகத்தில் இருந்தும் சரியான பகுதியை ஏற்ற நேரத்தில் எடுத்து கையாளவும், அது இருக்கிறவண்ணமாகவே பாராமல் சொல்லக் கூடிய விசேஷித்த கிருபையை பெற்றவரைக் காணப்பட்டார். அவருடைய குரல் 'வெண்கல குரல்' என்று சொல்லப்படும் விதமாகவும், 'மணியோசை' என்று அழைக்கக்கூடியதாகவும் இனிமை வாய்ந்ததாய் காணப்பட்டது. அவருடைய பிரசங்கப் பேச்சில் எந்த செயற்கைத் தன்மையையும் பார்க்கமுடியாது. இயற்கையான தன்மையோடு அவருடைய பிரசங்க பேச்சு காணப்பட்டது. ஒரு தனி மனிதனோடு ஆழமான உணர்வோடும், கருத்தோடும் பேசுகிறதாகவே அவருடைய பிரசங்கம் இருந்தது. அதே சமயத்தில் அவருடைய செய்திகள் எப்போதும் வேதத்தை மட்டுமே மையமாக கொண்டதாய்க் காணப்பட்டது. அவர் போதனை நல்ல ஆணித்தனமான வேதத்தின் மைய போதனையான **'கிருபையின் சத்தியமே'.** அவருடைய பிரசங்கத்தை எந்தக் கோணத்தில் பார்த்தாலும் அதில் கிருபையின் சத்தியமே பிரதிபலிக்கும். கிருபையின் சத்தியம் தேவனின் சர்வ ஏகாதிபத்தியத்தை மையமாகக் கொண்டது.

இந்த சூழ்நிலையில் கூட்டங்கள் நடத்த எக்ஸ்டர் ஹால் மறுக்கப்பட்டதின் நிமித்தம், ஸரிகார்டன் மியூசிக் ஹால் என்ற அதைவிட பெரிய அரங்கை வாடகைக்கு எடுத்து உபயோகப்படுத்த அவர் திட்டமிட்டார். அது மிகவும் பெரிய அரங்கு. அதில் கீழ் தளத்தில் உட்காரும்படியான இருக்கைகளோடு மூன்று அடுக்குத்தளங்களை கொண்டிருந்தது. ஏறக்குறைய பத்தாயிரம் பேர் உட்கார கூடிய அரங்காய் அது காணப்பட்டது. ஒலிப்பெருக்கி இல்லாத அந்த நாட்களில் இவ்வளவு பெரிய கூடத்திற்கு பேசுவது என்பது சாதாரண காரியமல்ல. ஆனாலும் ஸ்பர்ஜன் பெற்றிருந்த விஷேசித்த

Reformed Baptist Church

குரல் வளத்தினால் அந்த அரங்கில் கூடி வருகிற எல்லோரும் அவருடைய பிரசங்கத்தை கேட்க கூடிய விதத்தில் அவர் பேசக்கூடியவராய் இருந்தார்.

அந்த ஸரிகார்டன் மியூசிக் ஹாலில் அவ்விதம் முதலாவது கூட்டமாக 1856 ஆம் ஆண்டு அக்டோபர் 19 அன்று மாலைக் கூட்டத்திற்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. ஸ்பர்ஜன் அதற்கு முன்பு செப்டம்பர் 10 ஆம் தேதி ஹாவன்ஸ் ஹவுஸ் என்ற புதிய வீட்டிற்கு குடிமாறியிருந்தார். அவர்கள் அவ்விதம் குடியேறி 10 நாட்களுக்கு பின்பாக அவருடைய மனைவி சுசன்னாவுக்கு இரட்டை ஆண்குழந்தைகள் பிறந்தன. அவர்களுக்கு சார்லஸ், தாமஸ் என்று பெயரிடப்பட்டது.

அக்டோபர் 19 ஆம் தேதி ஞாயிறு மாலை ஸரிகார்டன் மியூசிக் ஹாலில் முதல் கூட்டத்திற்கு திரளான மக்கள் கூடி வந்திருந்தார்கள். கூட்டம் ஆரம்பிக்கும் நேரத்திற்கு முன்னதாகவே அந்த ஹால் திறக்கப்பட்டதினிமித்தம் அது முற்றிலும் நிரம்பிவிட்டது. உட்கார இடம் கிடைக்காததால் அநேகர் ஜன்னல் ஓரங்களிலும் படிகளிலும் உட்காரந்ததுமல்லாமல் கட்டிடத்திற்கு வெளியே திரளான மக்கள் கூடியிருந்தார்கள். ஸ்பர்ஜன் கூட்டம் நடந்த உள்ளே வந்தபொழுது அங்கு கூடியிருந்த மக்களை பார்த்த பொழுது உள்ளம் உருகினார். அப்பொழுது ஸ்பர்ஜனுக்கு வயது 22. இவ்வளவு திரளான மக்களுக்கு பிரசங்கிப்பது சாதாரண காரியம் அல்ல. ஆனாலும் தேவனுடைய பெலத்தைச் சார்ந்தவராய் கூட்டத்தை ஆரம்பித்து ஆராதனை ஒழுங்கின்படியாய் பாடல்கள் பாடப்பட்டன. ஸ்பர்ஜன் ஜெபிக்கத் துவங்கிய போது மேல் தளத்தில் யாரோ “நெருப்பு” என்று கத்தினார்கள். மேல் தளத்திற்கு கீழே இருந்த வேறொவர் ‘மேல் தளங்கள் கீழே விழுன்கின்றன’ என்று கத்தினார்கள். மற்றுமொரு குரல் ‘கட்டிடமே முழுவதும் இடிந்து விழுகிறது’ என்று கத்திற்று. இந்த கேட்ட மக்கள் பயத்தினால் பீடிக்கப்பட்டு அங்கும் இங்குமாக ஓட ஆரம்பித்தார்கள். ஒரு பகுதியில் படியானது மக்களின் நெரிசலால் உடைய ஆரம்பித்தது.

ஸ்பர்ஜன் தூரத்திலிருந்த படியனாலும் நடப்பதைக் குறித்து அறியமுடியாமல் ஜனங்களை அமைதிபடுத்த முயற்சித்தார்கள். ஆனால் இந்த சூழ்நிலையில் ஒன்றும்

Reformed Baptist Church

அமைதியாகாமல் மேன்மேலும் குழப்பமும் கூச்சலும் அதிகரித்தது. அமைதிப்படுத்த முடியாத நிலையில் ஸ்பர்ஜன் 'எல்லோரும் அமைதியாக வெளியேறுங்கள்' என்று குரல் கொடுத்தார். அவரோ அருகிலிருந்த அறையில் மூர்ச்சித்து விழுந்தார். அந்த அரங்கைவிட்டு வெளியே செல்வதற்கு முன்பாக அந்த நெரிசலில் 7 பேர் இறந்துவிட்டதாகவும், 28 பேர் காயமடைந்தார்கள் என்பதையும் ஸ்பர்ஜன் கேள்விப்பட்டார். ஸ்பர்ஜன் அங்கிருந்து அவர் வீடிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவருடைய மனைவி சுசன்னாவிற்கு இரட்டை குழந்தைகள் பிறந்து இன்னும் ஒருமாதம் கூட ஆகவில்லை. ஆனாலும் இந்த நிலையிலும் ஸ்பர்ஜனை அன்போடு அவர்கள் ஆறுதல்படுத்தினார்கள். ஸ்பர்ஜனை தொடர்ந்து வீட்டிலிருப்பாரானால் அநேகர் வந்து அவரிடத்தில் பேசுவது அவருக்கு இன்னும் மனவேதனையாக இருக்கும் என்பதை டீக்கன்மார்கள் உணர்ந்து, பட்டணத்திற்கு வெளியே ஒரு அமைதியான சூழ்நிலையில் வைக்கப்பட்டார்.

பத்திரிகைகள் அநேகம் இதைக் குறித்து குற்றம் சாட்டியும், மற்றவைகள் அவருக்கு சாதகமாகவும் எழுதின. ஸ்பர்ஜன் மிகவும் மனம் உடைந்தவராய்க் காணப்பட்ட வேளையில் தேவன் அவருக்கு வேண்டிய பெலத்தையும் தைரியத்தைரியும் கொடுத்தார். கீழ்கண்ட வசனத்தை அவர் தியானித்தபோது அவர் உள்ளம் உயிர் பெற்றது. பாரம் நீங்கிற்று. அந்தவசனமாவது, **"ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்."(பிலிப் 2:9,10,11).**

ஸ்பர்ஜன் தன்னுடைய வீட்டிற்குத் திரும்ப வந்தார். ஒரு ஞாயிறு விட்டு அடுத்த ஞாயிறு மறுபடியும் நியூ பார்க் ஸ்ட்ரீட் பாப்டிஸ்ட் சபையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தார். ஸரிகார்டன் மியூசிக் ஹால் சம்பவத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் காயப்பட்டவர்களுக்கும் உதவி செய்யும்படியாக பணம்

Reformed Baptist Church

சேகரிக்கப்பட்டு அவர்களை ஆறுதல்படுத்தி அவர்களுக்கு உதவியளிக்கப்பட்டது. இந்த சம்பவத்தினால் ஸ்பர்ஜனுக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டது.

இந்த சம்பவத்தின் மூலம் இங்கிலாந்து தேசம் முழுவதிலும் ஸ்பர்ஜனின் ஊழியத்தைக் குறித்தும், அவரைக் குறித்தும் செய்தி பரவிற்று. மேலுமாக இந்த சம்பவத்தின் மூலமாய் ஒரு பெரிய ஆலயத்தைக் காட்டும்படியாக சபையின் மக்கள் திட்டமிட அதற்க்கென்று ஒரு கமிட்டியும் நிறுவப்பட்டது. தேவன் இவ்விதம் இந்த சம்பவத்தை நன்மைக்கு ஏதுவாக நடத்தினார்.

Reformed Baptist Church

## 6.லண்டனில் உயிர் மீட்சி

ஸ்பர்ஜனுடைய பிரசகங்களைக் கேட்க திரண்டு வந்திருந்த மக்களின் கூட்டத்திற்கு நியூ பார்க் ஸ்ட்ரீட் ஆலயக்கட்டிடம் போதவில்லை. ஆகவே ஸரிகார்டன் மியூசிக் ஹாலில் ஞாயிறு காலை மாலை கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன. ஸ்பர்ஜனுடைய செய்தியைக் கேட்க வந்தவர்களில் எல்லா வகுப்பினரும், அதாவது உயர்ந்த கல்வி மான்களும், நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களும், மிகவும் ஏழ்மையான நிலையில் படிப்பறிவு இல்லாத மக்களும் காணப்பட்டார்கள். இந்த அனைத்து மக்களின் ஆத்துமாக்களையும் ஸ்பர்ஜன் உண்மையாக நேசித்து அவர்களைக் குறித்து அதிக அக்கறை உள்ளவராகக் காணப்பட்டார்.


ஸ்பர்ஜனுடைய பிரசகங்கள் எல்லா மக்களும் விளங்கிக் கொள்ளும்படியாக எளிமையானதாகவும், ஆழமானதாகவும், முற்றிலும் வேதாகமத்தை மையமாக கொண்டதாகவும் காணப்பட்டது. மேலும் அவருடைய பிரசகங்கள் உண்மையான கருத்துடனும், ஆழமான பாரத்துடனும் பிரசங்கிக்கப்பட்டது. மெய்யான ஆத்தும பாரத்துடன் கூடியதாய் அவைகள் காணப்பட்டது.

ஞாயிற்று கிழமையில் செய்தியை பிரசங்கிப்பதற்கு முன்பாக, பிரசங்கிக்க வேண்டியதின் ஆழமான உத்திரவாத்தைக் உணர்ந்தவராய் ஸ்பர்ஜன் ஜெபத்திலே தரித்திருப்பார். அவ்விதமான வேளைகளில், சில சமயங்களில் அவர் எழுந்து பிரசங்கிக்க வேண்டிய நிலையில், இருதய பாரத்தினால் அழுத்தப்பட்டு, அவர் முழங்காலில் இருந்து எழுவதற்கு டீக்கன்மார்கள் உதவி செய்ய வேண்டியதாகவும் இருந்தது. பிரசங்கிக்கும் படியான சரியான நேரத்திற்கு ஸ்பர்ஜன் மேடையில் நிற்பார். உன்னத பெலத்தினால் தரிப்பிக்கப்பட்டவராய் மிகுந்த நம்பிக்கையோடே பிரசங்கிப்பார். கூட்டம் முடிந்தவுடன் தன்னோடு பேச வருபவர்களை சந்திப்பதற்கு முன்பாக போதகர் அறையில் முழங்காலிட்டு தான் போதிக்க வேண்டிய அளவில் போதிக்கவில்லையே என்று தன்னை தாழ்த்தி தேவனுக்கு முன்பாக மன்றாடி ஜெபித்ததுண்டு. அதற்குப் பின்பாக தன்னோடு பேச விரும்புகிறவர்களை சந்தித்துப் பேசுவார்.

Reformed Baptist Church

ஆராதனையில் பாட்டுகள், போதகரின் ஜெபம், வேத வாசிப்பு, செய்தி ஆகிய இவைகள் மிக பயபக்தியுடன் காணப்பட்டன. இந்த ஆராதனையில் ஸ்பர்ஜன் செய்யும் ஜெபம், மெய்யான தேவ ஆவியானவரின் பிரசன்னம் நிறைந்ததாய் காணப்பட்டது. ஒருமுறை அமெரிக்காவில் பிரசித்திப் பெற்ற ஊழியர் டி.எல்.மூடி இங்கிலாந்து வந்து ஸ்பர்ஜனின் ஆராதனையில் கலந்துகொண்டு அமெரிக்காவிற்கு திரும்பிச் சென்றார்.

அப்பொழுது அங்கு அவரை சந்தித்த மக்கள் 'ஸ்பர்ஜனின் பிரசங்கத்தை கேட்டீர்களா?' என்று கேட்டார்கள். அதற்கு அவர், 'ஆம் கேட்டேன், அது மிகவும் உன்னதமானது, அதைக் காட்டிலும் அவர் செய்த ஜெபம் மிகவும் மேன்மையாயிருந்தது' என்று சொன்னார். ஸ்பர்ஜன் தன்னுடைய ஜெபத்தைக்கூட தான் விசுவாசித்த கிருபையின் சத்தியத்தின் அடிப்படையிலேயே செய்கிறவராய் காணப்பட்டார்.




Reformed Baptist Ch

மனித இருதயம் திருக்குள்ளதும் மகா கேடுள்ளதும் என்பதையும், மனிதனில் பாவத்தின் பாதிப்பு மிக கொடியது என்றும் ஸ்பர்ஜன் அறிந்திருந்தார். தேவன், ஒரு மனிதனுடைய இருதயத்தை ஆவியானவரை கொண்டு சந்தித்து, உயிர்ப்பிதாலன்றி அவன் தேவனிடத்தில் வரமுடியாது என்பதை உணர்ந்தவராய் ஜெபித்தார். ஆண்டவராகிய இயேசு சிலுவையில் ஒரு மனிதனின் இரட்சிப்புக்கு உண்டான அனைத்தையும் செய்து முடித்திருக்கிறார் என்றும், அதின் மூலம் மாத்திரமே இரட்சிப்பு உண்டென்றும் உணர்ந்தவராய் ஜெபித்தார், போதித்தார்.

தேவ ஆவியானவர் ஒரு மனிதனின் இருதயத்தை தொடும்பொழுது, சந்திக்கும்பொழுது, உயிர்ப்பிக்கும் பொழுது அந்த மனிதன் தேவனுடைய சத்தியத்திற்கு

எதிர்த்துநிற்க முடியாது என்பதைத் தெளிவாய் உணர்ந்து போதித்தார். அவருடைய ஜெபத்தின் ஊக்கம், ***'நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது'(யாக் 5:16)*** என்ற வசனத்திற்கு ஏற்ற விதமாக காணப்பட்டது. அவருடைய பிரசங்கமானாலும் சரி, அவருடைய ஜெபமானாலும் சரி அது ஒரே ஒரு மையமான நோக்கத்தையே அடிப்படையாக கொண்டிருந்ததது. அது ***'கிறிஸ்துவுக்கே மகிமை'*** என்பதே. அவருடைய பிரசங்கத்தின் பின்பகுதி, ஆத்துமாக்கள் கிறிஸ்துவண்டை வருவதற்கும், ஒப்புக் கொடுப்பதற்கு ஏற்றதாகவும், மன்றாட்டும், துரிதப்படுத்தலும், எச்சரிப்பும், ஊக்கப்படுத்தலும் காணப்பட்டது. அவர் ஒருபோதும் ஆத்துமாக்களை முன்னால் வரும்படியாக அழைத்தது கிடையாது. ஆனால் இரட்சிக்கப்படாதவர்கள் பிரசங்கத்தைக் கேட்கும் அதே நேரத்தில் இயேசுவை விசுவாசித்து, மனந்திரும்பி, ஒப்புக் கொடுக்க, ஊக்கப்படுத்தப்பட்டார்கள். தங்களுடைய வீடுகளுக்கு சென்றும் தொடர்ந்து தேவனை தேடும் படியாக வலியுறுத்தப்பட்டார்கள்.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் மதிய நேரத்திலிருந்து, அன்று மாலை ஆலய ஜெபக்கூட்டம் வரைக்கும் ஆத்தும பாரங்களோடு வருகிற மக்களையும், ஆவிக்குரிய ஆலோசனையை நாடி வருகிறவர்களையும் சந்தித்தார். அநேகருடைய வாழ்க்கையில் தேவன் தம்முடைய ஊழியத்தின் மூலமாய் மகிமைகரமான காரியங்களைச் செய்வதைக் கேட்டு அவர் கர்த்தருக்குள் களிகூர்ந்தார். மாலை ஜெபக் கூட்டங்களில் அவ்விதமான மக்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டன. அநேகர் தங்கள் வாழ்க்கையில் தேவன் செய்த காரியங்கள் சாட்சி பகிந்தார்கள். ஆனால் இவ்விதமாக அவரைச் சந்திக்க வருகிறவர்களின் எண்ணிக்கை அதிகமாய் இருந்தபடியினால், ஸ்பர்ஜன் தனியாக இதை செய்ய முடியவில்லை. ஞானஸ்நானம் பெறவும், சபை அங்கத்தினராக விரும்புகிறவர்களின் பெயர்களும் குறித்துக் கொள்ளப்பட்டு, அவர்கள் சபையினால் நியமிக்கப்பட்ட சிலரால் சந்திக்கப்பட்டார்கள். அவர்கள் செய்தியாளர்கள் (Messengers) என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள் அந்த ஆத்துமாக்களோடு பேசி, அவர்களுடைய ஆவிக்குரிய நிலமைக்களைக் குறிப்பெடுத்து விசாரணைப் புத்தகம் என்ற புத்தகத்தில் எழுதி வைத்தார்கள்.

Reformed Baptist Church

இந்த செய்தியாளர்கள் வைத்திருந்த அந்த புத்தகங்களை வாசிக்கும்பொழுது அவர்கள் நல்ல முதிர்ச்சியான ஆவிக்குரிய விதத்தில் செயல்பட்டிருப்பதைப் பார்க்கமுடிகிறது. அவர்கள் ஸ்பர்ஜனின் மேற்ப்பார்வையில் இவைகளைச் செய்தார்கள். ஞானஸ்நானம் பெற விரும்புகிறவர்கள் மற்றும் சபை அங்கத்தினர்கள் ஆக விரும்புவோர்கள் மத்தியில் மூன்று முக்கியமான காரியங்கள் எதிர்ப்பார்க்கப்பட்டன. அவ்விதமானவர்கள்,

**முதலாவது** தான் ஒரு பாவி என்பதை உணர்ந்து, தன்னை இரட்சிப்பதற்கு தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்றும் கிறிஸ்துவை நோக்கிப் பார்க்கிறார்களா? கிறிஸ்துவானவர் சிலுவையில் மறித்து உயித்தெழுந்ததின் மூலமாக மட்டுமே தான் இரட்சிப்பை பெறக்கூடும் என்பதை உணர்ந்திருக்கிறார்களா? போன்ற அடிப்பையான ஆவிக்குரிய காரியங்கள் எதிர்ப்பார்க்கப்பட்டன.

**இரண்டாவதாக** அவர்கள் ஒரு புதிய ஜீவனுள்ள வாழ்க்கையில் பிரவேசித்திருக்கிறார்களா? பாவத்தின் மேல் வெற்றியுள்ளவர்களாக இருக்கிறார்களா? தேவனுடைய வார்த்தையைக் குறித்த தாகமும், ஜெபத்தக் குறித்த வாஞ்சையும் இருக்கின்றதா? அவர்களுடைய விருப்பங்களில் வாஞ்சைகளில் கிறிஸ்துவுக்கு உரியவைகளை வாஞ்சிக்கிறார்களா? மற்றவர்களை கிறிஸ்துவுக்காக ஆதாயம் பண்ணவேண்டும் என்ற வாஞ்சையை கொண்டிருக்கிறார்களா? என்றும் எதிர்பார்க்கப்பட்டன.

**மூன்றாவதாக** கிருபையின் சத்தியத்தை குறித்த அடிப்படையான ஆவிக்குரிய விளங்குதல் உண்டா? அதாவது இரட்சிப்புக்கான காரணம் தன்னில் உண்டாகவில்லை என்றும், தேவனே அதை நிர்ணயித்து தமது கிருபையினால் தன்னை இரட்சித்திருக்கிறார் என்றும், வாழ்நாள் முழுவதும் அவர் அதைக் காத்துக்கொள்ள வல்லவராய் இருக்கிறார் என்பதை விசுவாசிக்க முடிகிறதா? என்பவைகளும் எதிர்பார்க்கப்பட்டன. இந்த செய்தியாளர்கள் ஆத்துமாக்களோடு மிக கனிவாகவும், விளங்குதலோடும் பேசி அவர்கள் அதற்கு ஏற்றவர்களாக காணப்படுவார்களானால் ஸ்பர்ஜனை சந்திக்கும்படியான

Reformed Baptist Church

அட்டை அவர்களுக்கு கொடுப்பார்கள். அந்த அட்டையை பெற்றவர்கள் ஸ்பர்ஜனை சந்தித்தார்கள். அவ்விதம் பெயர் கொடுத்தவர்களில் மேற்கண்ட அளவில் காணப்படாதவர்களாக இருப்பார்களே ஆனால், பெண்களை மிஸஸ். பார்லெட் அம்மையார் நடத்தும் வேத வகுப்பிற்கும், ஆண்களை சகோதரர்களால் நடத்தப்படும் வேத வகுப்பிற்கும் செல்லும்படியாக சொல்லப்பட்டார்கள். மறுபடியும் அவர்கள் சில மாதங்கள் கழித்து செய்தியாளர்களால் சந்திக்கப்பட்டு, ஸ்பர்ஜனை சந்திக்கும் படியான அட்டையை பெற்று சந்தித்தார்கள். அவர்கள் எந்த செய்தியினால் தொடப்பட்டார்கள் அல்லது செய்தியின் வேளையில் எடுத்துச் சொல்லப்பட்ட ஒரே வசனத்தின் மூலமாகவோ அல்லது ஒரே வார்த்தையின் மூலமாகவோ எவ்விதம் அவர்கள் உள்ளங்கள் தொடப்பட்டன என்பதைக் குறித்தும், பாவத்தின் அநேக போராட்டங்கள், அதின் மேல் வெற்றிகள், கிறிஸ்துவின் புதிய ஜீவனைப் பெற்ற சாட்சிகள் போன்ற சாட்சிகளை அவர்களிடத்தில் கேட்கும்பொழுது ஸ்பர்ஜன் இருதயத்தை அதிகமாய் தொட்டன. இவ்விதமாக சாட்சிகளை கேட்டுக்கொண்டிருக்கும் ஸ்பர்ஜன் சாப்பாட்டு வேளைகளையும் அநேக சமயங்களில் மறந்து ஜெபக்கூட்டத்திற்கு சென்றதுண்டு. ஆறாயிரம் பேர் சபையின் அங்கத்தினராக இருந்தாலும் ஒவ்வொருவரையும் பேர் முதலாய் தெளிவாய் அறிந்திருந்தார். இவ்விதம் சபையில் அங்கத்தினராக இருந்தவர்கள் அநேகர் மற்ற சபையில் அங்கத்தினராக இருந்தவர்கள் அல்ல. அவர்கள் சபைக்கே செல்லாதவர்களும், குடிகாரர்களும், தேவனை முற்றிலும் அறியாதவர்களும், திருடர்களும், விபச்சார விபச்சாரிக்களுமாய் இருந்தவர்கள் ஆவர்.

ஒருகாலத்தில் தேவனை முற்றிலும் அறியாதவர்களாக வாழ்ந்த மக்கள் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியுள்ளவர்களாகவும் அவருக்குப் பணியாளர்களாகவும் காணப்பட்டார்கள். படித்த அநேக மேதாவிகளும், நாட்டினுடைய தலைவர்களும் ஸ்பர்ஜனுடைய கூட்டங்களுக்கு வந்து கலந்து கொண்டார்கள். ஆரம்பத்தில் ஸ்பர்ஜனை அதிகம் தாக்கி எழுதிய பத்திரிகைகள், அவரை பாராட்டி எழுத ஆரம்பித்தார்கள். ஸ்பர்ஜனின் ஊழியத்தைப் பார்த்த மற்ற சபைகளின் அங்கத்தினர்களும் போதகர்களும் உற்சாகமடைந்தவர்களாய் அந்தந்த சபைகளில்

Reformed Baptist Church

கர்த்தருக்கென்று ஊக்கமாய் பணி செய்தார்கள். சுவிசேஷப் பணியையும் ஆத்துமாக்களின் சந்திப்பையும் தீவிரமாய் மேற்கொண்டார்கள். ஸ்பர்ஜன் இந்தக் காலங்களில் ஏற்பட்ட உயிர் மீட்சியை குறித்து தேவன் இருப்பதும் முப்பதுமாக அல்ல எழுபதாக ஆசீர்வதித்திருக்கிறார் என்று சொல்ல முடிந்தது.

ஆப்பிரிக்காவில் தேவனுக்கென்று உழைத்த மிஷினரியான டாக்டர். டேவிட் லிவிங்ஸ்டன் ஒருமுறை சொன்னார். ‘என்னுடைய வாழ்க்கையில் ஒருநாள் ஸ்பர்ஜனின் காலை ஆராதனையில் கலந்து கொண்டதை என்னால் ஒருக்காலமும் மறக்க முடியாது. நான் ஆப்பிரிக்காவில் ஒரு சில மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கிறவனாக இருந்தாலும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு தேவனுடைய வார்த்தையை மிகத்தெளிவாகவும், வல்லமையாகவும் பிரசங்கிக்கிற ஒரு தேவ மனிதனை கர்த்தர் எழுப்பியிருக்கிறார் என்று எண்ணும்பொழுதெல்லாம் என்னுடைய உள்ளம் மகிழ்ச்சியில் பொங்குகிறது.’

Reformed Baptist Church

## 7. மெட்ரோபாலிட்டன் டேபர்னேகில்

ஸ்பர்ஜன் லண்டன் மாநகரம் வந்து ஊழியத்தை ஆரம்பித்து 2 ஆண்டுகள் கழித்து ஒரு பெரிய ஆலய கட்டிடம் காட்டும்படியாக திட்டமிடப்பட்டது. நியூயிங்டன் பட்ஸ் என்ற இடத்தில் மூன்று சாலைகள் சந்திக்கும் பிரதான பகுதியில் ஐயாயிரம் பவுண்டுக்கு ஒரு இடம் வாங்கப்பட்டது. கட்டிட அமைப்பு திட்டமிடப்பட்டது. புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டதை நினைவு கூறும் விதமாக ஆலயத்தின் முன் அமைப்பு கிரேக்க கட்டிட முறையில் வடிவமைக்க திட்டமிடப்பட்டது. அதை கட்டுவதற்கு ஏற்படும் செலவு 13,000 பவுண்டுகள் எனவும் கணக்கிடப்பட்டது. அந்த நாட்களில் இது மிகவும் பெரும் தொகையாக இருந்தது. இந்த பணத்தின் பெரும் பகுதியை அவர் சென்று செய்யும் ஊழியத்தின் மூலமாகவும், அவர் எழுதிய புத்தகத்தின் மூலமாகவும் மற்றும் ஒவ்வொரு வாரமும் வெளியிடப்பட்டு விற்பனையாகும் அவர் பிரசங்கித்த செய்திகளின் புத்தகத்தின் விற்பனை மூலமாகவும் திரட்ட திட்டமிட்டார்.

அதின் ஆரம்பமாக எக்ஸ்டர் ஹாலில் தொடர்ச்சியான கூட்டங்கள் நடத்தி அதில் காணிக்கை சேகரிக்கப்பட்டது. அவர் வந்து பிரசங்கிக்கும்படியாக அருகிலும் மற்ற நாடுகளிலும் பல அழைப்புகள் பெற்று பிரசங்கிக்க சென்ற இடங்களில் பெற்ற காணிக்கைகள் இந்த கட்டிட நிதிக்கு செலவிடப்பட்டது. அவர் பிரசங்கிக்க செல்லும் படியான இடம் நீண்ட தூரம் இல்லை என்றால் குதிரை வண்டிகளிலும், நீண்ட தூரங்களுக்கு இரயில்கள் மூலமாகவும் சென்றுவந்தார். அயர்லாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், ஐரோப்பா நாடுகளுக்கும் சென்று கூட்டங்களை நடத்தினார். சுவிட்சர்லாந்து சென்றபொழுது ஜெனிவாவில் கால்வின் பிரசங்கித்த இடத்தில் பிரசங்கித்தார். மெட்ரோபாலிட்டன் டேபர்னேக்கில் அடிக்கல் நாட்டு விழா 1859 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி செவ்வாய் கிழமை அன்று நடைபெற்றது. அந்த விழாவிற்கு ஏறக்குறைய மூவாயிரம் பேர் வந்திருந்தார்கள். அந்த நாளில் ஸ்பர்ஜன் ஒரு செய்தியும் அவரது தகப்பனார் மற்றொரு செய்தியையும் பிரசங்கித்தார்கள். அந்த நாளில் காணிக்கை ஏறக்குறைய நாலாயிரம் பவுண்டுக்கு மேல் சேர்ந்தது. ஸ்பர்ஜன் ஒவ்வொரு வாரமும் பிரசங்கித்த செய்தியானது உடனடியாக புத்தகமாக வடிவமைக்கப்பட்டு வெளிவந்தது.

Reformed Baptist Church

அது மாத்திரம் அல்லாமல் வருட முடிவில் அந்த வருட செய்திகள் அனைத்தும் அடங்கிய புத்தகம் வெளியிடப்பட்டது. இவைகள் இங்கிலாந்து தேசத்தில் மட்டுமல்லாமல், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளிலும் அநேக பிரதிகள் விற்பையாயிற்று. இவைகளின் விற்பனை டேபர்னகில் ஆலயம் கட்டுவதற்கு பெரிதும் உதவியது.




இந்த கட்டிடப் பணியை சபையின் உதவிக்காரர்களில் ஒருவரான வில்லியம் ஹில் என்ற கட்டிட வல்லுநர் கட்டினார். இந்த கட்டுமான பணி இரண்டு ஆண்டுகள் தொடர்ந்தன. கட்டிடம் கட்டும் படியான செலவு ஆரம்பத்தில் 13 ஆயிரம் பவுண்டுகள் என்று கணக்கிட்டாலும் அதை கட்டி முடிக்க 31 ஆயிரம் பவுண்டுகள் ஆயிற்று. இந்த கட்டிடம் மிகுந்த ஞானத்தோடு கட்டப்பட்டது. அந்த ஆலய கட்டிடத்தில் தரை பகுதியிலும் இரண்டு கேலரிகளிலும் (Gallery) அமரக்கூடிய இருக்கைகள் மூவாயிரத்து அறுநூறு இருந்தன. அதோடு மடக்கி விரிக்கக் கூடிய இருக்கைகள் ஆயிரமும், ஏறக்குறைய 1400 பேர் நிற்க கூடிய அளவு இடமும் இருந்தன. ஆகவே மொத்தம் ஏறக்குறைய ஆறாயிரம் பேர் செய்தியைக் கேட்க கூடியதாய் இருந்தது, முதல் கேலரி பகுதியில் மூன்று அறைகள் அதாவது, வெஸ்ட்ரி(Vestry) இருந்தன. அதில் நடு அறை

போதகருக்கும், மற்ற இரண்டு அறைகள் மூப்பர்களுக்கும், டீக்கன்மார்களுக்கும் இருந்தன. முதலாவது கேலரியிலிருந்து நீட்டப்பட்ட பகுதியில் ஒரு மேஜையும் நாற்காலியும் வைக்கப்பட்டு இருந்தது. ஸ்பர்ஜன் இந்த இடத்தில் நின்று பிரசங்கிக்கும்பொழுது எல்லா மக்களும் (ஒலிப்பெருக்கி இல்லாத காலம்)செய்தியை தெளிவாக கேட்கவும் போதகரை தெளிவாக பார்க்கும்படியாகவும் அமைக்கப்பட்டிருந்தது. ஸ்பர்ஜன் பிரசங்கிக்கும் பட்டியான முதல் கேலரியிலிருந்து நீட்டப்பட்ட அந்த பகுதிக்கு கீழாக மார்பிள் கற்களால் அமைக்கப்பட்ட ஞானஸ்நான பெட்டி இருந்தது. ஞானஸ்நானம் எடுப்பவர்களை அனைவரும் பார்க்கும் வண்ணமாக அது அமைக்கப்பட்டிருந்தது. ஞானஸ்நானத் தொட்டி உபயோகப்படுத்தப்படாத வேளைகளில் அது மூடப்பட்டு, அதின் மேல் இராபோஜன மேஜையும் நாற்காலிகளை வைக்கும் அமைப்பை கொண்டதாய்க் காணப்பட்டது. ஸ்பர்ஜனே பாடல்களைப் பாடி ஆராதனையை நடத்தினார். எந்த விதமான விபத்து நேரிடும் படியான சூழ்நிலை ஏற்பட்டாலும், அந்தந்த கேலரியிருந்தும், கீழ்பதியிலிருந்தும் இறங்குவதற்கான விசாலமான வாசல்களை ஸ்பர்ஜன் அமைத்துமிருந்தார். கூட்டம் நடக்கும் அரங்குக்கு கீழ்தளத்தில்(Underground) விரிவுரை அரங்கம், விசாலமான ஞாயிறு பள்ளி நடத்த போதுமான இடம், சமையலறை ஆகியவை அமைக்கப்பட்டு இருந்தன.

இவ்விதமாக கட்டப்பட்ட மெட்ரோபாலிட்டன் டேபர்னேகில் முதல் ஆராதனை 1861 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி நடைபெற்றது. எந்த கடனும் இல்லாதபடி ஆலயத்தைத் திறக்க கர்த்தர் உதவி செய்தார். அப்பொழுது ஸ்பர்ஜனுக்கு வயது 26. ஏறக்குறைய ஆறாயிரம் பேர் சபையின் அங்கத்தினராக உயரும்படி கர்த்தர் உதவி செய்தார். இந்த மெட்ரோபாலிட்டன் டேபர்னேகில் திறப்பு விழாவை தொடர்ந்து இரண்டு வாரங்கள் கூட்டங்கள் நடைபெற்றன. இந்த புதிய கட்டிடத்தில் ஸ்பர்ஜன் ஆரம்ப உரையாக இவ்விதம் பேசினார், **“இந்த ஆலயக்கட்டிடம் இருக்கும் மட்டுமாக, அதில் ஆராதிக்க மக்கள் கூடும்வரை அதின் மையப்பொருள் ஆண்டவராகிய இயேசுவைக் குறிதேயல்லாமல் வேறொன்றுமில்லை. கிருபையின் சத்தியத்தை பறைசாற்றும் கால்வினிஸ்ட் என்று நான் அழைத்துக்கொள்ள ஒருபோதும் வெட்கப்படமாட்டேன். என்னை ஒரு பாப்டிஸ்ட் என்று சொல்லிக்கொள்ள தயங்கவுமாட்டேன். உங்களின் போதனை(creed) என்னவென்று கேட்டால்**

Reformed Baptist Church

**அது இயேசுவே. அவரே சுவிசேஷத்தின் ஒட்டுமொத்தமும், அவரே வேத சாஸ்திரமும், மனு உருவாய் வந்த விலையேறப்பெற்ற சத்தியமும் அவரே. அவரே மகிமைகரமான வழியும் சத்தியமும் ஜீவனுமானவர்."** ஸ்பர்ஜனோடு மற்ற அநேக போதகர்களும் அந்த நாளில் கலந்து கொண்டார்கள். அந்த நாட்களில் அநேகம் பேர் ஞானஸ்நானம் பெற்று சபையின் அங்கத்தினரானார்கள். ஸ்பர்ஜன் இந்த பெரிய ஆலயக்கட்டிடத்தில் அநேக ஆயிரக்கணக்கான மக்கள் இரட்சிப்பின் செய்தியை கேட்கும் படியாக தேவன் அவரை தம்முடைய மகிமைக்குள் அழைக்கும் வரை 31 ஆண்டுகளாக அயராது கர்த்தருடைய பணியைச் செய்தார்.

Reformed Baptist Church

## 8.மெட்ரோபாலிட்டன் டேபர்னேகிலின் அனுதின செயல்பாடு

இந்த பெரிய ஆலயக்கட்டிடம் சபையின் அனைத்து ஊழியங்களுக்கும் வாரமுழுவதும் மக்கள் கூடும் ஸ்தலமாக காணப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் மக்கள் வந்து மற்ற நாட்களில் வெறுமையாய்க் காணப்படும் ஒரு கட்டிடமாக அல்ல. வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் ஊழியத்திற்கான காரியங்கள் ஏதாகிலும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. சபை அங்கத்தினர் அநேகர் இதற்கு அருகில் குடியிருந்ததினால் இவ்விதமான காரியங்களில் கலந்து கொள்ளுவதற்கு ஏதுவாக இருந்தது. ஸ்பர்ஜனால் உருவாக்கப்பட்ட போதகர் கல்லூரி, ஏழைகளுக்கு இலவச உணவளிக்கும் இல்லத்தின் செயல்பாடுகள், அனாதை விடுதியின் காரியங்கள் ஆகிய அனைத்தின் கூட்டங்கள், ஊழியப் பணிகள் ஆகியவைகள் நடைபெற்றன.

Reformed Baptist Church

ஆலயமானது காலை 7 மணிக்கு திறக்கப்பட்டு இரவு ஏறக்குறைய 11 மணி வரை, வாரம் முழுவதும் ஊழியத்தின் அநேக பணிகள் நடைபெற்றன. போதகர் கல்லூரி கட்டிடம் திறக்கும் வரை 12 ஆண்டுகளாக கீழ்தட்டில் இருந்த அறையிலும் அருகில் இருந்த அறையிலும் வகுப்புகள் நடைபெற்றன. போதகர் கல்லூரியின் பகுதி நேர வகுப்புகள் வாரத்தின் 2 நாட்கள் நடைபெற்றன. அவைகளில் 300 பேர் படித்தார்கள். ஸ்பர்ஜன் ஊழியத்தின் மூலமாக எழும்பின ஸ்தாபனங்களின் வருடாந்திர கூட்டங்கள், போதகர்களுக்கான கருத்தரங்குகள் இங்கு நடைபெற்றன. இந்த சபையின் மூலமாக வெளிநாட்டில் அநேக மிஷனரிகள் தாங்கப்பட்டார்கள். பெண்களுக்கு உதவும் ஸ்தாபனங்கள், அனாதை குழந்தைகளுக்கும், ஏழை மக்களுக்கும் துணிகளை தைத்துக் கொடுத்தார்கள்.

**Maternal Society Ladies** சேர்ந்து வெகுமதி கொடுக்கும் பொருட்களை தயாரித்து கர்ப்பம் தரித்திருக்கும் பெண்களுக்கு கொடுப்பதும், பிரசவமானவர்களுக்கு உதவியும் செய்து வந்தார்கள். **Flower Society** யை சேர்ந்தவர்கள் அழகான மலர் கொத்துகளை உருவாக்கி ஆஸ்பத்திரிகளில் சென்று வியாதியஸ்தர்களை மகிழ்வித்தார்கள். இவைகள் எல்லாவற்றிலும் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துவதையே மையமாக வைத்து

செயல்பட்டார்கள். இவ்வளவு பெரிய கட்டிடத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளும்படி பெருக்குவது, துடைப்பது போன்ற எல்லா வேலைகளையும் சபையில் உள்ள மக்கள் அனைவரும் செய்தார்கள். ஸ்பர்ஜன் கர்த்தருடைய ஊழியத்தில் எதையுமே அரைகுறை மனதோடு கவலையீனமாக செய்வதை விரும்பாதவர். சபை மக்கள் காலை ஆராதனை முடிந்தவுடன், கர்த்தருடைய நாளில் மற்ற ஊழியங்களில் பங்கு பெறுகிறவர்களாக காணப்பட்டார்கள். மதிய நேரத்தில் ஓய்வு நாள் பாடசாலைக்கு ஆயிரம் பிள்ளைகள் கூடுவார்கள். அவர்களுக்கு போதிக்க 100 ஆசிரியர்கள் இருந்தார்கள்.

முதன்முதலில் ஸ்பர்ஜன் லண்டனில் ஊழியத்தை ஆரம்பித்த போது மிஸஸ். பார்லெட் பெண்களுக்கான வேதவகுப்பை நடத்தி வந்தார்கள். அதில் ஆரம்பத்தில் 3 பெண்கள் மாத்திரம் இருந்தார்கள். ஆனால் 10 வருடங்களுக்குள்ளாக 500 பேராகவும், பின்னர் 700 பேராகவும் வந்தார்கள். மிஸஸ். பார்லெட் கர்த்தரிடத்தில் சென்ற 1875 ஆம் ஆண்டிற்குள் 1000 பெண்கள் அவர்கள் வகுப்பில் இருந்தார்கள். ஸ்பர்ஜன் எப்பொழுதும் தன் சபை மக்கள் மற்ற இடங்களிலும் சுவிசேஷம் அறிவிப்பதை உற்சாகப்படுத்தினார்.

அவ்விதம் ஆங்காங்கு சென்று ஊழியம் செய்தவர்கள் 1000 பேர்களுக்கு மேல் இருப்பார்கள். 1870 ஆம் ஆண்டிலிருந்து சபை மக்கள் மாலை கூட்டத்திற்கு வராமல் மற்ற இடங்களில் சென்று ஊழியம் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட வேண்டியதாயிற்று. ஏனென்றால் அனைவருக்கும் இடம் போதாதமையின் நிமித்தமும், இரட்சிக்கப்படாத அநேகர் ஆலயத்திற்கு வந்து தேவனுடைய வார்த்தையை கேட்க இடம் தேவைப்பட்டதாலும் அவ்விதம் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். இரட்சிக்கப்படாத அநேக மக்கள் சத்தியத்தை கேட்கும் படியாக ஆலயத்திற்கு வந்து குவிந்ததின் நிமித்தம், அநேகருக்கு இடம் போதாமல் திரும்பிச் செல்லும் நிலை ஏற்ப்பட்டது. சபை மக்களுடைய வாழ்க்கை ஆலயத்தையும் அதன் பணியையும் மையமாக வைத்து அமைந்து காணப்பட்டது.

Reformed Baptist Church

## 9.போதகர் கல்லூரி

ஸ்பர்ஜன் லண்டனில் ஊழியத்திற்கு வந்த முதலாம் ஆண்டு, ஸ்பர்ஜனின் ஊழியத்தின் மூலமாய் இரட்சிக்கப்பட்ட தாமஸ் மெதஸ்ட் என்ற வாலிபன் வைராக்கியமாய் லண்டனில் உள்ள தெருக்களிலும், மிக எளிமையான பகுதிகளிலும் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்து வந்தான். அவனுடைய ஊழியத்தின் மூலமாய் இரட்சிக்கப்பட்ட இருவரை ஸ்பர்ஜனிடம் அழைத்துவந்து அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் படியாய் கேட்டுக்கொண்டான். கர்த்தர் அவனை ஊழியத்திற்கு அழைத்திருப்பத்தின் அறிகுறியை கண்ட ஸ்பர்ஜன் வாரத்திற்கு ஒருமுறை அந்த வாலிபனுக்கு வேத சத்தியத்தையும், கர்த்தருடைய பணியையும் குறித்து போதித்து வந்தார். இதைக் கண்ட ஆங்காங்கே ஊழியம் செய்து கொண்டிருந்த மற்ற வாலிபர்களும் அதில் கலந்து கொள்ளும்படியாக விரும்பினார்கள். கர்த்தருக்கென்று பணி செய்யும்படியான போதகர்களை பயிற்றுவிக்கும்படியான பாரத்தை ஸ்பர்ஜனுக்கு கர்த்தர் கொடுத்தார். அவ்விதம் ஸ்பர்ஜன் போதகர்களுக்கு பயிற்சி கொடுக்கும் படியான நோக்கத்துடன் போதகர் கல்லூரியை எளிய முறையில் ஆரம்பித்தார். அதற்கு ரோகஸ் என்பவரை முதல்வராக நியமித்து நடத்து ஆரம்பித்தார். முதலில் அதில் 8 மாணவர்கள் இருந்தார்கள். அவர்கள் முதல்வரான ரோகஸின் வீட்டில் தங்கிக் கொண்டார்கள். இதற்கான முழு செலவையும் ஸ்பர்ஜன் தன்னுடைய பிரசங்க புத்தகங்களின் விற்பனையில் வந்த வருமானத்தில் இதை நடத்தினார்.

ஸ்பர்ஜன் சத்தியத்தை சத்தியமாக போதிக்க ஒருபோதும் தவறினதில்லை. ஸ்பர்ஜன் அடிமை வியாபாரத்தை எதிர்த்து பிரசங்கித்த பொழுது அவருடைய புத்தகங்களின் விற்பனை அமெரிக்காவில் வெகுவாய் பாதிக்கப்பட்டது. அப்பொழுது ஸ்பர்ஜனும் அவருடைய மனைவியும் தங்களுடைய செலவை மிகவும் குறைத்து அதை நடத்தினார்கள். ஸ்பர்ஜன் தன்னுடைய குதிரை வண்டியையும் அதற்காக விற்க வேண்டிய நிலை வந்த பொழுது தேவன் ஆச்சரியமாக முன்பின் தெரியாத ஒருவர் மூலம் 200 பவுண்டுகளும் மேலும் 100 பவுண்டுகளும் அனுப்பப்பெற்றார். மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததின் நிமித்தம் வகுப்புகள் நியூ பார்க் ஸ்ட்ரீட் ஆலயக்கட்டிடத்தில்

Reformed Baptist Church

நடைபெற்றன. ஸ்பர்ஜன் தனியாக இந்த பாரத்தை சுமப்பது கடினமென்று கண்டிருந்த மூப்பர்களும் உதவிக்காரர்களும் இந்தக் கல்லூரிக்கென்று காணிக்கை போடும்படியான காணிக்கை பெட்டி ஒன்றை ஆலயத்தில் வைத்தார்கள். ஸ்பர்ஜன் இந்தக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் இவ்விதமானவர்களாய் இருக்கவேண்டும் என்று மூன்று நிபந்தனைகளை விதித்தார்.

1. அவர்கள் மெய்யாலும் மறுபிறப்பு அடைந்தவர்களாய் இருக்க வேண்டும்.
2. ஊழியத்திற்கென்று தேவனுடைய அழைப்பை பெற்றவர்களாய் இருக்கவேண்டும்.
3. இந்த இரு அனுபவங்கள் உள்ளவர்களாய் ஊழியத்தில் குறைந்தது 2 ஆண்டுகள் அனுபவங்கள் உள்ளவர்களாய் காணப்படவேண்டும். மேலும் கால்வின் கொள்கையான கிருபை சத்திய வேத சாஸ்திரமே போதிக்கப்பட வேண்டும்.



Bible College

பணம் செலுத்த முடியாதவர்களுக்கு பயிற்சி கட்டணமும், உடைகளும், புத்தகங்களும் கைச் செலவிற்கான பணமும் இலவசமாய் கொடுக்கப்பட்டது. பரீட்சை எதுவுமில்லை, பட்டமும் எதுவும் கொடுக்கப்படவுமில்லை. இந்த பயிற்சியின் மூலம் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணும் வல்லமையான பிரசங்கிகளாய் அநேகர் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

பயிற்சியில் சேர வரும் விண்ணப்பங்களை ஸ்பர்ஜன் நேர்க்காணல் மூலம் அவர்களின் தகுதி கண்டறியப்பட்டு தகுதியானவர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டார்கள். ஸ்பர்ஜன் ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியாக அறிந்தவராய் அவர்களிடம் அன்பும் பரிவும் காட்டி அவர்களை வழிநடத்தினார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மதிய வேளைகளில் அநேக ஊழியங்களைக் குறித்த ஆவிக்குரிய காரியங்களை கற்பித்தார். அவ்விதம் அவர் போதித்தவைகள் தமிழில் சுருக்கமாக எழுதப்பட்டு "ஸ்பர்ஜனின் அறிவுரைகள்" என்ற புத்தகமாக வெளிவந்திருக்கிறது. போதகர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் மற்ற அநேக சபைகளில் வந்து பிரசங்கிக்கும் படியாக கேட்டுக்கொண்டதினிமித்தம் அவர்கள் அவ்விதம் அனுப்பப்பட்டார்கள்.

இந்தக்கல்லூரியில் சேர்ந்து படிக்க முடியாதவர்களுக்காக மாலையில் வகுப்புகள் நடைபெற்றன. இவ்விதம் பயிற்சி முடிந்து செல்லும் தருவாயில் அவர்கள் நல்ல போதகர்களாக உருவாக்கப்பட்டார்கள். இங்கு பயிற்சி பெற்ற மாணவர்களில் அநேகர் சபைகள் இல்லாத இடங்களில் ஊழியங்களை ஆரம்பித்து சபைகளை நிறுவினார்கள். 1864 ஆம் ஆண்டில் மாத்திரம் 18 புதிய சபைகளை போதகர் கல்லூரியில் படித்தவர்கள் உருவாக்கினார்கள். அதில் 8 சபைகளுக்கு புதிய ஆலயக்கட்டிங்களை கட்டினார்கள். மீதி 10 இடங்களில் புதிய கட்டிடம் கட்டும் தருவாயில் இருந்தன. ஒரு மாணவன் பின்தங்கிப் போன சபைக்கு ஸ்பர்ஜன் சென்று ஊழியத்தை ஆரம்பித்து அதை எழுப்பினார். 18 ஆத்துமாக்கள் மாத்திரமே இருந்த அந்த சபை 800 பேர்களுக்கு அதிகமான பேர்கொண்ட சபையாக அது எழும்பிற்று. போதகர் கல்லூரியை நடத்த வாரம் 400 பவுண்டுகள் தேவைப்பட்ட போதிலும், அநேக சமயங்களில் பணமே இல்லாத நிலை வந்த போதும், தேவன் எதிர்பாராத இடங்களிலிருந்து உதவிகளை அனுப்பி தேவைகளை சந்தித்தார்.

ஸ்பர்ஜன் தன்னுடைய சொந்த வாழ்க்கையில் கொண்டிருந்த ஆழமான ஜெப வாழ்க்கையே இந்த கல்லூரியில் பயிற்சி பெற்றவர்களும் கொண்டிருப்பவர்களாய்க் காணப்பட்டார்கள். தேவனோடு மன்றாடி ஜெபிக்கிற காரியம் அங்கு அவர்கள் மத்தியில் அதிகமாய் காணப்பட்டது. 1856 ஆம் ஆண்டு முதல் வாரத்தில் நடந்த தொடர் கூட்டங்களில் கலந்து கொண்ட போதகர்கள், அவர்கள் மத்தியில் காணப்பட்ட ஜெப ஆவியைக் குறித்து உயர்வாக எழுதினார்கள். அந்த கூட்டத்தில் ஸ்பர்ஜன் தன்

Reformed Baptist Church

குறைகளை உணர்ந்து தேம்பி தேம்பி ஒரு சிறு குழந்தையைப் போல அழுததையும் மற்றும் அனைவரும் கண்ணீரோடும் தங்கள் குறைகளை அறிக்கையிட்டு தேவனோடு மன்றாடியதையும் பார்க்க முடிந்தது. அதற்கு பின்பாக ஆத்துமாக்களுக்காக போராடி மன்றாடி ஜெபித்த ஜெபமானது மெய்யாலும் இருதயத்தை அசைக்கக்கூடியதாய் காணப்பட்டது. ஸ்பர்ஜனின் போதகர் கல்லூரியில் இவ்விதமாக பயிற்றுவிக்கப்பட்டார்கள். 1000 க்கும் மேற்பட்டோர் இங்கிலாந்திலும், உலகத்தின் பலப் பகுதிகளிலும் கர்த்தருக்கென்று பணி செய்தார்கள். டர்க்கஸ், ஹையாட்டி என்ற தீவுகளில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்து அநேகரை கர்த்தரின் பக்கமாக ஸ்பர்ஜனின் போதகர் கல்லூரி மாணவர் ஒருவர் வழிநடத்தினார். ஒருவர் சீனா தேசத்திலும், இரண்டு பேர் ஸ்பெயின் தேசத்திலும் உழைத்தார்கள். அநேகர் கனடா நாட்டிலும், 20க்கும் மேலானவர்கள் அமெரிக்க தேசத்திலும், மற்றும் அநேகர் ஆஸ்திரேலியாவிலும், நியூசிலாந்திலும் தேவனுடைய பணியைச் செய்தார்கள். இந்தியாவிலும் ஒருவர் மிஷிநெரியாக வந்து கர்த்தருடைய ஊழியத்தைச் செய்தார்கள்.

இந்தக் கல்லூரியில் படித்த அநேகர், ஸ்பர்ஜனோடு தொடர்ந்து தொடர்பு கொண்டிருந்தவர்களாகவும் போதகர் கல்லூரி ஊழியத்திற்கு உதவுகிறவர்களாகவும் காணப்பட்டார்கள். அந்தக் கல்லூரி மாணவர்கள் பிற்காலங்களில் அவரிடத்தில் வந்து ஆவிக்குரிய ஆலோசனை பெற்றுச் செல்வதுண்டு. ஆண்டிற்கு ஒரு முறை கல்லூரியின் ஆண்டு விழா காலங்களில் தொடர்ந்து சில நாட்களாக நடக்கும் கூட்டங்களில் கலந்து கொண்டு அதிகமாய் பிரயோஜனப்படுவதுண்டு. 1870 ஆம் ஆண்டு டேபர்னேகில் ஆலயக்கட்டிடத்திற்கு பின்பாக போதகர் கல்லூரி கட்டிடம் கட்டி எழுப்பபட்டது. அது 150 மாணவர்கள் படிக்கக்கூடிய வசதி கொண்டதாயிருந்தது. அதை கட்டுவதற்கு 1500 பவுண்டு பிடித்தது. அதனுடைய பெரும் பகுதியை ஸ்பர்ஜன் கொடுத்தார்.

Reformed Baptist Church

## 10.ஸ்பர்ஜனின் மற்ற ஊழியங்கள்


1865 ஆம் ஆண்டு ஸ்பர்ஜன் Sword & Trowel என்ற பெயரில் மாதாந்திர பத்திரிக்கையை ஒன்றை ஆரம்பித்தார்கள். இந்த பத்திரிகையில் ஸ்பர்ஜன் எழுதிய செய்திகள் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருந்தன. இந்த பத்திரிகையில் மெட்ரோபாலிட்டன் டேபர்னகில் மற்றும் அதைச் சார்ந்த அநேக ஊழியங்களின் செய்திகளும், சீர்திருத்தவாதிகள் ஆகிய உன்னத தேவ மனிதர்களின் வாழ்க்கை சரித்தரங்களும் வெளிவந்தன. ஸ்பர்ஜன் செய்து வந்த தர்ம ஊழியங்களைக் குறித்த செய்திகள் மூலம் அநேகர் அவ்விதமான ஊழியங்களுக்கு உதவி செய்ய பெரிதும் உதவின. ஸ்பர்ஜன் ஆரம்பித்த அனாதை இல்லத்திற்கு வந்த பெரிய வெகுமதியும், போதகர் கல்லூரி கட்டிடம் கட்டுவதற்கும் மற்றும் பெண்கள் அனாதை இல்லம் ஆகியவைகளுக்கு வந்த வெகுமதிகள், பத்திரிகை செய்திகள் படித்தவர்களின் மூலம் அனுப்பபட்டவைகள் ஆகும். இந்த பத்திரிக்கைகளின் சந்தாதாரர்களின் எண்ணிக்கை வருடத்திற்கு வருடம் அதிகரித்ததோடு அல்லாமல் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருந்தது.

சீர்திருத்தவாதிகளின் காலத்திற்கு வேதாகமங்களையும், ஆவிக்குரிய புஸ்தகங்களையும், கைபிரதிகளையும் ஊரூராக சென்று விற்க்கும்படியானவர்களும் இருந்தார்கள். அவர்கள் கோல்போர்ட்டர்கள்(Colporteurs) என்று அழைக்கப்பட்டார்கள். ஸ்பர்ஜன் ஸ்காட்லாந்து சென்ற போது அங்கு இன்னும் கோல்போர்ட்டர்கள் அவ்விதமாக செய்யும் பணிகளையும், அதனுடைய நல்ல பலன்களையும் பார்த்தபொழுது இங்கிலாந்திலும் அவ்விதம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையைக் கொண்டிருந்தார். அதை ஸ்பர்ஜன் பத்திரிகையில் பகிர்ந்து கொண்டபொழுது உடனடியாக வேதாகமங்களையும் புத்தகங்களையும், கைபிரதிகளையும் வாங்குவதற்கான தொகையைக் கொடுக்கும் படி ஒரு சகோதரன் முன்வந்தார். முதலில் 2 பேர் அதற்கென்று நியமிக்கப்பட்டு பணி ஆரம்பிக்கப்பட்டது. 3 வருடங்களுக்குள் 15 பேர் பணி செய்துவந்தார்கள். 1878 ஆம் ஆண்டு 94 கோல்போர்ட்டர்கள் பணி செய்து வந்தார்கள்.

Reformed Baptist Church

அவரவர்களுக்கு குறிப்பிட்ட பகுதிகள் நியமிக்கப்பட்டு அந்தந்த பகுதிகளில் அவ்விதம் பணிசெய்தார்கள்.

மிக ஏழ்மையான மக்கள் வாழும்படியான பகுதிகள், கிராமங்கள் போன்ற இடங்கள் இவர்கள் மூலம் சந்திக்கப்பட்டன. அவர்கள் வேதாகமங்களையும் புத்தகங்களையும் விற்கிறவர்களாக மாத்திரம் அல்ல கைபிரதிகளையும் கொடுத்து மக்களோடு அவர்கள் ஆத்தும காரியங்களைக் குறித்து பேசுகிறவர்களாகவும் காணப்பட்டார்கள். வியாதியஸ்தர்களோடு நேரங்களை செலவழித்து ஜெபித்தார்கள். ஜெபக்கூட்டங்களை நடத்துபவர்களாகவும், தெரு பிரசகங்களை செய்கிறவர்களாகவும் இருந்தார்கள். கோல்போர்ட்டர்களின் ஊழியம் அற்பமானதாக எண்ணக்கூடியதாக இருக்கவில்லை. அந்த நாட்களில் நாத்திகக் கொள்கை கொண்ட புஸ்தகங்களும், மாம்ச இச்சைக்குரிய அநேக புஸ்தகங்களும் விற்கக்கூடிய கடைகள் அநேகம் காணப்பட்டன. கிராமங்களிலும் கூட இவ்விதமான புத்தகங்கள் விற்கப்பட்டு அநேகர் இதை வாசித்துக்கொண்டிருந்த இவ்விதமான நாட்களில் வீடு வீடாக சென்று விற்கப்பட்ட வேதாகமங்களும் தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய அநேக புத்தகங்களும் மக்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தன. மேலும் அநேகர் இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தப்பட இந்த ஊழியம் உதவியாய் இருந்தன.



C. H. SPURGEON PREACHING IN THE AGRICULTURAL HALL, ISLINGTON.

மெட்ரோ பாலிட்டன் டேபர்னேகில் ஆலயத்தில் வாரம்முழுதும் காலையில் இருந்து இரவு முடிய அநேக தேவ பணிகள் நடந்து கொண்டிருந்த இடமாய்க் காணப்பட்டது. அது கட்டப்பட்டு ஆறுவருடங்களாகி, 1867ஆம் ஆண்டு அதற்கு வர்ணம் தீட்டவும் வேண்டிய நிலையில் ஸ்பர்ஜன் லண்டன் மாநகரத்தின் வட பகுதியில் அக்ரிகல்சுரல் ஹால்(Agricultural hall) என்ற பெரிய கட்டிடத்தில் கூட்டங்கள் நடத்திய பொழுது அந்தப்பகுதியில் இருந்த அநேக மக்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்கு மிக பிரயோஜனமாய் இருந்தது. ஸ்பர்ஜன் இந்த காலங்களில் மற்ற சில நாடுகளிலும் சென்று பணி செய்தார். 1865 ஆம் ஆண்டு இத்தாலியில் Baptist சபைகளில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தார். 1866 ஆம் ஆண்டு ஸ்காட்லாந்திலும், 1867 ஆம் ஆண்டு ஜெர்மனி தேசத்திலும் கர்த்தருக்கென்று உழைத்தார். இவ்விதமான ஊழியத்தின் மூலம் அநேக ஆயிரக்கணக்கான மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள். போதகர் கல்லூரியிலும் அநேகர் பயிற்சி பெற்று வந்தார்கள். ஸ்பர்ஜன் ஒவ்வொரு வாரமும் பிரசங்கித்த செய்திகள் அச்சடிக்கப்பட்டு அநேக தேசங்களுக்கு அனுப்பப்பட்டதினிமித்தம் அநேக ஆயிரக்கணக்கான மக்கள் தேவனுடைய வார்த்தையினால் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். ஒவ்வொரு வாரமும் அவரால் பிரசுரிக்கப்பட்ட Sword & Trowel பத்திரிக்கைக்கு அநேக சந்தாதாரர்களும் பெருகியிருந்தார்கள்.

Reformed Baptist Church

இந்நிலையில் பல ஊழிய வேலைகளின் பளுவினிமித்தம் ஸ்பர்ஜனின் சரீரம் பெலவீனப்பட ஆரம்பித்தது. 1867 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அவரது 34 ஆம் வயதில் படுத்த படுக்கையானார். அவரது கால், கைகளின் கணுக்களில் வீக்கங்கள் ஏற்ப்பட்டு கடுமையான வலியினால் பாதிக்கப்பட்டார். நடப்பதற்கும் கூடாதவராய் பாதித்த இந்த வேதனை, வாழ்நாள் முழுவதுமாய் அவரை கஷ்டத்திற்குள்ளாக்கிற்று.

1866 ஆம் ஆண்டு ஸ்பர்ஜன் மெட்ரோபாலிட்டன் டேபர்னேகில் ஆலயத்தின் ஜெபக்கூட்டத்தில் *"நாம் இந்த பட்டணத்தில் பெரிய சபையாய் இருக்கிறோம். ஆகவே தேவன் நமக்கு இன்னும் செய்யும்படியான பல ஊழியங்களை கொடுக்கும் படியாகவும், அதற்கு தேவையான பண உதவியையும் தேவன் அனுப்பி தருமாறும் ஜெபித்தார்".* ஜெபித்த ஒருசில நாட்களில் ஸ்பர்ஜனுக்கு மிஸஸ். ஹில்யார்ட் என்ற அம்மையாரிடம்

இருந்து ஒரு கடிதம் வந்தது. ஸ்பர்ஜனுடைய ஜெபத்தைப் பற்றி ஒன்றுமறியாத அந்த அம்மையார், தன்னிடம் இருபதாயிரம் பவுண்டுகள் இருப்பதாகவும் அதை அனாதை பிள்ளைகள் பயிற்றுவிக்கவும், படிக்கவும் உபயோகப்படுத்தும் படி தான் கர்த்தரால் ஏவப்பட்டது குறித்தும், ஸ்பர்ஜன் அதை செய்யும்படியாக கேட்டு எழுதினார். அந்த நாட்களில் இது ஒரு மிக மிக பெரிய தொகையாக இருந்தது. ஸ்பர்ஜனின் ஜெபத்திற்கு பதிலாக தேவன் இதை அனுப்பியிருக்கிறார் என்று அறிந்து அவர் அதை ஏற்றுக்கொண்டார்.

ஸ்டாக்வெல் என்ற இடத்தில் இரண்டரை ஏக்கர் நிலத்தை வாங்கி அனாதை இல்லத்தை கட்ட ஆரம்பித்தார். அநேகர் அதை கட்டும் படியாக ஏவப்பட்டு உதவிகளனுப்பினார்கள். தனி தனி வீடுகள் போல் கட்டப்பட்டு அதில் பிள்ளைகள் மெய்யான கிறிஸ்தவ அன்போடு பராமரிக்கப்பட்டார்கள். இந்த அனாதை விடுதியில் சேர்க்கப்பட்ட பிள்ளைகள் எந்த பாகுபாடில்லாமல் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அதில் வெள்ளையர்களும், கறுப்பர்களும், யூதர்களும், புறஜாதிகளும், கத்தோலிக்கர்களும், புரோட்டஸ்டன்ட்களும் ஆகிய எல்லா பிரிவுகளிலுமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். முதிய பெண்களுக்கென்று அனாதை விடுதியும் ஆரம்பிக்கப்பட்டன. இதில் அநேகர் ஆண்டவருடைய சத்தத்தைக்கேட்டு, பிற்காலங்களில் இரட்சிக்கப்பட்டார்கள். அதில் ஊழிய அழைப்பைபெற்று ஸ்பர்ஜன் நடத்திய போதகர் கல்லூரியில் பிற்காலத்தில் ஊழியத்திற்கு சென்றவர்களும் உண்டு. ஸ்பர்ஜன் அவ்வப்போது இந்த அனாதை விடுதிகளுக்கு சென்று பிள்ளைகளிடம் அன்போடும், பரிவோடும் பேசுவார். வியாதியுற்ற பிள்ளைகளுக்கென்று தனி அறை வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தார்கள். அவர்கள் அந்த பிள்ளைகளிடத்தில் சென்று அவர்களுக்காக ஜெபிப்பதுமுண்டு.

பிறகு பெண்பிள்ளைகளுக்கென்று தனியான விடுதி கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டார்கள். ஸ்பர்ஜன் மெட்ரோபாலிட்டன் டேபர்னேகல் ஆலயத்தின் அருகில் ஒரு இடத்தை வாங்கி அதில் முதியோர்களை பராமரிக்கும் விதமாக கட்டிடங்களை கட்டி எழுப்பினார். அதில் அவர்களுக்கு இடமும் ஆகாரமும் உடைகளும்

Reformed Baptist Church

கொடுத்து மிகவும் தேவையிலிருந்த அந்த மக்களைப் பராமரித்தார்கள். அதின் செலவு பெரிய பாரமாக இருந்தாலும் தன் சொந்த கையிலிருந்து அதின் தேவைகளுக்கு அதிகம் செலவிட்டார். அதோடு நின்று விடாமல் அந்த கட்டிடத்தோடு இணைத்து ஒரு பள்ளியையும் ஆரம்பித்தார். பணம் கட்டினால் மட்டும் படிக்கமுடியும் என்று இருந்த அந்நாட்களில் அவ்விதம் பணம் கட்டமுடியாத ஏழை மாணவர்களுக்காக இந்த பள்ளியை கட்டினார். 400 மாணவர்கள் அதில் படித்தார்கள். பிற்காலங்களில் சபை மக்களும் மற்ற அநேகரும் இந்த பணிகளுக்கு உதவிசெய்யும் படி கர்த்தர் எழுப்பினார்.

தன்னுடைய சரீர பெலவீனத்தின் மத்தியிலும் ஸ்பர்ஜன் தன்னுடைய நேரத்தையும் பொருட்களையும் அதிகமாய் இவைகளுக்காக செலவிட்டார். அவருடைய ஊழியத்தின் 25 வது ஆண்டு நிறைவில் அவருடைய சொந்த உபயோகத்திற்கென்று மெட்ரோபாலிட்டன் சபையார் அளித்த வெகுமதியின் பெரும் பகுதியை அனாதை விடுதிக்கும் முதியோர் இல்லத்திற்கும் கொடுத்துவிட்டார்.

Reformed Baptist Church

## 11. இன்பங்களும் துன்பங்களும்

1860 ஆம் ஆண்டிலிருந்தே ஸ்பர்ஜனும் அவருடைய மனைவியும் தொடர்ந்து வியாதிகளால் பாதிக்கப்பட்டு பெலவீனம் அடைந்தார்கள். ஸ்பர்ஜனின் சரீர பெலவீனத்தைக்கண்ட சபையார் ஸ்பர்ஜனுக்கு ஊழியத்தில் உதவியாயிருக்கும்படி அவருடைய சகோதரர் ஜேம்ஸ் என்பவரை உதவி போதகராக நியமித்தார்கள். சபை நன்கு வளர்ந்து 1860 வது ஆண்டில் 10 டீக்கன்மார்களும் 20 மூப்பர்களும் இருந்தார்கள். சபை மக்கள் சந்திப்பு, வியாதியஸ்தர்களை சந்தித்தல் இன்னும் மற்ற சபை பணிகளிலும் இவர்கள் ஸ்பர்ஜனுடைய பெரிதான ஊழியத்தில் பங்கு வகித்தார்கள்.

1860 ஆம் ஆண்டு பெரிதான தொகை கொடுத்து அமெரிக்காவில் பணி செய்ய அழைக்கப்பட்ட போதிலும் ஸ்பர்ஜன் தன்னுடைய சரீர பெலவீனத்தின் நிமித்தமும், பணத்தை பிரதானமாக எண்ணாததினிமித்தமும் அங்கு அவர் செல்லவில்லை. ஸ்பர்ஜனின் மனைவி சரீரத்தில் வெகு அதிகமாய் பாதிக்கப்பட்டார்கள். ஸ்பர்ஜனின் மனைவியும் படுத்த படுக்கையாக இருந்த வேளைகளிலும் ஸ்பர்ஜனை ஊழியத்தில் உற்சாகப்படுத்தினவர்களாய் காணப்பட்டார்கள்.

இந்தக் காலத்தில் அவர்களுடைய வீடு இடிக்கப்பட்டு அவர்கள் வியாதிகளுக்கு ஏற்றவாறு சில சவுகரியங்கள் உடையதாக கட்டும் படியாக திட்டமிடப்பட்டு அவ்வேலை ஆரம்பிக்கப்பட்டது. ஸ்பர்ஜனுடைய மனைவி இந்நாட்களில் ப்ரைட்டன்(Brighten) என்ற இடத்தில் தங்கி இருந்தார்கள். ஸ்பர்ஜன் இரயில் மூலமாக சென்று வந்தார். இந்த காலத்தில் ஸ்பர்ஜனுடைய மனைவிக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டியதாயிருந்தது. குளோரோபார்ம் மயக்க மருந்தை கண்டுபிடித்த ஜேம்ஸ் ஸிம்சன் எந்த கட்டணமும் இல்லாமல் ஸ்பர்ஜனின் மனைவிக்கு அறுவைசிகிச்சை செய்தார். அந்த அறுவை சிகிச்சை வெற்றிகரமாக இல்லாததினால் அதற்கு பின்பாக ஸ்பர்ஜனின் மனைவி கால் நடக்க முடியாதவரைப் போனார். புதிதாக கட்டப்பட்ட வீடு ஓரளவு அவர்களுக்கு அந்தநிலையில் ஏற்ற சில வசதிகளுடன் பிரயோஜனமாயிருந்தது. ஸ்பர்ஜன் தன்னுடைய மனைவியின் இவ்விதமாக முடியாமையின் மத்தியிலும், அவருடைய சரீரம் பாதிக்கப்பட்ட நிலையிலும்

Reformed Baptist Church

ஊழியத்தின் பணிகளை தொடர்ந்து நிறைவேற்ற முயற்சித்தார். ஆனாலும் அவரும் வியாதிப்பட்ட மனிதனாய் அவரது மனைவிக்கருகில் படுத்த படுக்கையானார். அநேக நாட்களின் வியாதிக்கு பின்னால் சிறிது பெலன் பெற்று எழுந்த வேளையில், பெரியம்மையினால் பாதிக்கப்பட்டு முற்றிலும் வீழ்த்தப்பட்டார். சரீரத்தின் கணுக்கள் ஒவ்வொன்றிலும் ஊசி ஏற்றுவது போல கடுமையான வலியுடன் கூடிய Gout என்னும் இந்த மூட்டு வலியினால் ஸ்பர்ஜன் மிகவும் வேதனைப்பட்டார். அதோடு இந்த வியாதி அதிகமான மனச்சோர்வை உண்டாக்கக் கூடியதாகவும் இருந்தது.

படுக்கையின் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்திற்கு திரும்புவதும் கூட மிகக் கொடிய வேதனையை கொடுத்தது. இரவில் தூக்கமின்மையும், நாள் முழுவதும் கொடிய வலியுடன் ஸ்பர்ஜன் அதிகம் வேதனைப்பட்டார். ஸ்பர்ஜன் மிகவும் பெலவீனமடைந்த இவ்வேளையில் இங்கிலாந்தின் குளிர் அதிக கொடியதாக இருந்ததின் நிமித்தமும், வெப்பப்பகுதியான இத்தாலிய நாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஸ்பர்ஜனின் மனைவி பிரயாணம் செய்ய முடியாதவராய் இருந்ததின் நிமித்தம் அவரோடு செல்ல முடியவில்லை. அங்கு அவருடைய உடல் நிலை சிறிது தேறினபின் இங்கிலாந்து வந்த போது மறுபடியும் கடுமையான Gout வலியினால் பாதிக்கபட்டார். அவருடைய இவ்விதமான வியாதிபட்ட நிலையில், அவருடைய மனைவியின் படுத்த படுக்கையும் அவர்களை உபத்திரவம் என்ற உலையில் அதிகமாய் சோதித்தன. இவ்விதமாக சோதனைகளின் மத்தியிலும் ஸ்பர்ஜனின் இரட்டை பிள்ளைகள் அவர்களுக்கு அதிகமான மகிழ்ச்சியைக் கொடுத்தார்கள். அவர்கள் இரட்சிக்கப்பட்டு 1874 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் தேதி ஞாயிறு அன்று சபையில் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றார்கள். ஸ்பர்ஜன் வியாதியின் நிமித்தம் சில மாதங்கள் ஞானஸ்நானம் கொடுக்க முடியவில்லை. அதற்கு பதிலாக அவருடைய சகோதரன் ஜேம்ஸ் ஞானஸ்நானம் கொடுத்துவந்தார். ஆனால் இந்த குறிப்பிட்ட நாளில் ஸ்பர்ஜனே தன மகன்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அப்பொழுது அவர்களின் வயது 18. ஞானஸ்நானம் பெற்று ஒரு மாதத்திற்கு பிறகு, ஒரு ஞாயிற்று கிழமையில் வென்ஸ் வொர்த் பாப்டிஸ்ட் சபையில் காலை ஆராதனையை ஒரு மகனும், மாலை ஆராதனையை இன்னொரு மகனுமாக நடத்தினார்கள்.

Reformed Baptist Church



ஒரு மகனான சார்லஸ் ஸ்பர்ஜன் க்ரீன்விச் சபையின் போதகராக நியமிக்கப்பட்ட பொழுது அந்த முதல் ஆராதனையில் ஸ்பர்ஜன் தன்னுடைய மகனை பார்த்து, **“கிறிஸ்துவையே பிரசங்கி, கிறிஸ்துவையே உயர்த்தி பிரசங்கி”** என்று சொன்னார். அவருடைய இரு மகன்களும் அவ்வபொழுது டேபர்னேகில் சபையிலும் பிரசங்கித்தார்கள். மற்றொரு மகிழ்ச்சி தரும் செய்தியாக 1870 ஆம் ஆண்டு டேபர்னேகில் ஆலயக் கட்டிடத்திற்கு பின்பாக போதகர் கல்லூரி கட்டிடம் கட்டி எழுப்பப்பட்டது.

Reformed Baptist Church

## 12. ஸ்பர்ஜனின் மனைவியும் அவர்களது பணியும்

ஸ்பர்ஜனின் மனைவி அநேக ஆண்டுகளாக நடக்க முடியாத நிலையில் காணப்பட்டாலும் எப்பொழுதும் தன் கணவனின் ஊழியத்தை உற்சாகப்படுத்துகிறவர்களாகவும், தன்னுடைய பாடுகளை குறித்து அதிகம் குறைப்பட்டுக் கொள்ளாதவர்களாகவும் காணப்பட்டார்கள். அங்கும் இங்கும் அலைந்து ஆண்டவருக்காக உழைக்கும் வாஞ்சையை இவர்கள் கொண்டிருந்தாலும், அவர்களால் முடியாத நிலையிலும் பல இடங்களில் சென்று உழைக்கும் தன் கணவனின் பின்னணியில் ஒரு பெரிய தாங்கும் கல் போல, மறைமுக ஊழிய பணியில் சிறந்து விளங்கினார்கள். மிகுந்த இரக்க சிந்தை உள்ளவர்களும், அதிக ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள்.



Mrs.Susannah Spurgeon
January 15, 1832 to October 22, 1903

1875 ஆம் ஆண்டு **'ஸ்பர்ஜனின் அறிவுரைகள்'** என்ற புத்தகம் வெளிவந்த போது அதை அவர்கள் வாசித்துவிட்டு இந்த புத்தகத்தை இங்கிலாந்தில் உள்ள ஒவ்வொரு போதகருக்கும் அனுப்ப வாஞ்சிக்கிறேன் என்று சொன்னார்கள். அப்பொழுது ஸ்பர்ஜன் தன மனைவி அதை செய்யும்படி உற்சாகப்படுத்தினார். அப்பொழுது ஸ்பர்ஜனின் மனைவி சிறிது சிறிதாக சேர்த்துவைத்திருந்த பணத்தை எண்ணிப்பார்த்த பொழுது அது 100 புத்தகங்கள் வாங்குவதற்கு போதுமானதாக இருந்தது. அதில் நூறு புத்தகங்கள் வாங்கி 100 தேவையான போதகர்களுக்கு அனுப்பிவைத்தார்கள். தான் செய்ததை மற்றவர்களுக்கு சொல்வதை அவர்கள் விரும்பவில்லை என்றாலும் அது மறைந்திருக்கவில்லை. ஆனாலும் இதையறிந்த அநேக நண்பர்கள் இவ்விதமான புத்தகங்கள் வாங்க பணம் அனுப்ப துவங்கினார்கள். அந்த புத்தகங்களை பெற்ற போதகர்கள் எழுதின நன்றி கடிதங்கள் அந்த போதர்களின் மிகுந்த தேவையையும் உணர்த்திற்று. ஆகவே மறுபடியுமாக சங்கீத புத்தகத்தின் அடிப்படையில் ஸ்பர்ஜன்

Reformed Baptist Church

எழுதிய **'தாவீதின் பொக்கிஷ சாலை'** என்ற புத்தகத்தை அநேக போதகர்களுக்கு அனுப்பிவைத்தார்கள். ஒருவர் அனுப்பிய பண உதவியால் நார்த் வேல்ஸ் (North Whales) என்ற பகுதியிலிருந்த 500 போதகர்களுக்கு "ஸ்பர்ஜனின் அறிவுரை" புத்தகங்கள் அனுப்பப்பட்டன. அவ்விதமாகவே South Whales பகுதிகளுக்கு ஒருவர் அனுப்பின உதவியினால் இரண்டு மடங்கு புத்தகங்கள் அனுப்பப்பட்டது. இந்தப்பணி ஆரம்பித்த 5 மாதங்களுக்குள்ளாக 3058 புத்தகங்கள் அவ்விதமாக அனுப்பப்பட்டது. அவைகளை பெற்றுக்கொண்ட போதகர்கள் எழுதிய கடிதங்கள் உள்ளத்தை மிகவும் உருக்கக்கூடியதாய் இருந்தது. ஆகவே "போதகர்கள் Book Fund" என்ற இந்த பணியை செய்துகொண்டிருந்த இந்நாட்களில், அநேக போதகர்கள் மிகவும் குறைவான சம்பளங்கள் மத்தியில் மிகவும் உண்மையாக செய்யும் பணிகளும், அவர்களுடைய மனைவிகள், குழந்தைகளின் தேவைகள் படிப்புக்காரியங்கள் யாவையும் குறித்து ஸ்பர்ஜனின் மனைவி உள்ளத்தில் பாரம் கொண்டிருந்தார். ஆகவே அநேக போதகர்களுக்கு அவர்களுடைய கஷ்டங்கள் மத்தியில் உதவி செய்யும் நோக்கத்துடன் "போதகர் உதவி நிதி" என்ற ஒன்றையும் ஆரம்பித்தார்கள். Sword & Trowel என்ற பத்திரிகையில் இதனுடைய தேவையைக் குறித்து எழுதப்பட்டபொழுது அநேகர் உதவி செய்ய முன்வந்தார்கள்.

போதகர்களுடைய குடும்பகளுக்கு பணமும், உடைகளும் கம்பளிகளும் இதன் மூலம் அனுப்பப்பட்டன. ஸ்பர்ஜனின் மனைவியே பணம் அனுப்புவர்களுக்கு கடிதங்கள் எழுதியும், வரவு செலவு சரியாக வைக்கிறவர்களாகவும், அதை அனுப்புவதிலும், தேவையான போதகர்களுக்கு பதில் எழுதுகிற அனைத்து வேலைகளையும் தானே கவனித்துக் கொண்டார்கள். அதிக சரீர பெலவீனத்தின் மத்தியிலும், வியாதிப்பட்ட நிலையிலும் இந்தப் பணிகளை உண்மையாய் செய்ய பிரயாசப்பட்டார்கள். ஸ்பர்ஜன் தன் மனைவி இவ்விதம் செய்யும் பணியைக் குறித்து இவ்விதமாக சொன்னார், **"என்னுடைய மனைவி தெய்வீக பெலத்தால் நிரப்பப்பட்டு இதை செய்கிறார். இவ்விதம் பணிகளை செய்யும்படியாக கர்த்தர் அவர்களை வழி நடத்தியதையும், இதின் மூலம் அவருடைய சரீர பெலவீனத்தின் மத்தியிலும் அடையும் சந்தோசத்தைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். பாடுகள், உபவத்திரங்கள் மத்தியிலும் கடந்து போகும் தம்முடைய பிள்ளையை தேவையுள்ள அநேக மக்களுக்கு உதவியாயிருக்கும்படி அவருடைய பணியில் இவ்விதமாய்**

Reformed Baptist Church

**உபயோகப்படுத்துவது கர்த்தருக்குப் பிரியமாய் இருக்கிறது. இவர்கள் செய்யும் இந்த பணியின் நிமித்தம் தன்னுடைய சரீர பெலவீனங்கள், வியாதிகள், வேதனைகள் இவைகளை மறந்து கர்த்தருக்குள்ளாக சந்தோஷத்தினால் நிரப்பப்படுவது அநேகர் கற்றுக் கொள்ள கூடிய அனுபவமாய் இருக்கிறது. தன்னுடைய சொந்த துக்கங்களை மறந்து மேற்க்கொள்ளுவதற்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தன்னையே தியாகம் செய்வது பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் மருந்தாய் இருக்கிறது."**

ஸ்பர்ஜனின் மனைவி இதைக் குறித்து இவ்விதமாய் எழுகிறார், "மற்றவர்களை மகிழ்ச்சிப் படுத்தும்படியாக எனக்குதவி செய்து வருகிற அநேக நண்பர்களுக்கு நான் அதிகம் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு இரண்டு மடங்கான ஆசீர்வாதம் கிடைக்கிறது. நான் பெறுகிறவளாகவும், கொடுக்கிறவளாகவும் இருக்கிறேன். என்னுடைய இயலாமையின் மத்தியிலும் செய்யும் இவ்விதமான பணி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இதன் மூலம் நான் ஆசீர்வாதமும், அன்பும் நிறைந்த சூழ்நிலையில் வாழ்வதாக உணர முடிகிறது. நான் மெய்யாலும் சங்கீதக்காரனோடு கூட என் பாத்திரம் நிரம்பி வழிகிறது என்று சொல்லக்கூடியவளாக கர்த்தர் என்னை வைத்திருக்கிறார். "

தன் கணவரின் பிரசங்க செய்திகள், புத்தகங்கள் மற்ற அநேக ஆவிக்குரிய புத்தகங்களை மற்றவர்களுக்கு தொடர்ந்து அனுப்பினார்கள். இந்த பணியின் மூலம் தொடர்ந்து 21 நாடுகளில் இந்தியா உட்பட பல சபை மக்களுக்கும் புத்தகங்கள் அனுப்பப்பட்டது. அதிமாத்திரமல்லாமல் அநேக போதகர்கள், அவர்களுடைய மனைவிகள், பிள்ளைகள், குடும்பகளுக்கும் தொடர்ந்து உதவிகள் செய்யப்பட்டு வந்தன. 1855 ஆம் ஆண்டு "கர்த்தரின் உதவி பணியில் 10 ஆண்டுகள்" என்ற புத்தகத்தை ஸ்பர்ஜனின் மனைவி வெளியிட்டார்கள். அதில் எல்லா வரவு செலவு கணக்குகளும், அனுப்பப்பட்ட புத்தகளின் பெயர்கள், பெயர் அறிவிக்கப்படாத அநேக போதகர்களின் குடும்ப போராட்டங்களை குறித்த செய்திகள் வெளியிடப்பட்டது. இந்த புத்தகத்தில் ஸ்பர்ஜனின் மனைவியவர்கள் தேவையான மக்களுக்காக கொண்டிருந்த உதவி செய்யும் மனப்பான்மையும், கரிசனையும் நன்கு காணப்பட்டது. 1895 ஆம் ஆண்டு "10 வருடங்களுக்கு பிறகு" என்ற புத்தகத்தை எழுதுவதற்கு 4 ஆண்டுகளுக்கு முன்பாக

Reformed Baptist Church

ஸ்பர்ஜன் மரித்துவிட்டார். இந்த புத்தகத்தில் அவருடைய துயரங்களையும் தனிமை உணர்வையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதில் இவ்விதமாகவும் ஒரு இடத்தில் எழுதியிருக்கிறார்கள்.



“இரண்டு வழிப் பிரயாணிகள் வாழ்க்கையின் பாதையில் கரம் கோர்த்து நடந்து சென்றார்கள். அவர்கள் இரண்டு இருதயங்களும் ஒன்றாய்பிணைக்கப்பட்டு இருந்தன. அவர்கள் கடந்து செல்லவேண்டிய நதிகளும், ஏறிச்செல்ல வேண்டிய மலைகளும், போராட வேண்டிய பயங்கரமான எதிராளிகளும் மற்றும் அநேக அபாயங்களும் இருந்தன. ஆனால் அவர்களை வழி நடத்தின வழிகாட்டி ஒருபோதும் தோல்வியுராத விடுதலை நாயகன், மெய்யான தேவன். அவர்களுடைய பாடுகள் மத்தியிலும் அவகளிருவரும் கர்த்தரைப்பாடி ஒன்றாய் சென்று கொண்டிருந்தார்கள். திடீரென்று அவர்களிருவரையும் சந்தித்திராத ஒரு புயல் வந்தது. இருவழிப்பாதையை அவர்கள் சந்தித்தார்கள், ஒருவர் காணக்கூடாத மகிமையில் எடுத்துக்கொள்ளப்பட்டார். மற்றொருவர் தனிமையாய் புயலின் நடுவில் கடந்து சென்று கொண்டிருக்கிறார். இந்த இரண்டு பிரயாணிகளையும் அநேக ஆண்டுகளாக வழிநடத்தி வந்த தேவனுடைய இரக்கமும் கிருபையும் தனிமையாய் நடந்து செல்லும் பிரயாணியை தொடர்ந்து பாதுகாத்து வழிநடத்துகிறது. அமர்ந்த தண்ணீரண்டையில் தளர்ந்து போன பாதங்களுக்கு ஆறுதல் கட்டளையிடப்படுகிறது. மேலும் விடப்பட்டவரின் கரங்களில் ஒரு பணியை கொடுத்திருக்கிறார். தன்னைப்போல வாழ்க்கை பாதையில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளுக்கு உதவி செய்யும் படியாகவும், மற்றவர்களை ஆறுதல் படுத்தி தன் ஆழமான துக்கத்தை மறக்கவும் கிருபை செய்கிறார். ”

Reformed Baptist

# 13. ஸ்பர்ஜனின் தொடர்ந்த 10 ஆண்டு ஊழியங்கள்

1875 ஆம் ஆண்டு முதல் 1885 ஆவது ஆண்டு வரை ஸ்பர்ஜனின் ஊழியத்தின் முயற்சிகள் மூலம் மிகுந்த நல்ல பலனைக் கொடுத்தது. அவருடைய பிரசங்கத்தின் மையப்பொருள் பவுலைப்போல **"நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவையே கர்த்தரென்று பிரசங்கிக்கிறோம்"** என்பதாக இருந்தது. அவர் எப்பொழுதும் பிரசங்கிக்கும்பொழுது சிலுவையின் மறைவில் தன்னை வைத்து கிறிஸ்துவை உயர்த்திப் பிடிக்கவே பிரயாசப்பட்டார். விசுவாசத்தின் அடிப்படை சத்தியங்களை ஒருபோதும் தவறாது போதித்து ஆத்துமாக்கள் தேவனோடு ஒப்புரவாகும் படியாக எப்போதும் மன்றாடினார். ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் அநேகர் அவருடைய ஊழியத்தின் மூலம் தங்கள் கிறிஸ்துவை சாட்சியிடும் படியாக வந்து கொண்டிருந்தனர். இந்த காலங்களில் ஸ்பர்ஜனும் அவருடைய மனைவியும் அதிகமாக வியாதிப்பட்டு சரீரத்தில் பெலவீனமாகவே இருந்தார்கள். அவ்வபொழுது அவருடைய மூட்டுகளில் வீக்கம் ஏற்பட்டு சரீரம் முழுவதும் அதிக கஷ்டப்பட்டார். இதினிமித்தம் அநேக சமயங்களில் சோர்வினாலும் தாக்கப்பட்டார். 1879 ஆம் ஆண்டு தொடர்ந்து பாதிக்கப்பட்ட வியாதியினால் 5 மாதங்கள் பிரசங்கிக்க கூடாதவராய்ப் போனார். ஏறக்குறைய எஞ்சிய காலங்கள் முழுவதும் சரீர வியாதி அவருக்கு அதிகமான வேதனையை உண்டாக்கிற்று.



Reformed Baptist Church

அமெரிக்காவில் மிக புகழ்பெற்ற பிரசங்கி டி.எல்.மூடி இங்கிலாந்து தேசத்தில் வந்து ஸ்பர்ஜனின் பிரசங்கத்தை கேட்ட நாள் முதல் ஸ்பர்ஜனின் ஒரு நல்ல நண்பராக விளங்கினார். அவர்கள் இருவர் மத்தியிலும் சில கொள்கை வேறுபாடுகள் காணப்பட்டாலும் ஒருவரையொருவர் அதிகம் நேசித்தனர். 1879 ஆம் ஆண்டில் ஸ்பர்ஜனின் ஊழியத்தில் 25 வது ஆண்டு நிறைவு விழாவை டேபர்னேகில் ஆலயத்தில் சபை மக்கள் கொண்டாடினார்கள். அவர்கள் ஸ்பர்ஜன் தன்னுடைய தேவைகளுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளும் படியாக ஒரு பெரும் தொகையை(6476 பவுண்டுகள்) அன்பளிப்பாக கொடுத்தனர். ஸ்பர்ஜன் உடனடியாக தான் நடத்தி வந்த அனாதை ஆசிரமம், முதியோர் இல்லங்கள் போன்ற ஊழியங்களுக்கு கொடுத்துவிட்டார். அவருடைய மனைவியின் உடல் நலம் கருதியும் அவர் தற்போது வசித்து வந்த வீடு ஜன நெரிசல் உள்ள பகுதியிலிருந்ததினிமித்தமும் அவர் இரண்டாவதாக கட்டியிருந்த வீட்டை விற்று விட்டு நகர் புறத்தை தள்ளி பியூலா ஹில் (Bealuah Hill) என்ற இடத்திற்கு குடியேறினர். இந்த அமைதியான சூழ்நிலையில் தொடர்ந்து அவர் இலக்கிய பணி செய்வதற்கு ஏற்றதாக இருந்தது. அவர் வைத்திருந்த 12 ஆயிரம் புத்தகங்கள் வைப்பதற்கு ஏற்றவாறு ஒரு புத்தக சாலை அமைப்பதற்கும், மேலும் அவருக்கு வரும் கடிதங்களுக்கு பதில் எழுதும் படியாக ஏற்ற சூழ்நிலையும் இங்கு காணப்பட்டது. அந்த நாட்களில் மையைத்தொட்டு எழுதும் பேனாக்கள் உபயோகப்படுத்தின நிலையிலும் வாரத்தில் 500 கடிதங்களுக்கு ஸ்பர்ஜன் பதிலளிப்பார். அவருடைய விரல் மூட்டுகள் வீங்கின நிலையிலும் எழுதுவது வேதனை கொடுக்கும் பணியாக இருந்தாலும் அவர் அதைத் தொடர்ந்து செய்துவந்தார். ஸ்பர்ஜனின் திருமணம் நடந்து 25 ஆண்டுகளின் நிறைவு ஜனவரி 8, 1881 ஆம் ஆண்டு வந்தது. அந்த நாளில் ஸ்பர்ஜன் அதிகமாய் வியாதியினால் தாக்கப்பட்டதினிமித்தம் ஏற்பாடு செய்த படி டேபர்னேகில் ஆலயத்திற்கு செல்ல முடியவில்லை. தன் வீட்டிலேயே வாழ்த்த வந்தவர்களைச் சந்தித்தார். 1884 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஸ்பர்ஜன் மிகவும் அதிக வியாதிபட்டவராய், பிரான்ஸ் தேசத்தில் மென்டோன் என்ற இடத்தில் படுத்த படுக்கையாய் காணப்பட்டார். சபை மக்களுக்கு அவர் இவ்விதம் கடிதம் எழுதினார்.

Reformed Baptist Church

**"அன்பான சபை மக்களே, நான் முற்றிலும் படுத்த படுக்கையாய் காணப்படுகிறேன். என் சரீரத்தின் ஒவ்வொரு பகுதியும் வேதனைக்குள்ளாகபட்டிருக்கிறது. வலது பக்கத்தாகிலும், இடது பக்கத்தாகிலும் திரும்பினால் வேதனை கொடியதாயிருக்கிறது. "**

இவ்விதமாய் எழுதி இரண்டு வாரங்கள் கழித்து அவர் இங்கிலாந்து சபையில் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் பிரசங்கித்தார். மறுபடியுமாய் அவர் வியாதிப்பட்டு படுத்தப்படுக்கையானார். ஸ்பர்ஜன் 50 வது பிறந்தநாளான ஜூன் மாதம் 19 ஆம் தேதி 1854 ஆம் ஆண்டு ஸ்பர்ஜனை அநேகர் வாழ்த்தினார்கள். அந்த நாள் மாலை ஆலயத்தில் ஒழுங்கு படுத்தப்பட்ட கூட்டத்தில் ஸ்பர்ஜனுடைய அப்பா, அவருடைய சகோதரனாகிய ஜேம்ஸ், அவருடைய மகன் சார்லஸ் அவரை வாழ்த்திப் பேசினார்கள். வியாதின் நிமித்தம் படுத்த படுக்கையாய் இருந்த ஸ்பர்ஜனுடைய மனைவி அந்நாளில் சிறிது சுகம் பெற்றவர்களாய் அந்த கூட்டத்தில் வந்து கலந்து கொண்டது பெரும் மகிழ்ச்சிக்குரியதாய்க் காணப்பட்டது. டி.எல்.மூடி பிரசங்கியாரும் அதில் கலந்து கொண்டு பேசினார்.

ஸ்பஜனின் ஆலோசனையின் பேரில் டேபர்னேகில் சபையிலிருந்து 250 பேர் பிரிந்து பெட்காம் என்ற இடத்தில் ஒரு சபையை ஆரம்பித்தார்கள். அநேக புதிய ஆத்துமாக்கள் சபையில் சேர்ந்து கொண்டே இருந்ததினிமித்தம், ஸ்பர்ஜன் தன் சபை மக்கள் பிரிந்து சென்று புதிய சபையை உருவாக்குவதை வரவேற்றார். இவ்விதமான சூழ்நிலையிலும் ஸ்பர்ஜன் வெளியில் சில இடங்களிலும் சென்று ஊழியம் செய்தார். இங்கிலாந்தின் வடப்பகுதியில் லீட்ஸ் (Leeds) என்ற இடத்திலும் பிரிஸ்டல் (Bristol) என்ற இடத்திலும் திரளான மக்கள் கூடி தேவனுடைய வார்த்தையைக் கேட்டார்கள். அந்த கூட்டங்களில் இடமில்லாமையால் அநேகர் திரும்பி செல்ல நேரிட்டது. ஸ்காட்லாந்து தேசம் சென்று ஸ்பர்ஜன் பிரசங்கித்த போது அத்தேசத்தில் மலைச்சாரலில் திறந்த வெளியில் 10,000 முதல் 15,000 மக்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்டனர்.

ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் தொடங்கும் இங்கிலாந்தின் மிகுதியான குளிரானது ஸ்பர்ஜனின் சரீரத்திற்கு அதிக பாதிப்பு உண்டாக்கினதால், பிரான்சு நாட்டில் மென்டோன் என்ற இடத்திற்கு சென்று அவ்வபொழுது தங்கினார். ஸ்பர்ஜன் நடத்திய

Reformed Baptist Church

போதகர் கல்லூரியிலும் அநேகர் பயிற்சி பெற்று தேவனுடைய வார்த்தையை வல்லமையாய் பிரசங்கிக்கிறவர்களாய்கள் எழும்பினார்கள். ஏறக்குறைய 900 பேர் கல்லூரியில் படித்து வெளியேறி சென்றிருந்தார்கள். அவர்களும் ஸ்பர்ஜனை போலவே மறுபிறப்பு அடைந்தவர்களுக்கு மாத்திரம் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். அவ்விதம் அவர்கள் ஊழியங்கள் மூலம் ஞானஸ்நானம் பெற்றவர்கள் ஏறக்குறைய 30,000 பேராயிருந்தார்கள். வேதாகமக் கல்லூரியில் படித்த இரண்டு பேர் ஒரே வருடத்தில் 1,100 கூட்டங்களை நடத்தியிருந்தார்கள். அடுத்த ஆண்டு ஸ்பர்ஜன் வியாதிப்பட்டு 6 வாரங்கள் மென்டோன் என்ற இடத்தில் இருந்த போது சபை மக்கள் செய்த ஊழியத்தினிமித்தம் மெட்ரோபாலிட்டன் டேபர்னேகில் சபையில் புதிதாக 400 பேர் விசுவாசத்திற்குள்ளாக வந்தனர். ஸ்பர்ஜன் தான் அடிக்கடி வியாதிப்பட்டு சபையில் பிரசங்கிக்க முடியவில்லையே என்று வருத்தப்பட்டபோது சபை மக்கள் ஆண்டு முழுவதுமிருக்கும் போதகரை காட்டிலும் நீங்கள் எங்களுக்கு 6 மாதம் போதித்தால் அதுவே போதும் என்று சொல்லி உற்சாகப்படுத்தினார்கள்.

Reformed Baptist Church

## 14. ஸ்பர்ஜனின் குணநலன்களும் புத்தகங்களும்

ஸ்பர்ஜன் மிகவும் தாழ்மையான ஒரு மனிதர். அவருடைய எளிமையான தன்மையினிமித்தம் ஏழை, பணக்காரர், படித்தோர், படிக்காதவர்கள் ஆகிய எல்லோரிடத்திலும் ஒரே மாதிரி பழகுவதில் அவருக்கு பிரச்சனையில்லை. அதே போல் எல்லா விதமான மக்களும் அவரிடத்தில் நெருங்குவதற்கு தயங்க வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. 20 வயதிலேயே அதிக புகழை எட்டிய போதிலும் ஒரே சீராக முடிவுபரியந்தம் தாழ்மையாகத் தன்னைக் காத்துக்கொண்டார். கிருபையின் சத்தியத்தின் போதனையான கர்த்தருக்கே மகிமை என்றும், தான் ஒன்றுமில்லை என்றும் எப்பொழுதும் உணர்ந்திருந்தார். கிருபையினால் மாத்திரமே தானும் தன்னுடைய ஊழியமும் நிலைத்திருக்கிறது என்ற சிந்தையை எப்பொழுதும் கொண்டிருந்தார். தன்னுடைய ஒவ்வொரு பிரசங்கத்திலும் எளிமையாய், இரட்சிப்பின் வழியைத் தெளிவாய் அவர் சொல்லாமல் இருந்ததில்லை அவருடைய பிரசங்கம் எல்லோரும் விளங்கிக் கொள்ளும்படியாக மிகத்தெளிவாக, எளிமையாக வேதத்தின் அடிப்படையில் போதிக்கப்பட்டது.

ஸ்பர்ஜன் ஒருமுறை மெட்ரோபாலிட்டன் டேபர்னேகில் ஆலயத்தில் பிரசங்கிக்கிற வேளையில் ஒரு குழந்தை அதிகம் அழுதுகொண்டிருந்த பொழுது ஸ்பர்ஜன் கோபப்படாமல் அழும் அந்த குழந்தை, இளம் வயதிலேயே இரட்சிக்கப்பட வேண்டும் என்று ஜெபித்தார். பிற்காலத்தில் அக்குழந்தை இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய ஊழியக்காரனானான். பிறகு அவர் ஸ்பர்ஜனை ஒரு நாள் சந்தித்து தானே அந்த குழந்தை என்று சொல்லி தான் இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய ஊழியக்காரனாயிருக்கிறேன் என்று சொன்ன வேளையில், ஸ்பர்ஜன் சரியாக அதை நினைவு கூர்ந்து, **‘ஆம், அது 1852 ஆம் ஆண்டு என்றும் இன்னொரு குழந்தைக்காகவும் நான் அவ்விதம் ஜெபித்திருக்கிறேன், அவனையும் கண்டுபிடி’** என்று சொன்னார். தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கிறார் என்பதற்கு உதாரணமாக இந்த நிகழ்ச்சியை ஒரு பிரசங்கத்தில் உபயோகப்படுத்தினார்.

Reformed Baptist Church

ஸ்பர்ஜன் தன்னுடைய பிரசகங்களில் எளிய உதாரணங்கள் கையாளுவதுண்டு. ஸ்பர்ஜன் அதிகமாக வண்டிகள் செல்லும் சாலைகளின் குறுக்கே செல்லுவதற்கு பயப்படுவதுண்டு. லண்டன் நகரத்தில் அவ்விதமாக நின்று கொண்டிருந்த பொழுது, கண்கள் தெரியாத ஒருவர் ஸ்பர்ஜனை நோக்கி பாதையை கடந்துச் செல்ல தனக்கு உதவி செய்யும்படி கேட்டார். அப்பொழுது ஸ்பர்ஜன் தானும் கடக்க பயந்து கொண்டு நிற்கிறேன் என்று சொன்ன பொழுது அந்த மனிதன் ஸ்பர்ஜனை நோக்கி 'உனக்கு பார்க்க முடியுமல்லவா ஆகவே நான் உன்னை முழுமையாக நம்புகிறேன்' என்று சொன்னார். தன் பேரில் இவ்வளவு பெரிதான நம்பிக்கையை வைத்திருப்பாரானால் அந்த நம்பிக்கையை ஏமாற்றமடையச் செய்யக்கூடாது என்று தைரியம் கொண்டு அந்த பார்வையற்ற மனிதனோடு பாதையை கடந்து சென்று உதவினார். இந்த நிகழ்ச்சியை மையமாக வைத்து **'தேவனில் நாம் வைக்கும் நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாமல் அவர் தம்முடைய வாக்குத்தத்தங்களை நம்மில் இரட்டிப்பாய் நிறைவேற்றும் படியாக செய்யும்'** என்று சொன்னார்.

இங்கிலாந்து தேசத்தில் சீர்திருத்தக்(Reformation) காலங்களில் தூய்மைவாதிகள் (Puritans) என்பவர்கள் எழும்பி வேத சத்தியத்தின் அடிப்படையில் சபைகள் காணப்பட வேண்டும் என்று செயல்பட்டார்கள். அவர்கள் போதனையின் மையக்கருத்து **'வேதம் அதிகாரமுள்ளது, வேதம் போதுமானது, தேவனுடைய வார்த்தை ஒருக்காலும் மாறாதது, நித்தியமானது'** என்பதே. தூய்மைவாதிகளின் வாழ்க்கை முறையும் வேதத்தையே சார்ந்திருந்தது. ஸ்பர்ஜன் தூய்மைவாதிகளால் எழுதப்பட்டதை அதிகம் வாசித்தும், சத்தியத்தில் ஆழமாய் பற்றுக்கொண்டவருமாய் இருந்தார். ஸ்பர்ஜன் இந்த உலகத்தில் வாழ்ந்த கடைசி தூய்மைவாதி என்று அழைக்கப்படுவதுண்டு.

ஸ்பர்ஜன் தன் வாழ்க்கையில் எப்பொழுதும் ஜெப சிந்தையோடு வாழ்ந்தவர். ஒரு புத்தகத்தை படிக்கும் படியாக திறக்கும் பொழுதும் ஜெபித்தே ஆரம்பிப்பார். அதை வாசித்து முடித்த பின்பும் ஜெபித்தே முடிப்பார். அவருடைய நெருக்கமான நண்பர்களிடத்தில் ஒருமுறை **'நான் செய்கின்ற ஒவ்வொன்றையும் ஜெபிக்காமல் செய்ய விரும்பவில்லை'** என்று சொன்னார். அவர் ஒரு கடிதம் எழுவதாக இருந்தாலும் அதில் தேவனுடைய வழிநடத்தலுக்காக ஜெபிக்காமல் எழுதுவது கிடையாது.

Reformed Baptist Church

ஆர்ச் ப்ரௌன் என்பவர் தான் ஸ்பர்ஜனோடு அவ்விதம் இரயிலில் பிரயாணம் செய்தபொழுது அவர்கள் முழங்காலிட்டு ஜெபித்ததைச் சொல்லியிருக்கிறார். டாக்டர் வே லேண்ட் என்பவர் ஒருமுறை லண்டனுக்கு வெளிய ஸ்பர்ஜனோடு ஒரு காட்டு வழியாகப் போய்க்கொண்டிருந்த பொழுது, விழுந்து கிடந்த இந்த மரத்திற்கு அருகில் ஸ்பர்ஜன் 'நாம் சேர்ந்து ஜெபிப்போம்' என்று சொல்லி முழங்கால் படியிட்டு ஜெபித்த ஜெபம் எவ்வளவு உன்னதமானதாக இருந்தது என்பதை சொல்லுகிறார். டாக்டர் கைபர் என்பவரும் கூட இவ்விதமான ஒரு சாட்சியைச் சொல்லுகிறார். ஸ்பர்ஜனோடு சர்ரே என்ற பகுதியில் ஒரு காட்டின் வழியாய் போய்கொண்டிருந்த பொழுது இருவரும் சந்தோஷமாய் சிரித்தவேளையில் **'கர்த்தர் இவ்வளவு மகிழ்ச்சியான சிரிப்பைக் கொடுத்ததிற்காக நன்றி சொல்லுவோம் என்று ஜெபிக்க ஆரம்பித்துவிட்டார்'**. ஜெபம், அவர் விடும் மூச்சு போல தொடர்ச்சியான ஒன்றாக காணப்பட்டது. ஒருமுறை ரீஜண்ட் பார்க் என்ற இடத்திற்கு அருகாமையில் ஒரு நண்பரோடு உணவு அருந்திகொண்டிருந்த போது அடுத்த நாள் காலை அனாதை விடுதிக் கட்டுபவருக்கு 1000 பவுண்டுகள் கொடுக்கப்பட வேண்டும் என்று நினைவுபடுத்தப்பட்டது. அப்பொழுது ஸ்பர்ஜன் அதைக் குறித்து தேவனிடத்தில் ஜெபித்துவிட்டேன். தேவன் நிச்சயம் அதைத் தருவார் என்று விசுவாசிக்கிறேன் என்று சொன்னார். அந்த நேரத்திலேயே அவருக்கு வந்த ஒரு டெலிகிராம் திறந்து வாசிக்கப்பட்ட பொழுது அது 'டேபர்னேகில் ஆலயத்திற்கு ஒருவர் வந்து ஊழியத்திற்கென்று 1000 பவுண்டுகள் கொடுத்திருக்கிறார்' என்ற செய்தி அதில் இருந்தது. ஸ்பர்ஜன் ஜெபத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தவர். நடைமுறை வாழ்க்கையில் அதின் உண்மைத்தன்மையை அதிகம் ருசித்தவர். ஆயிரக்கணக்கான மக்கள் அவர் மூலம் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு ஆசீர்வதிக்கப்பட்டாலும், தான் வெறுமையான பாத்திரம் என்பதாகவே அவர் எப்போதும் தன்னைக் குறித்து எண்ணிக்கொண்டிருந்தார்.

ஜான் கால்வின், ஜோனதான் எட்வர்ஸ்ட், ஜார்ஜ் விட்பீல்ட், வில்லியம் டின்டேல் போன்ற பரிசுத்தவான்களை போன்றே தன்னுடைய 57 ஆம் வயதில் மரித்தார். ஆனாலும் இளம் வயதிலேயே தன்னுடைய ஊழியத்தை ஆரம்பித்ததினிமித்தம் நிறைவாய்க்

Reformed Baptist Church

கர்த்தருடைய பணியை செய்தார். அவர் **'கர்த்தரின் கிருபையே ஒரு மனிதனை பரிசுத்தவனாக்கும்'** என்று சொல்லுவார்.

ஸ்பர்ஜன் எழுதிய காலை மாலை தியானம் இன்றும் உலகமெங்கும் ஆசீர்வாதமாக இருக்கிறது. 'தாவீதின் பொக்கிஷங்கள்' என்ற சங்கீத தியானப் புத்தகம் அநேகருக்கு ஆசீர்வாதமாயிருந்து வந்திருக்கிறது. 'எல்லாம் கிருபையே' என்ற புத்தகம் அநேகரை இரட்சகரண்டை வழி நடத்தியிருக்கிறது. ஸ்பர்ஜனின் போதக கல்லூரி மாணவர்களுக்கு அளித்த உரைகள் தொகுக்கப்பட்டு 'ஸ்பஜனின் அறிவுரைகள்' என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. இதின் மூலம் இன்றும் அநேகர் பயன்பெறுகிறார்கள். ஸ்பர்ஜனின் விசுவாச தின தியானம்(Faith Cheque Book) என்ற புத்தகம் தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் கொண்ட தியானப் புத்தகம் இன்றும் பெரிதான ஆசீர்வாதமுள்ளதாக இருக்கிறது.

விவசாயி ஜான் பேச்சு(John Ploughman's Talk) என்ற புத்தகம் அநேகருக்கு பிரயோஜனமுள்ளதாக இருக்கிறது. இவ்விதமாக ஸ்பர்ஜன் எழுதிய மற்ற அநேக புத்தகங்களும் இன்றும் பலருக்கு ஆசீர்வாதமாய் இருந்து வருகிறது.

Reformed Baptist Church

## 15.விசுவாசத்திற்கான போராட்டம்

அந்நாட்களில் மெட்ரோபாலிட்டன் டேபர்னேகில் சபை இங்கிலாந்து பாப்டிஸ்ட் யூனியனில் மெம்பராக இருந்தது சபை ஐக்கியங்களுக்கும் மிஷினரி ஒத்துழைப்புகளுக்கும் மற்றும் சபை செய்திகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் இது பிரயோஜனமாக இருந்தது. இத யூனியனில் அநேக பாப்டிஸ்ட் சபைகள் மெம்பர்களாக இருந்தன. ஸ்பர்ஜன் ஒரு பாப்டிஸ்ட் போதகராயிருந்ததினாலும், அவர் ஊழியத்தினிமித்தம் இங்கிலாந்து தேசத்தில் பாப்டிஸ்ட் சபைகளுக்கு ஒரு நல்ல மதிபிருந்தது. அவரினிமித்தம் பாப்திஸ்து சபைகள் யூனியனின் வருடாந்திர கூட்டங்களுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகவும், ஒரு நல்ல வலுவான நிலையிலுமிருந்தது. இவர்களைப்பார்த்து அநேக சபைகளிலும் நல்ல உற்சாகமும் வளர்ச்சியும் காணப்பட்டது. 1859 ஆம் ஆண்டு உருவான டார்வின் கொள்கையான பரிமாண கொள்கை (இது குரங்கிலிருந்து மனிதன் வந்தவன் என்றும் பூமியும் மற்ற கோளங்களும் உருவாக அநேக கோடிக்கணக்கான ஆண்டுகள் ஆயின) வேதத்தின் அடிப்படை சத்தியத்திற்கு முற்றிலும் எதிரானது. தேவனின் சிருஷ்டிப்பையும், வேதத்தையும் அது முற்றிலும் நிராகரிக்கிறது. ஆனால் பாப்டிஸ்ட் யூனியனிலிருந்த சில போதகர்கள் மறைமுகமாக அதை நம்புவதாகவும், சில போதகர்கள் வெளியரங்கமாக அதைப் போதிக்கிறவர்களாக மாறிவருவதையும் ஸ்பர்ஜன் கண்டார். வேதத்தில் அங்குமிங்கும் சில குறைபாடுகள் இருக்கின்றன என்றும் சொல்லுகிற சில போதகர்கள் பாப்டிஸ்ட் யூனியனில் காணப்பட்டார்கள். வேதத்தின் முழு அதிகாரத்தையும், குற்றமில்லாமையும், போதுமான தன்மையையும் இவர்கள் மறைமுகமாக நிராகரிக்கிறவர்களாகவும் காணப்பட்டார்கள். இவ்விதமான போதனைகள் அநேக வேதாகம கல்லூரிகளிலும் அந்நாட்களில் நுழைந்தன. அநேக பெரிய கிறிஸ்தவ தலைவர்களும் அதை அங்கீகரிக்க ஆரம்பித்தார்கள். “புதிய வேத சாஸ்திரம்” என்ற பெயரில் வெகு வேகமாக கிறிஸ்தவர்கள் மத்தியிலும், ஊழியத்திலும் இது பரவ ஆரம்பித்தது. ஸ்பர்ஜன் சத்தியத்திற்காக நிற்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தவராய் பாப்டிஸ்ட் யூனியன் தலைவரிடம், பாப்டிஸ்ட் யூனியன் அடிப்படை சத்திய விசுவாச

Reformed Baptist Church

அறிக்கையை கொண்டிருக்க வேண்டும் என்றும், அவ்விதம் அந்த அறிக்கையை அங்கிகரித்தவர்கள் மாத்திரமே பாப்டிஸ்ட் யூனியனில் இருக்க தகுதியானவர்கள் என்றும், வேதத்தின் அடிப்படையான அறிக்கை உருவாக்கப்படவும், வெளியிடப்படவும் வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இதை மறுபடியும் மறுபடியுமாக ஸ்பர்ஜன் வற்புறுத்தியும் பாப்டிஸ்ட் யூனியன் தலைவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்விதம் செய்வோமானால் அதை விரும்பாத முக்கியமானன சில போதகர்கள் இருப்பார்களென்றும், பாப்டிஸ்ட் யூனியன் வலுவிழந்துவிடுமென்றும் அதை எற்கமறுத்தார்கள். ஆகவே ஸ்பர்ஜன் தன்னையும், தன்சபையையும் இந்த யூனியனிலிருந்து விலக்கிக்கொண்டார்.

இவ்விதமான காலங்களில் சத்தியத்திற்கு சாட்சி பகரும்படியாக Sword & Trowel பத்திரிக்கையில் அநேக கட்டுரைகளை எழுதினார். அதின் மூலம் புதிய வேத சாஸ்திரகொள்கையை பின்பற்றுகிறவர்களிடத்திலிருந்து எதிர்ப்புகள் கிளம்பின. ஸ்பர்ஜனின் இவ்விதமான நிலையை சில போதகர்கள் ஆதரித்தாலும், அநேகர் ஸ்பர்ஜன் அதை கண்டும் காணாமலிருப்பது நலம் என்று எண்ணினார்கள். இந்த சூழ்நிலையில் ஸ்பர்ஜன் தனிமைபடுத்தப்பட்டவராயும், தனியாகப் போரடுகிறவராயும் காணப்பட்டார். ஏற்கனவே ஸ்பர்ஜன் தன் சரீர வியாதிகளால் பாதிக்கப்பட்ட நிலையில், அநேகருடைய ஏச்சுப் பேசுக்களாலும் ஸ்பர்ஜனுடைய மனம் வெகுவாக பாதிக்கப்பட்டது. இதனிமித்தம் ஸ்பர்ஜன் அநேக நல்ல நண்பர்களை இழக்க வேண்டியதாயிற்று. அனாதை விடுதிகளுக்கும் முதியோர் இல்லங்களுக்கும் பெரும் தொகையைக் கொடுத்து உதவி செய்து வந்த சிலர் இனிமேல் உதவி செய்ய மாட்டேன் என்று எழுதி விட்டார்கள். ஆனாலும் ஸ்பர்ஜன் சத்தியத்தின் அளவை விட்டு ஒருக்காலும் பின்வாங்கவேயில்லை. தேவன் உதவி செய்யும்படியாக அநேக புதிய மக்களை எழுப்பினார். இந்த சூழ்நிலையில் தேவன் ஸ்பர்ஜனை ஒருக்காலும் கைவிடவில்லை. “**ஸ்பர்ஜன் இதை ‘சத்தியத்தின் சாவு’ என்று எழுதியுள்ளார். அதனுடைய விளைவு படிப்படியாக இருக்குமென்றும் எச்சரித்தார்.**” அதே விதமாக பிற்காலங்களில் இவ்விதமாக சபைகள் விசுவாச அளவுகளில் குறைந்தன. ஆலயத்திற்கு வரும்படியான மக்களின் எண்ணிக்கையும் குறைந்து போயிற்று. ஸ்பர்ஜன்

இந்தக் காலங்களில் அமைதியாக இருக்க விரும்பினாலும், பாப்டிஸ்ட் யூனியன் தலைவர்கள் அவரை மறுபடியும் மறுபடியுமாக வந்து அதில் சேரும்படி தொந்தரவு கொடுத்தார்கள். அவர் சத்தியத்திற்காக நின்றதை திரித்துப் பேசி தூற்றிக் கொண்டிருந்தவர்கள் அநேகர். இந்த நாட்களில் ஸ்பர்ஜனுடைய மனநிலை அதிகமாய் பாதிக்கப்பட்டது மாத்திரமல்ல, அவருடைய மனைவியும் அதிக வியாதிப்பட்டு படுத்த படுக்கையாய் இருந்தார்கள். அவரும் சரீரத்தில் அதிகமாய் பாதிக்கப்பட்டவராய் படுத்த படுக்கையானார். அவ்வேளையில் அவர் அதிகமாய் நேசித்த தாயார் இறந்து போனார். ஸ்பர்ஜன் கை கால்கள் வீங்கி நடக்க முடியாதவராய் தன் தாயின் அடக்க ஆராதனையில் பங்கு கொள்ள முடியாதது அவருக்கு இன்னும் அதிக வேதனையளித்தது. அவருடைய போதகர் கல்லூரியில் படித்த சிலரும் இந்தகாரியத்தில் எதிராய் திரும்பினது அவருக்கு இன்னும் அதிகமாக மன வேதனையை உண்டாக்கிற்று. அவர்களில் சிலர் ஸ்பர்ஜனை அவதூறாக பேசின காரியம் அவருள்ளத்தை அதிகம் வேதனையுறச் செய்தது. மேலும் ஸ்பர்ஜன் சிறுநீரக வியாதியால் பாதிக்கப்பட்டு வெகு சீக்கரமாய் களைப்படைந்து போனார்.

ஸ்பர்ஜன் இந்தநாட்களில் நான் எந்த மனிதனுக்கும் எதிராளி அல்ல என்பதையும் தேவனுடைய வார்த்தைக்கு எதிரான போதனைக்குத் தான் எப்பொழுதும் எதிராளி என்று போதித்தும், அநேகர் அதை விளங்கிக்கொள்ளாமல் பேசினார்கள். ஸ்பர்ஜனின் சபை ஊழியத்தை தேவன் எப்போதும் போல அபரிமிதமாய் ஆசீர்வதித்தார். ஒவ்வொரு மாதமும் சபையில் அநேகர் விசுவாசிகளானார்கள். அநேக இடங்களில் ஸ்பர்ஜன் தன்னுடைய பிரசகங்களில் மற்றவர்கள் குறைகூறுவதைக் குறித்து எதிர்த்து பேசவில்லை என்றாலும் சத்தியத்திற்காக உறுதுணையாக நிற்க வேண்டியதையும், அச்சத்தியத்திற்கு எதிரான போதனையை நிராகரிக்க வேண்டுமென்றும் எடுத்துச் சொல்லுவதில் தவறவில்லை. 1888 ஆம் ஆண்டு ஜுலை மாதம் சரீரம் மிகவும் வியாதிப்பட்டு ஒரு பேனாவை கூட கையில் பிடித்து எழுதக் கூடாத நிலையில் மிகவும் பெலவீனப்பட்டார். ஆனால் இரண்டு வாரங்களுக்கு பிறகு சிறிது தேறி மறுபடியும் ஊழியத்தைச் செய்து வந்தார். ஆனால் அந்த ஆண்டு நவம்பர் மாதம் படுத்த படுக்கையானார். டிசம்பர் மாதம்

Reformed Baptist Church

மென்டோன் என்ற இடத்திற்கு சென்று தங்கியிருந்தபோது மாடிப்படியில் விழுந்து தன்னுடைய 2 பற்களையும் இழந்தார். அதினிமித்தம் நான்கு வாரங்கள் படுத்த படுக்கையாகி மறுபடியுமாக திரும்பி வந்து மெட்ரோபாலிட்டன் டேபர்னேகில் பிரசங்கித்து வந்தார். போதகர் ஆண்டு விழாவிலும் பிரசங்கித்தார். 1890 ஆம் ஆண்டு ஸ்பர்ஜன் பிப்ரவரி மாதத்தில் இங்கிலாந்து திரும்பினார். சபையின் ஆண்டு கூட்டத்தில் கலந்து கொண்டார். அப்பொழுது சபையின் அங்கத்தினரின் எண்ணிக்கை 5,328. மேலும் 127 சபை ஊழியருமிருந்தார்கள். இவர்கள் லண்டனில் மட்டும் 23 மிஷன் தளங்கள் இருந்தன. 27 ஞாயிறு பள்ளிகளில் 600 ஆசிரியர்களும், 8000 மாணவ, மாணவிகளும் இருந்தனர். அந்த ஆண்டு போதகர் கல்லூரி ஆண்டு விழாவில் ஸ்பர்ஜன் பேசிய போது திடீரென்று நரம்பு தளர்ச்சியினால் பாதிக்கப்பட்டு நடுக்கத்தோடு பேச முடியாத நிலை ஏற்பட்டது. ஆனாலும் திரும்பவுமாக பெலன் பெற்று டேபர்னேகிலும் மற்ற அநேக சபைகளிலும் போதித்துவந்தார். 1891 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7 ஆம் தேதி கடைசி முறையாக டேபர்னேகில் பிரசங்க பீடத்தில் நின்று பிரசங்கித்தார். ஏறக்குறைய 2 கோடி மக்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்த அந்த சத்தம் மறுபடியும் அந்த இடத்திலிருந்து கேட்கவில்லை. அதிலிருந்து மூன்று மாதங்கள் முற்றிலும் படுத்த படுக்கையானார். மரணத்திற்கு நெருக்கமாய் காணப்பட்டார். உலகத்தில் பல சபைகளின் மக்கள் அவருக்காக ஜெபிக்க ஆரம்பித்தனர். அவர் வியாதிப்பட்ட வருத்த செய்தியை அறிந்து இங்கிலாந்து நாட்டின் இளவரசர் அன்றைய பிரதம மந்திரி, பாராளுமன்றத்தின் அங்கத்தினர்கள் மற்றும் பல மக்களிடமிருந்து வருத்த செய்திகள் வந்து குவிந்தன. பத்திரிகைகள் அவர் உடல் நிலையை குறித்து ஒவ்வொரு நாளும் செய்திகளை வெளியிட்டார்கள். குளிர்காலம் நெருங்கி வந்ததால் அக்டோபர் 26 ஆம் தேதி 1891 ஆம் ஆண்டு மென்டோனில் இருந்த விருந்தினர் விடுதிக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். அவரோடு கூட அவரது சகோதரனும், அவருடைய காரியதரிசியும், ஸ்பர்ஜனுடைய மனைவியும் சென்றார்கள். இதுவே ஸ்பர்ஜனின் மனைவி ஸ்பர்ஜனுடன் மென்டோன் என்ற இடத்திற்கு செல்லும் முதல் தடவையாய் இருந்தது. அது ஸ்பர்ஜனுக்கும் அவரது மனைவிக்கும் மிகவும் சந்தோஷமாய் இருந்தது. அங்கு சென்று அந்த வெப்ப சூழ்நிலையில் அவர் உடலில் முன்னேற்றம் காணப்பட்டது. தான் எழுதி வந்த மத்தேயு

Reformed Baptist Church

சுவிசேஷத்தின் வியாக்கியானங்களை அந்த சமயத்தில் எழுதி முடிக்க வாஞ்சித்தார். 1892 ஆம் ஆண்டு ஜனவரி 1 ம் தேதி மாலையில் தன்னோடு கூட வந்தவர்களுக்கு அவர் தேவனுடைய செய்தியைப் பிரசங்கித்து வந்தார். அதைத் தொடர்ந்து வந்த அடுத்த ஞாயிற்றுக்கிழமையிலும் அவர் பிரசங்கிக்க விரும்ப முயற்சித்தார். ஜனவரி 17 ஆம் தேதி அவர் நடத்திய சிறிய ஆராதனையை இந்த பாட்டோடு முடிக்கும் படியாகப் பாடினர்.

**“காலத்தின் மணித்துளிகள் மறைந்திருக்கின்றன**
**பரலோகத்தின் காலைப்பொழுது திறக்கின்றன**
**கோடையின் காலைக்காக நான் எண்ணினேன்**
**அனால் பரலோகத்தின் மகிமைகரமான**
**காலைப் பொழுது எனக்கு திறந்தது**

**நடுராத்திரியின் ராக்கடந்து**
**விடிதல் நெருக்கமாயிருக்கின்றது**
**இமானுவேலின் தேசத்தில்**
**மகிமை மகிமையே வாசமாயிருக்கிறது**




**கிறிஸ்துவே ஜீவா ஊற்று**
**அன்பின் ஆழ்கிணறு அவர்,**
**இப்பூமியின் நீரூற்றை அருந்தினேன்**
**ஆனால் மேலோகத்தில் அதிகம் நான் அருந்துவேன்**

**அங்கு கடளவு நிறைவிருக்கும்**
**அவரிரக்கம் பரந்திருக்கும்**
**இமானுவேலின் தேசத்தில்**
**மகிமை என்றும் என்றுமே.”**

# 16. ஸ்பர்ஜனின் கடைசிவேளை

இதற்கடுத்த நாட்களில் அவர் தன்னுடைய சுய நினைவை இழந்து காணப்பட்டார். ஜனவரி 28 ஆம் தேதி முற்றிலும் நினைவிழந்தார். ஸ்பர்ஜனின் கடைசிவேளை வந்தது என்று அறிந்து ஸ்பர்ஜனோடு சென்ற 5 பேரும் படுக்கையைச்சுற்றி முழங்காலிடார்கள். ஸ்பர்ஜனின் மனைவி தேவன் கொடுத்த விலையேறப்பெற்ற கணவருக்காகவும், இத்தனை ஆண்டுகளாக அவரோடு வாழ்ந்த வாழ்கைக்காகவும் சொல்லிமுடியாத கர்த்தருக்குள்ளான மகிழ்ச்சிக்காகவும், கர்த்தரை துதித்து தனது கணவனை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்தது உள்ளத்தை அசைக்ககூடியதாக இருந்தது. ஜனவரி 31 ஆம் தேதி 1892ல் ஞாயிறு மாலை கிறிஸ்துவோடு என்றென்றுமிருக்கும்படி ஸ்பர்ஜன் இவ்வுலகத்தைக் கடந்து சென்றார். உடனடியாக ஸ்பர்ஜனின் காரியதரிசி ஹெரால்டு 'நமது மிகுந்த அன்புக்குரிய போதகர் ஞாயிறு இரவு 11.50 மணிக்கு பரலோகத்தில் பிரவேசித்து விட்டார்' என்ற தந்தியை டேபர்னேகில் சபைக்கு அனுப்பினார். இது சபை மக்களுக்கு பெரும் அதிர்ச்சியாகவே இருந்தது.



THE FUNERAL CORTÈGE ENTERING NORWOOD CEMETERY.

அடுத்த நாள் லண்டன் பத்திரிக்கை எல்லாவற்றிலும் ஸ்பர்ஜனின் மரணமே முக்கிய தலைப்புச்செய்தியாக இருந்தது. மற்ற அநேக நாடுகளின் முக்கிய பத்திரிக்கைகளிலும் இந்த செய்தி வெளிவந்தன. ஸ்பர்ஜனின் சரீரம் ஒலிவ மரப் பலகைகளினால் செய்யப்பட்ட சவப் பெட்டியில் வைக்கப்பட்டு மெணன்டோனிலிருந்து பிரிஸ்பிடேரியன் ஆலயத்தில் வைக்கப்பட்டது. (வியாழன்,பிப்ரவரி 4 ஆம் தேதி ) மேடையில் நின்றார்கள். ஆனாலும் அநேகம் பிள்ளைகள் பாடமுடியாமல் தங்கள் சொந்த தகப்பனை இழந்தது போல அழுதுகொண்டு நின்றார்கள். சவ ஊர்வலம் 2 மைல் தூரமாயிருந்தது. மேலும் அங்கிருந்த கல்லறைத் தோட்டம் இருக்கும் வரை உள்ள தூரமான ஆறு மைல் தூரத்திலும், வீதி ஓரங்களில் பார்க்கும்படியாக திரளான மக்கள் கூடி நின்று மரியாதை செலுத்தினார்கள். நார்வுட் என்ற இடத்தில் இருந்த கல்லறை தோட்டத்தில் ஸ்பர்ஜன் அடக்கம் பண்ணப்பட்டார். கல்லறை தோட்டத்தின் நுழைவாயிலை கடந்து செல்லுவதற்கு மாத்திரம் 25 நிமிடங்கள் ஆயிற்று. 11 ஆண்டுகள் கழித்து ஸ்பர்ஜனின் மனைவியும் அதின் அருகே அடக்கம் பண்ணப்பட்டார்கள்.



## 17 .ஸ்பர்ஜனின் பிரசங்கங்கள்

பிரசங்கிகளின் இளவரசன் (Prince Of Preachers) என்று அழைக்கப்பட்ட ஸ்பர்ஜன் ஒவ்வொரு வாரமும் செய்த பிரசங்கங்கள், அதைக் கேட்ட அநேகமாயிரம் மக்களுக்குப் பெருத்த ஆசீர்வாதத்தை அளித்தது. அதின் மூலம் அநேக ஆயிரக்கணக்கான மக்கள் இரட்சிக்கபட்டார்கள். இவ்விதமாக தேவனால் வல்லமையாக உபயோகப்படுத்தப்பட்ட ஸ்பர்ஜனின் பிரசங்கங்கள், எழுத்துக்கள் வடிவில் புத்தகமாக ஒவ்வொரு வாரமும் 1855 ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்டன. ஒவ்வொரு வாரமும் ஏறக்குறைய 10 லட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு, லண்டனிலும் இங்கிலாந்து தேசத்தில் ஒவ்வொரு பகுதிக்கும் மற்ற நாடுகளுக்கும் அனுப்பப் பட்டன.

ஸ்பர்ஜன் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை பிரசங்கிக்கும்படியான செய்தி அச்சடிக்கப்பட்டு அந்த வியாழக்கிழமையன்று விற்பனைக்கு வெளிவந்தது. அநேகம் ஆயிரக்கணக்கான மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்து அதைப்பெற்று வாசித்தார்கள். ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் அந்த ஆண்டு முழுவதுமாய் வெளியிடப்பட்ட செய்திகள் முழுபுத்தகமாக உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டன. அவ்விதம் மொத்தம் 3561 பிரசங்க செய்திகள் அடங்கிய 63 புத்தகங்கள் வெளியிடப்பட்டன. ஸ்பர்ஜன் இறந்த பிறகும் 25 ஆண்டுகள் இவ்விதம் ஒவ்வொரு வாரமும் வெளியிடப்பட்டன. ஸ்பர்ஜன் பொதுவாக வாரத்திற்கு மூன்று பிரசங்கங்கள் செய்வதுண்டு. ஆகவே ஏற்கனவே வெளியிடப்பட்ட செய்திகள் போக 25 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு வாரமும் வெளியிடுவதற்கு தேவையான செய்திகள் இருந்தன.

ஸ்பர்ஜனின் செய்திகள் வேதாகமத்தை மையமாகவும் கிருபையின் சத்தியத்தின் அடிப்படையில் நடைமுறை கிறிஸ்தவ வாழ்க்கைக்கு உகந்ததாகவும் காணப்பட்டன. ஆகவே அவர் மரித்த பின்பும் அவருடைய செய்திகள் உலகமெங்கும் வரவேற்கப்பட்டன. ஒரு விசுவாசி கிறிஸ்தவ வாழ்க்கையில் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆவிக்குரிய சத்தியங்களும், ஒரு பாவி மனந்திரும்பி கிறிஸ்துவுக்குள் வருவதற்கு அருமையாய்ப் போதிக்கப்பட்ட தேவனுடைய செய்திகளும் இதில் அடங்கியிருந்தன. வேதாகமத்தின்

Reformed Baptist Church


ஒவ்வொரு புத்தகத்திலிருந்தும் அவர் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்தார். ஒவ்வொரு வாரமும் அவருடைய செய்திகள் 10 லட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டதுமல்லாமல் அநேக பிற மொழிகளிலும் மொழிப்பெயர்க்கபட்டு அநேகம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டன. ஒவ்வொரு சத்தியத்தையும் அழகாக தெளிவுபடுத்தும் விதமாக எளிய முறையில் விளக்கப்படுத்தியும், சரியான, அருமையான ஆவிக்குரிய உதாரணங்களைக் கையாண்டும் அவர் பிரசங்கித்தார். அவருடைய செய்தியை வாசிக்கிற ஒவ்வொரு பிரசங்கியும், பிரசங்கிகும்படியான அநேக நேர்த்தியான தேவனுடைய சத்தியங்களையும் சத்தியத்தின் தெளிவையும் பெறாமல் இருக்கமுடியாது.

அவருடைய செய்திகளைக் கருத்தாய் வாசிக்கிற ஒவ்வொரு பிரசங்கியும் அநேகரை ஆசீர்வதிக்ககூடிய பிரசங்கிகளாக மாறாமல் இருக்க முடியாது. இவ்விதமாக அநேக போதகர்கள் அவருடைய பிரசகங்களைக் கையாண்டதின் மூலம் அநேகர் இரட்சிக்கப்பட்டதுமுண்டு.

**‘அவர்களை உள்ளே வரும்படி கட்டாயப்படுத்துங்கள்’** என்ற  தலைப்பில் அவர் செய்த பிரசங்கத்தின் மூலமாக நூற்றுக்கணக்கான மக்கள் ரட்சிக்கபட்டார்கள். **‘இயேசுவை நோக்கிப்பார்’** என்ற தலைப்பில் செய்த பிரசங்கமும், **‘வெட்கத்திற்குட்பட்டவர்’** என்ற தலைப்பில் செய்யப்பட்ட பிரசங்கமும் அநேகருக்கு பெருத்த ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தன. **‘சிமியோன்’** என்ற தலைப்பில் செய்யப்பட்ட பிரசங்கம் ஒரு விசேஷமான புத்தகமாக வெளியிடப்பட்ட போது அநேகம் பிரதிகள் விற்கப்பட்டன. **‘இரட்சிப்பின் தொடர்புகள்’** என்ற தலைப்பில் செய்யப்பட்ட பிரசங்கமும் **‘அகாலப் பிறவி’** என்ற தலைப்பில் செய்யப்பட்ட பிரசங்கமும் அநேக ஆயிரக்கணக்கான மக்களுக்குப் பெருத்த ஆசிர்வாதத்தைக் கொடுத்தன. ஸ்பர்ஜன் மிகவும் சோர்வான காலத்திற்குள்ளாகக் கடந்து சென்ற பொழுது **‘என் தேவனே! என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்’** என்ற தலைப்பில் செய்த பிரசங்கத்தை ஒரு மனிதன் கேட்டு தன்னை முழுமையாக புரிந்து கொள்ளக்கூடிய ஒரு தேவன் உண்டு என்பதை அறிந்து கிறிஸ்துவுக்குள் வந்தார்.

Reformed Baptist Church

அமெரிக்காவில் உலகப்புகழ்பெற்ற பிரசங்கியான டி.எல்.மூடி தன் வாழ்க்கையில் ஸ்பர்ஜனின் பிரசங்கங்களால் மிகவும் அதிகம் பிரயோஜனப்படுவதாக அடிக்கடி சொல்வதுண்டு. ஸ்காட்லாந்தில் **'நரகம், மோட்சம்'** என்ற தலைப்பில் ஸ்பர்ஜன் செய்த பிரசங்கம் அநேகரை இரட்சிப்பிற்குள் வழி நடத்திற்று. ஆப்பிரிக்காவில் தேவனுக்கென்று உழைத்த உன்னதமான மிஷினெரியான டேவிட் லிவிங்ஸ்டன் **'விபத்துகள், தண்டனையல்ல'** என்ற தலைப்பில் ஸ்பர்ஜன் செய்த பிரசங்கத்தைப் படித்துவிட்டு 'மிகவும் நன்றாக இருக்கிறது' என்று எழுதி தன்னுடைய கையெழுத்திட்டு அதை ஸ்பர்ஜனுக்கு அனுப்பினார். பிஷப் வெல்டன் என்பவர் ஜெர்மனி தேசத்திற்குப் போன போது அவருடைய பாட்டி அவருக்குக் கொடுத்த ஸ்பர்ஜனின் பிரசங்க புத்தகம் அவருடைய பிற்கால வாழ்க்கைக்கு மிகவும் உறுதுணையாகயிருந்தது.



Reformed Baptist Church



**பிரசங்கிகளின் இளவரசன்**

Reformed Baptist

**சார்லஸ் ஹாடன் ஸ்பர்ஜன்** (31-06-1834 to 31-01-1892) ஒரு எளிய கிராமத்து வாலிபனாக இருந்து தேவனால் வல்லமையாக உபயோகப்படுத்தப்பட்டவர். லண்டன் மாநகரத்தில் மெட்ரோபாலிட்டன் டேபர்னகில் என்ற ஆலயத்தைக் கட்டி அநேக ஆயிரக்கணக்கான மக்களுக்கு தேவனுடைய வார்த்தையை மொத்தம் 40 ஆண்டுகளுக்கு மேலாகப் பிரசங்கித்தவர்.அவருடைய பிரசங்கங்கள் யாவரும் விளங்கிக்கொள்ளும் படி எளிமையாக இருந்தன. அவருடைய பிரசங்கத்தைக் கேட்க மிக எளிய கிராமத்துமக்களும், உயர்ந்த கல்விமான்களும் ஓடோடி வந்தனர். அநேக ஆயிரக்கணக்கான மக்கள் இரட்சிக்கப்பட்டனர். அவர் பிரசங்கித்த செய்திகள் புத்தகவடிவில் ஒவ்வொரு வாரமும் பத்து லட்சம் பிரதிகள் வெளியிடப்பட்டு உலகமெங்கும் அதை வாசித்து மக்கள் பயனடைந்தனர். அவைகள் தேவப்பூர்வமாகவும், நடைமுறைக்கு உகந்தவைகளாகவும் இன்றும் நம்மோடு பேசுகின்றவைகளாகவும் இருக்கின்றன.

**<u>Contact Us:</u>**

**Reformed Baptist Church India**

**Pastor: Dr.A.David Elangovan**

**Mobile: +91 98427 67184**

**Mail: reformedbaptistchurch@gmail.com**

**Our Website:**

www.tamilchristianmessages.com
www.reformedbaptistchurch.in

**Our Facebook page:**

https://www.facebook.com/tamilchristianmessages

**Our Android Mobile app now in play store:**

www.bit.do/dailydevotion

